அபாயத் தென்றல்

1

சொக்கவிட்டுக் கொண்டிருந்தாள் சொர்ணா!

கிளறிக் கொட்டிய கிருஷ்ணா ஸ்வீட்ஸ் பால்கோவா வாய் உடம்பு முழுக்க ஒரு தளதளப்பு... இங்கிலாந்து இளவரசர்கள் ஏறிவரும் குதிரையின் மதர்த்த வால்போல் தலைமுடி! ஆஸ்திரேலிய திராட்சைகளை கண்களாக்கிக் கொண்டுவிட்ட யவ்வனம்... அவளைப் பார்த்து அவள் நின்று கொண்டிருக்கும் பஸ் ஸ்டாப்பே ஜொள்ளு விட்டுக் கொண்டிருந்தது.

சொர்ணாவின் மனசோ பிரசாத்துக்காக தவித்துக் கொண்டிருந்தது.

'மவனே வந்து தொலையேண்டா... இங்கே கண்ணாலேயே ஒருவன் என் ஜாக்கெட் ஊக்கை அவிழ்க்க ஆரம்பித்து விட்டான். கமான் பிரசாத். சீக்கிரம்!'

டிவி'யில் ஓடும் ஸ்க்ரோலிங் வரிகள் போல மனத் திரையில் மேற்படி வாசகங்களும் ஓட ஆரம்பித்திருந்தன.

'நீ வழக்கம் போல பஸ் ஸ்டாப்ல வெயிட் பண்ணு. ஐவில் கம் அண்ட் பிக் அப் யூ'- என்று செல்லில் சொல்லியவனுக்கு என்னாயிற்று....?'

துப்பட்டாவால் முகத்தை ஒத்திக் கொண்டபடி சுற்றி ஒரு பார்வை பார்த்தாள். ஒருவன் கிட்டத்தட்ட நெருப்பில் விழுந்த பிஸ்லேரி பாட்டில் போல மெல்ட்டாகியே விட்டிருந்தான்.

'சுமாரான அழகுதான் பெண்ணுக்கு பலத்த பாதுகாப்பு.

அதிகபட்ச யவ்வனம் ஆபத்துக்கான இன்விட்டேஷன்'

- அடிக்கடி அவள் தோழி உமா ஒரு ஸ்லோகன் போல் சொன்னதெல்லாம் ஞாபகத்திற்கு வர ஆரம்பித்தது.

நடுநடுவே கைக்கடிகாரத்தை வேறு பார்த்துக் கொள்ள ஆரம்பித்தாள்.

''பாரதிராஜா பார்த்தா நிச்சயமா கொத்திக்கிட்டு போயிடுவார்.''

- ஒரு கமென்ட் காதில் விழுந்தது.

''ஆமா... அவருக்கே படம் இல்லியாம். இதுல அவர் எங்க பாக்கறது. சரண் இல்லாட்டி சங்கர் பார்த்தாகூட போதும் தூக்கிட்டு போயிடுவாங்க.''

- இனி வேடிக்கையைத் தொடர்ந்தால் அவர்கள் அவளுக்கு ஒரு ரேட் பேசினாலும் பேசுவார்கள் என்று தோன்றியது. தோளில் தொங்கிக் கொண்டிருந்த வலைப்பையை மறுதோளுக்கு மாற்றிக் கொண்டவள் அவர்கள் எதிரில் அதைத் திறக்க ஆரம்பித்தாள்.

ஸ்ப்ரேயரை எடுத்து அடித்துக் கொள்வாள் என்று அவர்கள் நினைத்தார்களோ என்னவோ அவளது விரல்களையே பார்க்க ஆரம்பித்தார்கள்.

உள்ளிருந்து நியூஸ் ரீல் படப்பெட்டி போல சிறு துவாரங்கள் உள்ள ஒரு தகரப் பெட்டியை வெளியே எடுத்தாள்.

அவர்கள் விழிகளில் விரிவு.

பெட்டியின் மூடியைத் திறந்தாள். உள்ளே ஒரு நல்லபாம்புக் குட்டி.

அவர்களுக்கு விலா எலும்பில் ஊசியும், தொண்டை வழியே அமிலமும் இறங்கின மாதிரி ஆயிற்று.

பாம்பை கையில் பிடித்து வெளியே எடுத்தவள் படம் எடுத்த அதன் தலை பாகத்தை அழகாக வருடியும் கொடுக்க ஆரம்பித்தாள். பின் திரும்பவும் சுருட்டி டப்பாவில் அடக்கி பைக்குள்ளும் வைத்துக் கொண்டாள்.

பஸ் ஸ்டாப்பே வெலவெலத்துப் போய்விட்டிருந்தது. கச்சிதமாக பிரசாத்தும் அவளை உரசிக் கொண்டு தன் காரை நிறுத்தினான். கூலிங்கிளாஸ் கண்களோடு நீல நிற முழுக்கை சட்டை ஸ்டியரிங்கைப் பற்றியிருக்க, தலையை மட்டும் வெளியே நீட்டினான்.

''கெட் இன் சொர்ணா...''

''மண்ணாங்கட்டி.. எவ்வளவு நேரமா காத்துக் கிட்டிருக்கேன் தெரியுமா?''

''சாரிம்மா.. மெட்ராஸ்லல்லாம் பங்க்ச்சுவாலிடிய கீப்அப் பண்ணவே முடியாது. வழியில ஒரு கட்சி ஊர்வலம். டிராஃபிக் ஜாம் ஆயிடிச்சு.''

அவன் சமாதானத்தை ஒப்புக் கொண்டவளாக ஏறி அமர்ந்தாள். ஜொள்ளர்களை ஒரு அக்கினிப் பார்வை பார்த்தாள். பின் வலைப்பையை பின் சீட்டில் வைத்தாள். முகம் ஒப்பனை செய்தது போல சிவந்து விட்டிருந்தது.

''என்ன சொர்ணா கோவமா இருக்கற மாதிரி தெரியுதே?''

''ஆமாம்... இனிமே இப்படி பப்ளிக் ப்ளேஸ்ல எல்லாம் என்னை நிக்கச் சொல்லாதே பிரசாத். தைரியமா வீட்டுக்கே வா. கூட்டிக்கிட்டு போ. நானும் வாரேன்.''

ஓடும் காருக்குள் அவள் தன் தீர்மானங்களை வாசிக்க ஆரம்பித்தாள்.

''ஏன், எவனாவது லுக் விட்டானா?''

''அதத்தான் ஒரு கிழவியைப் பார்த்தாலும் விடு வாங்களே. இப்ப அதெல்லாம் நார்மல். கண்ணாலேயே கற்பழிக்கறதுதான் இப்ப ஃபேஷன்.''

''அதையெல்லாம் கேர் பண்ணாதே. மார்டன் சொஸைட்டில இதை தவிர்க்கவே முடியாது.''

''எப்பப்பார் இதே பதிலை சொல்லி என் வாயை மூடப் பாக்கறே. கல்யாண விஷயமா பேசவே மாட்டேங்கறே...''

அவள் சொல்லிவிட்டு பின் சீட்டு வலைப்பையை இழுத்து மடிமேல் வைத்துக் கொண்டாள். உள்ளிருக்கும் டப்பாவையும் வெளியே எடுக்க ஆரம்பித்தாள்.

''என்ன... ஏதாவது ஸ்வீட் தரப்போறியா?'' - டப்பாவை பார்த்தவுடன் அவன் புத்தி அப்படித்தான் போனது. ஆனால் உள்ளிருந்து குட்டி நாகம் விருட்டென்று நிமிர்ந்தது.

அடுத்த நொடி காரும் தடுமாறிக் கொண்டு பக்கவாட்டு பிளாட் ஃபாரத்தில் ஏறி ஒரு மாதிரி இடித்து மோதிக் கொண்டுதான் நின்றது.

பிரசாத் குளத்தில் குதித்து எழுந்து வந்த மாதிரி வியர்த்து விட்டிருந்தான்.

''என்ன சொர்ணா இது...? நல்ல பாம்பும் கையுமா... வாட் ஈஸ் திஸ் நான்சென்ஸ்?'' கத்தினான்.

சிரித்தபடியே டப்பாவுக்குள் அதை அடக்கினாள். அவனையும் கொஞ்சம் அதிர்ச்சியோடு பார்த்தாள்.

''என்ன பிரசாத்... எதுக்கு இப்படி பயப்பட்டே? - நீயா இப்படி பயப்பட்றவன்?''

அவள் கேட்டுக் கொண்டிருக்கும் போதே காரைச் சுற்றி கூட்டம்கூட ஆரம்பித்துவிட்டது. பிரசாத்தும் சுதாரிக்க ஆரம்பித்தான். காரைவிட்டு இறங்கி கையை உதறிக் கொண்டு சுற்றி வந்தான்.

''கார் பிரேக் பிடிக்கல. அதான்...'' என்று கூட்டத்திற்கு ஒரு சமாதானத்தையும் சொன்னான். சொர்ணாவும் காரைவிட்டு இறங்கினாள்.

''நீ எதுக்கு இறங்கறே? ஏறு.. ஐ வில் கெட் பேக்.''

சொன்னவன் அதேபோல் காரை பிளாட்ஃபாரத்தை விட்டு சாதுர்யமாக பின்னுக்கு எடுத்து சாலையில் இறக்கினான். கொஞ்சமாய் பெருமூச்சும் விட்டான்.

''சாரியா... நீ இவ்வளவு பயப்படுவேன்னு நான் எதிர்பார்க்கல.''

அவள் படபடத்தாள். அவன் ஒரு முறை முறைத்துவிட்டு காரைக் கிளப்பினான்!

மெரினா பீச்!

சமுத்திரக்கரை ஓரமாக அலைக் கும்மாளம். ஒரு அலை மட்டும் லாங் ஜம்ப்பில் வெகு தூரத்துக்கு தாவி சொர்ணாவும் பிரசாத்தும் அமர்ந்திருக்கும் மணல்திட்டுவரை பரவி சொர்ணாவின் கிழங்குக் கால்களை ஒரு வருடு வருடிவிட்டு சந்தோஷமாக பின்னிறங்கியது. அவன் உம்மென்று இருந்தான்.

''சாரி பிரசாத்...'' - அவள் வலைப்பையை அணைத்தபடி சொன்னாள்.

''முதல்ல அந்த டப்பாவை தூக்கி கடல்ல எறிஞ்சுட்டு பேசு.''

''இது உன்னை என்ன பண்ணிச்சு?''

''என்ன பண்ணிச்சா....? ஸ்டுப்பிட். அது என்ன நாயா பூனையா.. பெட் அனிமல் மாதிரி கையோட வெச்சு வருடிக் கொடுக்க? பாய்சனல் ட்ராகன்!''

''என் ரிசர்ச்சைப் பத்தி தெரிஞ்சுமா இப்படி பேசறே?''

''என்ன உன் ரிசர்ச்... புடலங்கா ரிசர்ச். நீ Phd. பண்றதுக்கு எவ்ளவோ சப்ஜெக்ட் இருக்கு சொர்ணா. தமிழ் லிட்ரேச்சர்ல, இங்கிலீஷ் லிட்ரேச்சர்ல, திருக்குறள், பொன்னியின் செல்வன், ராஜேஷ் குமாரோட ஆயிரம் நாவல்கள்னு எவ்வளவு இருக்கு! இதையெல்லாம் விட்டுட்டு பாம்புதானா உனக்கு கிடைச்சிச்சு?''

''நான் ஏற்கனவே உனக்கு சொல்லியிருக்கேன். அதெல்லாம் ரொம்ப யூஸ்வல் டாப்பிக்ஸ். ஆனால், நல்ல

பாம்பும் அதன் மேலான நம்ப பப்ளிக்கோட நம்பிக்கைகளும் அப்படி இல்ல!''

''நோ... நீ அழகா இருக்கற மாதிரி உன் மனசு அழகா இல்லை சொர்ணா. வித்தியாசம்கற பேர்ல நீ ஏன் இப்படி பயங்கரங்கள்ல போய் விழறே?''

''அதுலதானே த்ரில் இருக்கு?''

''உனக்கு எதுக்கு இப்ப த்ரில்...?''

''த்ரில் இல்லாம யூஸ்வலா ஒண்ணைப் பண்றதைவிட இந்த பீச்ல சுண்டல் வடை விக்கலாம் தெரியுமா?''

''நோ... நீ உன்னை மாத்திக்கோ. முதல்ல இந்த டப்பாவை தூக்கி கடலுக்குள்ள எறி.''

அழுத்தமாக சொன்ன அவன் அந்த பையை பிடுங்கப் பார்த்தான். அவள் இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

''சாரி பிரசாத்... நான் என் ரிசர்ச்சோட இம்பார்டன்ட் சிச்சுவேஷன்ல இருக்கேன். முடிஞ்சா என்னை என்கரேஜ் பண்ணு. இல்லேன்னா போய்கிட்டே இரு. இப்படி மேல் சாவனிஷ்ட்டா ஆதிக்கம் செலுத்தப் பாக்காதே, அப்புறம் நம்ம காதலைத் தூக்கி நான் இந்த கடல்ல எறிய வேண்டிவரும்!''

அவள் தீர்மானமாக சொன்ன விதம் அவனை கட்டிப்போட்டது. மீண்டும் ஒரு அலை லாங் ஜம்ப்பில் வந்து அவள் காலைத் தொட்டுவிட்டு 'ஹைய்யா' என்றபடி பின்னோக்கி போய்க் கொண்டிருந்தது.

''ஸோ... காதலைத் தூக்கி எரிஞ்சாலும் எரிவே, பாம்பு ஆராய்ச்சியை விடமாட்டே - அப்படித்தானே?''

''எக்ஸாக்ட்லி!''

''அப்படி என்னதான் உனக்கு இதுல க்ரேஸ்?''

''க்ரேஸ்லாம் ஒண்ணும் இல்ல. நான் எதையும் தைரியமா, வித்தியாசமா செய்ய விரும்பறேன். ஒரு அர்த்தத்தோடையும் அது இருக்கணும்னு நினைக்கறேன்.''

''இந்த பாம்பு ஆராய்ச்சிலே அப்படி என்ன பெரிய அர்த்தத்தை கண்டுட்டே?''

''என்ன பிரசாத் அப்படி கேட்டுட்டே...? பாம்புகள் பேரால இந்த மண்ணுல இருக்கற நம்பிக்கைகளை எல்லாம் தெரிஞ்சுமா நீ இப்படி கேக்கறே...''

''முடிவா நீ என்ன தான் சொல்லவர்றே?''

''பாம்பும் மற்ற மிருகங்களைப் போல ஒரு ஜீவன்னு சொல்ல விரும்பறேன். அதுல மாணிக்கம் கக்கற நாகம், மனுஷனா மாறுகிற இச்சாதாரி நாகம், அடிபட்டா பழி வாங்கற ராஜநாகம்னுல்லாம் எதுவும் கிடையாதுங்கறதை நிரூபிக்கறதுதான் என் ஆராய்ச்சியோட நோக்கம்.''

''அதுக்கும் இப்படி ஒரு குட்டி நாகத்தை கூடவே வெச்சுக்கிட்டு சுத்தறதுக்கும் என்ன சம்பந்தம்?''

''இருக்கு... ஸ்னேக் பார்க்ல இருந்து அதோட ஃபவுண்டர் டாக்டர் ஜான்சன் உதவியோட ஒரு தாய்ப்பாம்பு முன்னால் இருந்து அதோட குட்டியை பிரிச்சு தூக்கிகிட்டு வந்துருக்கேன். அப்படி செய்தா எங்க இருந்தாலும் தாய்ப்பாம்பு தேடிவந்து கடிக்கும்னு ஒரு நம்பிக்கை இருக்கே? அதை பொய்யாக்க வேண்டாம்?''

சொல்லிக் கொண்டே மீண்டும் வலைப்பையை கையில் எடுத்தாள். அந்த டப்பாவையும் வெளியே எடுத்து திறந்தாள். குட்டி நாகமும் சீறக்கூட தெரியாதபடி நிமிர்ந்து எழுந்தது. அதைப் பார்த்த பிரசாத்துக்குள் பூச்சிகள் பறக்கத் தொடங்கின.

''உன்னை உன் வீட்டுல வளர்க்கத் தெரியாம வளத்துட்டாங்க சொர்ணா...'' என்று மிடறு கூட்டினான். பின்னாலே கடற்கரை மணல் வெளியில் குதிரை மேல் ஏறி ரவுண்ட் வருகிற சிலரின் பாய்ச்சல்கள். அதில் ஒரு குதிரை சொர்ணாவும் பிரசாத்தும் அமர்ந்திருக்கும் இடம் நோக்கி மிரட்சியோடு ஓடி வந்தபடி இருந்தது. பார்த்துவிட்ட பிரசாத்தும் சொர்ணாவின் மேல் பாய்ந்தபடி ஒதுங்கினான். குதிரையும் அவள் அமர்ந்திருந்த இடம் வரை வந்து முன்

கால்களை தூக்கியபடி கனைக்க ஆரம்பித்தது. அந்த பதட்டத்தில் கை நழுவிய பாம்புக் குட்டி அதன் குளம்படியில் சிக்கிக் கொண்டு விட்டிருந்தது.

அதைப் பார்த்துக் கத்துவதற்குள் குதிரை வேறுபக்கம் ஓட பிரசாத் விக்கித்துப் போயிருந்தான். சொர்ணா குதிரைக் காரனை பார்த்து கத்த ஆரம்பித்தாள்.

''டேய் இடியட் நில்லுடா.. எங்கடா போறே?'' கத்திக் கொண்டே கொஞ்ச தூரம் பின்னாலும் ஓடினாள். பின் திரும்பி வந்தாள். தலை நைந்த நிலையில் அந்த குட்டிப்பாம்பின் வால் மட்டும் துடித்துக் கொண்டிருந்தது!

பிரசாத் இதுதான் சாக்கு என்று அவளை கலாய்க்கத் தொடங்கினான்.

''போச்சு.. குட்டிப்பாம்பு செத்துப் போச்சு. தாய்ப்பாம்பு உன்னை விடப் போறதில்லை பார். நீ நல்லா மாட்டிக்கப் போறே சொர்ணா. நல்லா மாட்டிக்கப் போறே...''

சொர்ணா நிஜமாலுமே கலங்கிவிட்டாள்!

2

ஸ்னேக் பார்க்!

இயற்கையான சூழலுக்கு நடுவில் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்த பார்க்கினுள் கண்ணாடிக் குப்பியும் கையுமாக டாக்டர் ஜான்சன் என்பவருக்காக காத்துக் கொண்டிருந்தான் அவரது உதவியாளன் ஸ்டீபன்சன். அருகிலேயே, கண்ணாடி அறை ஒன்றில் ஒரு தேக்குமரத்தால் ஆன ஐந்தடி உயர கைத்தடி போல துளிகூட அசைவின்றி படம் எடுத்தபடி ஒரு பிலிப்பைன்ஸ் ராஜநாகம்!

அங்கங்கே பார்க்குக்கு வேடிக்கை பார்க்க வந்தவர்களின் கூட்டம்.

சனிக்கிழமைகளில் பாம்பு விஷத்தை பலரும் பார்க்கும் படியாக எடுப்பார்கள் என்று தெரிந்திருப்பதால் ஓரளவுக்கு கூட்டம் அதிகமாகவே இருந்தது.

கச்சிதமாக ஸ்னேக் பார்க்கின் ஃபவுண்டரும் விஷம் எடுப்பதில் ஜித்தனுமான டாக்டர் ஜான்சனும் கைகளுக்கு கிளவுஸை எல்லாம் மாட்டிக் கொண்டு ஸ்டீபனை நோக்கி வந்தார். கூட்டம் வட்டம் கட்டி நிற்கத் தொடங்கியது.

ஜான்சன் பார்வை கூட்டத்தை ஊடுருவியது.

''சொர்ணா இன்னும் வரலை சார்...'' - என்று அவர் பார்வைக்கான பதிலோடு அவரைப் பார்த்தான் ஸ்டீபன்.

''கட்டாயம் வரேன்னு சொல்லியிருந்தாளே.''

''என்னமோ தெரியலை.. இன்னும் வரலை...''

டாக்டர் ஜான்சன் அதைக் கேட்டு சற்று தயங்கினார். ராஜநாகம் பார்த்துக் கொண்டே இருந்தது.

''சொர்ணா வரலைன்னா என்ன டாக்டர். இதுதான் நாம எப்பவும் பாய்சன் எடுக்கற டயம். வி வில் கோத்ரூ...''

''இல்ல... அவ வந்து இதை எல்லாம் வீடியோ எடுத்துக்கறதா சொல்லியிருந்தா... ஒரு அரை மணி நேரம் வெயிட்பண்ணுவோமே...''

டாக்டர் ஜான்சன் சொல்லிவிட்டு திரும்ப தன் அறை நோக்கி செல்லத் தொடங்கினார். ஸ்டீபன்சனும் தன் வேலையைப் பார்க்க நகர்ந்தான். கூட்டத்திடம் சன்னமான ஏமாற்றம். மிகவும் ஏமாற்ற விரும்பாதவள் போல கையில் ஒரு ஹேண்டி விடியோ கேமிராவுடன் பார்க்கினுள் நுழைந்து கொண்டிருந்தாள் சொர்ணா.

''வாங்க மேடம்! டாக்டர் சார் உங்களுக்காகத்தான் வெய்ட்டிங்...'' ஸ்டீபன்சன் சொன்னபடியே டாக்டரின் அறை நோக்கிச் சென்றான். பின்னாலேயே சென்றாள் சொர்ணா.

அழகான ஒரு ஏ.சி. அறை. உள்ளேகூட கண்ணாடி சாடி ஒன்றில் ஒரு ராஜநாகக் குட்டி. சொர்ணாவைப் பார்த்த டாக்டர் ''வெல்கம்'' என்றார்.

''சாரி டாக்டர்! டிராஃபிக்ல மாட்டிக்கிட்டேன்.''

''இட்ஸ் ஓ.கே... போலாமா?''- கேட்டார்

பின் மூவரும் வெளியே வந்தனர். டாக்டரும் லாவகமாக விஷம் எடுக்க ஆரம்பித்தார்.

ஒரு புடலங்காயைப் பிடிப்பதுபோல பாம்பைப் பிடித்து அதன் வாயைப் பிளந்து கண்ணாடிக் குழாயின் ரப்பர் முகப்பில் அழுத்தம் கொடுத்து ஆள்காட்டி விரலால் உச்சந்தலையை பக்குவமாக நசுக்கவும் வளைந்த இரண்டு பற்களிலும் பிஸ்டன் போல இரண்டு பற்கள் வெளிப்பட ஊடே ஒரு சொட்டு விளக்கெண்ணெய்போல திடமாக கசிந்து சொட்டிற்று ராஜநாகத்தின் விஷம்.

அழகாக அதை ஜூம் செய்து டைட் குளோஸ் அப்பில் படமும் பிடித்துக் கொண்டாள் சொர்ணா. ஒரு இருபது நிமிடம்... மிகப் பரபரப்பாக கழிந்து முடிந்தது. விஷத்தை கக்கிய பாம்பும் கண்ணாடி அறையில் - ஓடிக்களைத்த ஒலிம்பிக் வீரனைப்போல - சுருண்டு படுத்துக் கொண்டது.

சில பச்சைத் தவளைகளை உணவாக அதன் முன் போட்டும் எகிறிப் பிடிக்க பிரியமில்லாதபடி படுத்தபடியே இருந்தது.

அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள் சொர்ணா. ''விஷம் எடுத்த பாம்புக்கு களைப்பு இருக்குமா டாக்டர்?''

''நிச்சயமா... ஆணுக்கு விந்து விலகும்போதும், பெண்ணுக்கு மாதவிலக்கின் போதும், பாம்புக்கு விஷம் நீங்கும் போதும் களைப்பு ரொம்ப சகஜம். சப்த நாடிகளும் ஒடுங்கித் துடிக்கிறது அப்பத்தான்...''

- ஜான்சன் சொல்லிக்கொண்டே தன் அறை நோக்கி நடந்தார். பின் காபியை வரவழைத்து பருகியபடியே பேச ஆரம்பித்தார்கள்.

''ஆமாம், எப்படிம்மா இருக்கு குட்டிப்பாம்பு?''

அவர் கேட்ட மறுநொடி சொர்ணா முகம் மாறத் தொடங்கியது.

''என்னம்மா... எனிதிங் சீரியஸ்?''

''ஆமாம் டாக்டர். அநியாயமா அது செத்துப் போச்சு.''

அவள் பீச்சில் நடந்ததை விவரித்தாள்.

''இட்ஸ் ஓ.கே. இதுல உன் தப்பு ஒண்ணுமில்ல. எனிவே குட்டிப் பாம்பைத் தேடி தாய்ப்பாம்பு வரும்கற நம்பிக்கை எல்லாம் கப்ஸான்னு புரிஞ்சா சரி.''

''ஸ்டேஜ் பை ஸ்டேஜ் என் ரிசர்ச்சுக்கு பெரிய உதவிகள் செய்யறதுக்கு நன்றி டாக்டர். என்ன இருந்தாலும் ஒரு குட்டிப் பாம்போட உயிரை வாங்கிட்டோமேங்கற நெருடல் மட்டும் இருந்துகிட்டே இருக்கு...''

''பரவால்லம்மா.. அதையே நினைச்சு அலட்டிக்காதே! இந்த மெட்ராஸ்ல உன்னை மாதிரி ஒரு பொண்ணு இந்த மாதிரி ஒரு வித்தியாசமான ஆராய்ச்சில ஈடுபட்றத பார்த்து நான் ரொம்ப சந்தோஷப் பட்டுக்கிட்டிருக்கேன். உனக்கு பிரேவ் ஹார்ட்டுங்கறது என் எண்ணம். அதுல நிறைய ஈரமும் இருக்குன்னு சொல்லாம சொல்றே. குட்''

''சரி டாக்டர். இந்த ரிசர்ச்சோட அடுத்த ஸ்டெப்புக்கு நான் போக விரும்பறேன். பாம்புகளை இண்டியன் பீப்பிள்ஸ் குறிப்பா ஹிந்துஸ் தெய்வமாவே நினைக்கறாங்க. அது ஏன்? எப்படி பாம்புகள் இங்க மட்டும் இப்படி தெய்வ நிலையை அடைஞ்சிச்சு? உங்களுக்கு இதுக்கு ஏதாவது காரணம் தெரியுமா? இதுக்கு எதாவது ஆதாரங்கள் இருக்கா?''

ஜான்சன் பேப்பர்வெயிட்டை உருட்டியபடியே அதற்கு பதில் சொல்ல ஆரம்பித்தார்.

''நாகர்பட்டின்னு ஒரு கிராமம். தஞ்சாவூர் பக்கத்துல இருக்கு. அங்க நாகலிங்க ஸ்வாமி கோயில்னு ஒரு கோவில்கூட இருக்கு. ஒரு ஆச்சரியம் என்னன்னா பௌர்ணமிக்கு பௌர்ணமி அந்த கோவிலுக்கு ஒரு பாம்பு வந்து அந்த கோவில்ல உள்ள லிங்கத்துக்கு பூஜை செய்துட்டு போகுது. அது பூஜை செய்துட்டு போனதுக்கு அடையாளமா மறுநாள் காலையில் லிங்கம்மேல பாம்புச் சட்டையும் கிடக்குதாம் நீ கேள்விப்பட்டிருக்கியா?''

ஜான்சன் கேட்க, சொர்ணா உதட்டைச் சுழித்தபடி ஆச்சரியத்தை முகத்தில் பரத்தினாள்.

''நிஜமாவா... நம்பவே முடியலையே'' என்றது அவள் பழ உதடு.

''நீ பெரிசா ரிசர்ச் பண்ண வேண்டிய ஒரு இடம் அது. அங்க போனா உனக்கு இந்த மாதிரி நம்பிக்கைகளுக்கான காரணம் தெரியலாம்.''

''அது சரி.. அது உண்மையா டாக்டர்?''

''எப்படி உண்மையா இருக்க முடியும்? இதெல்லாம் மித் நம்பிக்கைகள். சபரிமலைல மகரஜோதி தெரியதுங்கற மாதிரியான ஒரு விஷயம். அதை நாஸ்திகன் ஒரு வார்த்தைல பொய்யின்னு சொல்லிட்றான். ஆனால், அது எப்படிப்பட்ட பொய்யின்னு ஆதாரபூர்வமா அந்த நம்பிக்கைகளை ஆராய்ஞ்சு யாருமே சொல்றதில்லை.''

''ஸோ... என்னை நாகர்பட்டிக்கு போகச் சொல்றீங்க. அப்படித்தானே?''

''ஆமாம்மா...அங்க உனக்கு பாம்புகளைப் பற்றின மூட நம்பிக்கைகளுக்கு ஏகப்பட்ட விஷயங்கள் இருக்கும். இன்ஃபாக்ட் அந்த ஊர்ல பாம்புக்கு எதிரியான கருடன் பறக்கறது கிடையாதாம். பாம்புக்கடி பட்டவங்க அந்த கோயிலுக்கு வந்து கோவில்ல தர்ற தீர்த்தத்தை சாப்பிட்டாலே விஷம் முறிஞ்சு குணமாயிட்றாங்களாம். ஹைலைட்டான ஒரு விஷயம் என்னன்னா பூஜை செய்ய வர்ற பாம்புகூட பாம்பு கிடையாதாம். பாம்பு வடிவத்துல வர்ற சித்தராம்!''

ஜான்சன் நிறையவே நாகர்பட்டி பற்றி சொல்ல- சொர்ணா வாயைப் பிளக்க - ஸ்டீபன்சன் அவர்களுக்கு இடையே வேகமாகப் புகுந்தான். வந்த வேகத்துக்கு மூச்சிறைக்க ஜான்சனைப் பார்த்தான்.

''என்ன ஸ்டிபன்சன்...?''

''சார் இவங்களுக்கு நாம குடுத்த குட்டியோட தாய் நாகத்தை காணோம் சார்!''

''வாட்?''

''ஆமாம் சார்... பூட்டின கண்ணாடி அறை அப்படியே இருக்கு. மற்ற குட்டி நாகங்களும் அப்படியே இருக்கு. அந்த தாய்நாகத்தை மட்டும் காணலை.''

''இட் ஈஸ் இம்பாசிபிள். நம்ம புரொட்டக்ஷன், பேங்க் லாக்கரைவிட உறுதியானது. என்ன உளர்றே நீ,''- கேட்டபடி எழுந்த டாக்டர் ஜான்சன் படபடப்போடு வெளியில் வந்தார்.

கொசகொசவென்று புழுக்கள் நெளிவதுபோல நெளிந்த படி கிடக்கும் சாதாரண ரக பாம்புகளின் சிமெண்டுக் கிணற்றையும், தண்ணீர் பாம்புகள் நீந்தும் தண்ணீர்த் தொட்டியையும், வரிசையாக அணி வகுக்கும் கருநாகம், கோதுமை நாகம், கண்ணாடி விரியன், சாரை, மண்ணுளி, மலைப்பாம்புகளின் பிளாக்குகளையும் பார்த்தபடி நடந்தவர் குட்டிபோட்ட அந்த தாய்நாகம் கிடந்த பிளாக்கை கண்ணாடிச் சட்டம் வழியாக பார்த்தார். குட்டிப் பாம்புகள் மட்டும் சில அங்குலத்துக்கு தலையைத் தூக்கியபடி அவரைப் பார்த்தன.

'எங்கே போயிற்று தாய் நாகம்?'

'மிக பாதுகாப்பான அந்த பாம்புப் பண்ணையில் இருந்த ஒரு குஞ்சு குளுவான்கூட வெளியேற முடியாதே!'

3

நாகர்பட்டி!

கிரீச்சிட்டு நின்ற பஸ்ஸிலிருந்து இரண்டு இளைஞர்கள் உதிர்ந்தனர். ஒருவன் பாஸ்கரன், ஒருவன் சுகுமார்! இருவர் தோளிலும் பருமனான பெரிய பெரிய ஹேண்ட் பேக்குகள்.

பஸ் ஸ்டாப்பை ஒட்டி ஒரு டீக்கடை...

முதல் காரியமாக கடைக்குச் சென்று டீ குடிக்க ஆரம்பித்தார்கள்.

''சாருங்களுக்கு எந்த ஊர்?'' - கடைக்காரனும் வாயைச் சீண்டினான்.

''மெட்ராஸ்...''

''சாமி கும்புட வந்திருக்கீங்களோ?''

''ஆமாம்!''

''டீயை குடிச்சுட்டு வெரசா போங்க. இன்னிக்கு பௌர்ணமி பாருங்க, கோவிலை எட்டு மணிக்கே அடைச்சிடுவாங்க...''

''ஏன் அப்படி?''

''சரிதான் இந்த ஊர் கோவில் பத்தி தெரியாதாக்கும்?''

''தெரியாததால் தான கேக்கறோம்?''

''அது ஒரு பெரிய கதை. கேட்டா வாயைப் பொளந்துடுவீங்க.''

''அப்படியா...?''- பாஸ்கர் ஆச்சரிய சமுத்திரத்தில் விழுந்த மாதிரி பாவனை காட்டினான்.

''அது என்ன கதை? கொஞ்சம் சொல்லுங்களேன்.''- சுகுமார் நிமிண்டினான்.

''ராமாயண கதை மாதிரி ஊர் உலகுக்கே தெரிஞ்ச விஷயம் இது. இதை போய் இவ்வளவு நாள் தெரிஞ்சுக்காம இருந்திருக்கீங்களே...''-டீக்கடைக்காரன் பீடிகையை பலமாக போட்டான்.

''அண்ணாச்சி... விஷயத்தை சொல்லுங்க...''

''சொல்றேன் சொல்றேன். பௌர்ணமிக்கு பௌர்ணமி நாகசித்தர் பாம்பு ரூபத்துல வந்து எங்க ஊர் நாகலிங்க சாமிக்கு பூஜை செய்துட்டு போகற கோயில் இது. அவர் வரும்போது யாரும் பாக்கவோ நிக்கவோ கூடாதுங்கறதுக்காக எட்டு மணிக்கே ஊர் அடைஞ்சிடும். ஒரு காக்காகூட வெளிய வராது. மீறி யாரும் வந்தாலோ, நாக சித்தரை பார்த்தாலோ அவங்களுக்கு நடக்கக்கூடாதது எல்லாம் நடந்துடும்கறது ஐதீகம்.''

டீக்கடைக்காரன் சொன்னதைக் கேட்ட பாஸ்கரும் சுகுமாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மர்மச் சிரிப்பும் சிரித்துக் கொண்டனர்.

''ஆமா.. நடக்கக் கூடாதது நடந்துடும்னா... அப்படி என்ன நடக்கும்?'' - சிரிப்பைத் தொடர்ந்து பாஸ்கரன் கேட்க, டீக்கடைக்காரன் கை வெளியே ஒரு குருட்டுப் பிச்சைக்காரனை நோக்கி நீண்டது.

''என்ன அவருக்கு?''

''அவர்கிட்ட போய் கேளுங்க. சொல்வாரு!''

''ஏன்... நீங்க சொன்னா என்ன?''

''கண்ணு போயிடும்யா. சமயத்துல உசிரேகூட போயிடும். ஆமா, நீங்க பிரசித்தி பெற்ற எங்க சாமியை கும்புட வந்தவங்களா இல்லை ஆழம் பார்க்க வந்தவங்களா?''

கடைக்காரன் கேள்வியோடு அவர்கள் ஹேண்ட்பேக்கை பார்த்தான். ஸ்டெடி கேம் வீடியோ கேமிராவின் பிதுங்கிய பாகம் கண்ணில் பட்டது.

''என்ன அது கேமராவா?''

''ஆமாம். உங்க ஊர் கோவில் பத்தி கேள்விப்பட்டு படம் பிடிக்க வந்துருக்கோம்.''

''எதுக்கு?''

''டிவில ஒளிபரப்பத்தான்...!''

''டிவிலையா...இதை முந்தியே சொல்றதுக்கென்ன?''

கடைக்காரன் உற்சாகமானான்.

''டி.விக்குன்னா என்ன சொல்வீங்களோ, எடுக்கவிட மாட்டீங்களோன்னுதான்.''

''அட என்னங்க நீங்க... எங்க ஊர் பெருமை டி.வியில வருதுன்னா சும்மாவா? கேமிராவை எடுத்து படம் பிடிச்சுக்கிட்டே கேளுங்க. எங்க நாகலிங்க சாமி பத்தி புட்டுப்புட்டு வைக்கறேன்.''

''ரொம்ப சந்தோஷம். அதுக்கு முந்தி கோவிலுக்கு போய்ட்டு வந்துடறோம்.''

''நல்லது. போய்ட்டு வாங்க. ஆனா ஒண்ணு- கோவில்ல கேமிராவை வெளியே எடுத்துராதீங்க. அப்பால உங்களுக்குத்தான் ஆபத்து.''

''ஆபத்தா.. சாமியை அப்ப எப்படி படம் பிடிக்கறதாம்?''

''எந்த கோயில்ல சாமியை படம் எடுக்க உட்ருக்காங்க. வெளிய கோபுரம், பிரகாரம்னு வேணும்னா எடுத்துக்கலாம். ஆனா அதுக்கு கூட இங்க கட்டுப்பாடு உண்டு.''

''தர்மகர்த்தாகிட்ட பர்மிஷன் கேட்டா தர மாட்டாங்களா?''

''ஜனாதிபதியே வந்தாலும் அனுமதி கிடையாது. இது சாமி வந்து பேசிட்டுப் போற இடம். இங்க ஐதீகத்துக்குதான் முதல் இடம்...''

டீக்கடைக்காரன் சொன்னதை எல்லாம் கேட்டுக் கொண்டு இருவரும் ஹேண்ட் பேக்கை திரும்ப தோளுக்கு தூக்கினார்கள்.

கோயிலில் கூட்டம் அலை மோதிக் கொண்டிருந்தது. அந்தக் காலத்து கோயில்..அந்தக் காலம் என்றால் சோழர்காலம். கட்டிடக் கலை அழகு கொஞ்சிற்று. நெடுஞ்சாண்கிடையான தூண்கள் - தூண்களில் யாழ்கள்.... நீண்ட பிரகாரங்கள். அவ்வளவும் கருங்கற்களால் வேயப்பட்டிருந்தன.

உள்ளே நடக்க நடக்க பிரமிப்பு தட்டிற்று. அடைபட்டுக் கிடக்கும் வௌவால்கள் குறுக்கே குறுக்கே பறந்து சென்று கொஞ்சம் அச்சமூட்டினாலும் நடமாடிக் கொண்டிருந்த கூட்டம் தைரியம் தந்தது.

''பாஸ்கர்.. கோயில் மிரட்டலா இருக்குல்ல?''

''உண்மைதான். ஆனா, நாம வந்துருக்கிறது இப்படி கோவிலைப் பார்த்து வாயைப் பொளக்கறதுக்காக இல்லை. ஞாபகம் வெச்சுக்கோ...''

''வாஸ்தவம்தான். ஒளிய இடமிருக்கா பாரு...''

பாஸ்கர் சொல்ல, சுகுமார் சுற்றிலும் பார்த்தான். ஒரு வாகன மண்டபம் கண்ணில்பட்டது. அதில் ஐந்து தலை நாக வாகனமும், நந்தி வாகனமும் கம்பீரமாக தெரிந்தன.

கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டை சமீபித்துக் கொண்டிருந்தது. கூடவே கோயிலின் கண்டாமணி சப்தமும் சேர்ந்து ஒலிக்கத் தொடங்கியது.

சப்தம் கேட்ட நொடி பக்தர்கள் கூட்டம் கோயிலை விட்டு வெளியேற ஆரம்பித்தது.

''கோவிலை அடைக்கப் போறாங்க போல இருக்கு. எல்லாரும் ஓடுறாங்க பார்...''

''இதுதான் சமயம். வா! அந்த நந்தி வாகனம் பின்னால் போய் ஒளியலாம்...''

இருவரும் சுற்றிலும் பார்த்தபடி வாகன மண்டபத்தை நெருங்கி அப்படியும் இப்படியுமாக பார்த்துவிட்டு விருட்டென்று உள்ளே புகுந்து கொண்டார்கள். கோவில் மணி சப்தம் ஒரு வழியாக அடங்கியது. எங்கும் நிசப்தம். பட்டரும் மூலவர் சன்னதியை திறந்தே வைத்த நிலையில் வேக வேகமாக வெளியே வர ஆரம்பித்தார்.

கோபுர நிலைக்கதவை தாண்டிக் கொண்டு அவர் வெளியேறுமுன் உள்ளே நாலாபுறமும் பார்வையை விட்டார். காவல்காரன் காக்கி உடுப்பில் அருகிலேயே இருந்தான். ''சாமி நீங்க வாங்க.. நான் உள்ள ஒரு சுத்து சுத்திட்டு வந்துட்றேன். '' என்றபடி உள்ளே இறங்கினான். சரியாக ஐந்து நிமிடத்தில் சுற்றி முடித்துவிட்டு வந்தான்.

''உள்ள யாருமில்ல. அடைக்கலாம்.''

அவன் சொன்ன மறுநொடி அந்த ராட்சஸக் கதவுகள் கிரீச்சிட்டு கதறி அடைபட ஆரம்பித்தன.

ஊருக்குள்ளும் வப்பாளத்தான் என்பவன் மத்தள முரசத்தை தட்டிக் கொண்டு நடந்து கொண்டிருந்தான்.

வீதியில் கட்டிலைப் போட்டுப் படுத்துக் கொண்டிருந்த பெரிசுகளில் இருந்து இளசுகள் வரை சப்தம் கேட்டு உள்ளடைய ஆரம்பித்தார்கள்.

மணி எட்டரை!

நாகர்பட்டியே ஆளரவமின்றி வெறிச்சிட வானில் சந்திரன் வட்டமும் பக்கவாட்டில் ஜிலு ஜிலுவென்று ஒரு குளிர்தட்டு போல ஒளிவிட்டபடி உருள ஆரம்பித்துவிட்டது.

வெளிச்சம் கோவில் பிரகாரத்திலும் பனித்துகள்களோடு சேர்ந்து கொண்டு உணங்கிக் கொட்டிக் கொண்டிருந்தது. பாஸ்கரும் சுகுமாரும் கூட மெல்ல வாகன அறையை விட்டு வெளியே வர ஆரம்பித்தனர்.

''பாஸ்.... ரொம்ப நாள் பிளான்- இன்னிக்கு ஓர்க் அவுட் ஆகப் போகுது. கேமராவை ரெடி பண்ணு.''

சுகுமார் பரபரத்தான்.

''எதுக்குடா.. பாம்பு வரும் - அது சித்தரா மாறும்னு நம்பறியா என்ன?''

''நம்பினா துணிஞ்சு இப்படி ஒரு ரிஸ்க் எடுப்போமா? எதுவும் வரலை. எதுவும் நடக்கலைன்னு சொல்லணும் னாலும் அதுக்கு ஆதாரம் வேணும். நீ கேமராவை ரெடி பண்ணு சன்னதியை பட்டர் திறந்து வெச்சுட்டே போயிருக்கார் பார். அங்க போய் கேமராவை ஃபிக்ஸ் பண்ணு. சாமிக்கு நான் பூஜை பண்றேன். அதை எடு. ஒரு பௌர்ணமி ராத்திரியில சித்தர் வருவார்னு சொன்ன இடத்துல நான் பூஜை பண்ணினா அதுவே யாரும் எதிர்பாராத ஒண்ணுதானே? நாளைக்கே நம்ம நியூஸ் சேனல்ல இந்த பொய்யான மூட நம்பிக்கையை நான் உடைச்சதை செய்தி வாசிக்கறவர் உரக்கப் படிக்கணும். அப்படி எடுக்கப்போற படமும் டெலிகாஸ்ட் ஆகணும்.''

''ஆகும்... கமான்...'' இருவரும் கேமரா பையோடு மூல விக்ரக சன்னிதி நோக்கி நடந்தனர். முன்னாலே மறிப்பாக பதினெட்டு படிகள் தாவிக் கொண்டு ஏறினார்கள்.

மின் விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தாலும் சன்னிதி விளக்குகள் ஜெகஜ்ஜோதியாக நாகலிங்க ஸ்வாமியை காட்டிக் கொண்டிருந்தன.

பார்த்த நொடி ஒரு வித அதீதப் பரவசம்.

சுகுமார் சிலையாக நின்று விட்டான்.

''என்னடா நின்னுட்டே?''

''உள்ள... சன்னதி எப்படி இருக்கு பார்த்தியா?''

''அதத்தான் அப்பவே பாத்துட்டோமே... டயமாகுது பார். கேமராவை ஃபிக்ஸ் பண்ணு. நான் பேட்டரி லைட்டை ரெடி பண்றேன். நல்லா சார்ஜ் பண்ணி வெச்சிருக்கே தானே?''

''நோ பிராப்ளம். எடுத்து ஆன் பண்ணிப் பார். இந்த மண்டபமே அப்படியே ஜெகஜ்ஜோதியா தெரியும்''- சுகுமார் சொல்லிக்கொண்டே சன்னதி நோக்கி நடந்து நிலை வாயில் அருகில் போய் நின்றான்.

மலர் மாலைகள் மணக்க நாகலிங்க விக்ரகம் கம்பீரமாக அவனைப் பார்த்தது. பாஸ்கர் கேமராவை தயார் படுத்திக் கொண்டிருந்தான். சார்ஜ் செய்யப்பட்ட ஃபோகஸ் லைட் குபீரென்று எரிந்து அவன் சொன்னது போல அந்த பிரகாரத்தை ஒளி வெள்ளத்தில் போட்டு புரட்டி எடுத்தது.

''இது ஒரு வித்தியாசமான தேசம் சுகுமார். சித்தர்கள்னு ஒரு கூட்டம் - அவங்களப் பத்தி விதவிதமான கதைகள்... நம்பிக்கைகள். எல்லாத்தையும் ஒண்ணு விடாம நாம உடைக்கணும். மீடியால அதை ஃபோகஸ் பண்ணி ஒரு விழிப்புணர்ச்சியை உருவாக்கணும்.''

பாஸ்கர் முணுமுணுத்தபடி கேசட்டை லோட் செய்து வியூ ஃபைண்டர் வழியாகவும் பார்க்க ஆரம்பித்தான்.

சன்னதி நிலைகால் மேல் சுகுமார் நின்று கொண்டிருப்பது பளிச்சென்று தெரிந்தது.

''என்னடா லைட்டிங் ஓ.கே.வா?''

19770,

''கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணணும். நீ அங்கேயே நின்னுகிட்டு இரு.''

பாஸ்கர் சொல்லிவிட்டு திரும்பி வியூ ஃபைண்டரை பார்த்து ஃபோகஸ் லைட்டையும் அட்ஜஸ்ட் செய்து ஒரு பரபரப்பான அனுபவத்துக்கு தயாராகும் அதே சமயம் அந்த பிரம்மாண்ட ஆலயத்தின் ஈசான்ய மூலையில் உள்ள கல்துவாரம் ஒன்றின் வழியே பனிரெண்டு அடிக்கு குறையில்லாத நாகமொன்று வெளிப்பட்டுக் கொண்டிருந்தது!

4

அத்தனை நீளமான ஒரு பாம்பை பார்ப்பதே அபூர்வம். டாக்டர் ஜான்சனின் பாம்புப் பண்ணையில் கூட அப்படி ஒரு பாம்பு இல்லை.

ஈசான்ய மூலையில் உள்ள துவாரத்தின் வழியாக கோயில் சுற்றுப் பிரகாரத்தில் பிரவேசித்த அந்த பாம்பின் சரசரவென்ற வளைசல் நெளிசல் கொண்ட ஓட்டம் பிரகாரம் கடந்த கோவில் சுவரைக் குறிவைத்தே இருந்தது.

அந்த பாம்பிடம் பழகியது போன்ற ஒரு வேகம். கோவில் சுவரின் ஈசான்ய மூலையிலும் ஒரு துவாரம் இருந்தது. கோவில் கழிவுகள், அபிஷேக தீர்த்தம் எல்லாம் அந்த மூலையில் உள்ள கல் ஒன்றில் தான் வந்து விழும். அதற்கான நீர் வரும் துவாரத்தில் ஆவேசமாகப் புகுந்தது அந்த நாகம்.

உள்ளே சுகுமார் நாகலிங்க ஸ்வாமியை ரசித்துக் கொண்டிருந்தான். வெளிக்கவசம் சாற்றப்பட்டு வில்வமாலை முதல் ரோஜா மாலை வரை சகலத்தையும் அணிந்து கொண்டு நாகலிங்க ஸ்வாமியும் கம்பீரமாகத்தான் தெரிந்தார்.

சன்னதி விளக்குகளில் நெய் உருகியிருந்தது.

ஒரு வித வாசம் மூக்கை நிரடியது.

''பாஸ், இப்ப நீ பளிச்சுன்னு தெரியறே.... கமான் அங்க படிமேல நின்னுக்கிட்டு எதையாவது பேசு...''

கேமிரா பின் நின்று கொண்டு சுகுமார் சொல்லிக் கொண்டிருந்தான்.

''எதையாவது எதுக்கு சுகுமார் பேசணும்? இந்த கோவில், இங்க நிலவற நம்பிக்கைகள் இவற்றை வெச்சே ஒரு லெக்சர் கொடுக்கறேனே...?''

''ஓ.கே... இன்ட்ரஸ்டிங்கா இருந்தா சரி... கேரி ஆன்.'' - சுகுமார் சம்மதித்து விட்டு வியூ ஃபைண்டரில் பார்வையை வைத்துக் கொண்டான். அதனுள் ஒரு சாம்பிள் சோப் அளவிலான சதுரத்தில் பாஸ்கரன் ஒரு காம்பியரைப் போல பேச ஆரம்பித்தான்.

'டியர் வியூவர்ஸ்... நான் இப்ப புகழ் பெற்ற நாகலிங்க ஸ்வாமி கோவில் கர்ப்பகிருகம் முன்னால நின்னுக் கிட்டிருக்கேன்....

இந்த கோவிலைப் பற்றி பல விதமான மூடநம்பிக்கைகள் நிலவறது உங்களுக்கெல்லாம் தெரிஞ்சிருக்கும்.

சோழர் காலத்துல கட்டப்பட்ட கோவில் இது.. அந்தக் காலத்துல பசியும் பஞ்சமும் ஏற்பட்டா அரசர்கள்தான் பஞ்சத்துல அடிபட்ட மக்களுக்கு உதவிகள் செய்வாங்க.

அவர்களுக்கு அப்படி உதவி செய்யறதுக்காக திட்டமிடும் போதே இப்படி கோவில்களை கட்டவும் முடிவு செய்துடுவாங்க. பஞ்சத்தால அடிபட்ட மக்கள் கோவில் கட்டப் பாடுபடுவாங்க. அந்த வேலைக்கு கூலியாக அவங்களுக்கு நெல்லும் பொன்னும் அரசர்கள் கொடுப்பாங்க.

சும்மா தந்தா ஜனங்க சோம்பேறியாயிடுவாங்கங்கற்து அரசர்களோட கருத்து. அப்படி ஜனங்களால் கொஞ்சம் கலை உணர்ச்சியோடு கட்டப்பட்டவைதான் இந்த மாதிரி கோவில்கள்.

ஆனா காலப்போக்குல இந்த கோவில்களை எப்படியோ சில மூட நம்பிக்கைகள் ஆக்ரமிச்சுக்க ஆரம்பிச்சுடிச்சு. அதுல ஒண்ணுதான் பௌர்ணமிக்கு பௌர்ணமி பாம்பு ரூபத்துல சித்தர் ஒருத்தர் வந்து இந்த நாகலிங்க ஸ்வாமியை வழிபடுவார்னு சொல்ற விஷயமும்.

இப்படி எல்லாம் சொன்னாதான் கூட்டம் வரும்கறது கோவில் நிர்வாகிகளின் எண்ணமா இருக்கலாம். இல்லேன்னா ஒரு த்ரில்லுக்காகக்கூட பொய் சொல்லி வெச்சிருக்கலாம்.

இந்த மாதிரி விஷயங்களை மீடியா மூலமா தோல் உரிச்சு பார்க்கறதுதான் எங்களோட நோக்கம். அதுக்காகவே மிகவும் பழக்கட்டுப்பாடுள்ள இந்த கோவிலுக்குள்ள நாங்க முளிஞ்சிருந்து இப்ப நீங்க பார்க்கும்படியா இந்த காட்சியையும் படமாக்கிகிட்டிருக்கோம்.

எந்த பாம்பும் இங்க வரலை.அது சித்தராவும் மாறலை. இதை நான் உங்களுக்குச் சொல்லும்போது நேரம் (கடிகாரத்தைப் பார்த்துவிட்டு) மணி சரியா பத்தரை. காலைல 5 மணிவரை நாங்க இப்படியே இங்கதான் இருக்கப்போறோம்.

பாம்பு வந்தா, சித்தரா மாறினா நிச்சயமா அதையும் நாங்க படமா எடுப்போம். எது எப்படியோ ஒரு தெஹல்கா டாட் காம் எப்படி ராணுவ பேர ஊழலுக்காக முயற்சி செஞ்சிச்சோ அந்த மாதிரி எங்களோட 'இந்தியன் க்ரைம் வீடியோவும்' இந்த மாதிரி முட்டாள்தனங்களை ஜனங்களுக்கு எடுத்துக் காட்ட முயற்சி செய்யும்.

திரும்பவும் 11 1/2 மணிக்கு நான் உங்களோடு பேசுவேன். அதுவரை உங்களிடம் இருந்து விடைபெற்றுக் கொள்வது இந்தியன் க்ரைம் வீடியோவுக்காக உங்கள் பாஸ்கர்!'

பாஸ்கர் பேசி முடித்தான். சுகுமாரும் கேமிராவில் இருந்து கண்களை விலக்கினான். இரு கைகளையும் தலைக்குமேல் உயர்த்தி கொஞ்சம் போல சோம்பலும் முறித்துக் கொண்டான்.

பாஸ்கர் கர்ப்பகிருக வாசல்படியை விட்டு விலகி வந்தான். கேமிராவின் மினி ஃபோகஸ் லைட் வெளிச்சத்தில் பிரகாரம் பளிச்சிட்டபடி இருந்தது. பக்கவாட்டு சுவர்களில் திருவிளையாடற் புராண ஓவியங்கள். இருவரும் அதை பார்க்க ஆரம்பித்தார்கள்.

"விடிய விடிய இப்படியே உக்காந்துகிட்டு இந்த படங்களை எல்லாம் பார்க்க வேண்டியதுதானா?"

"வேற வழி..?"

"தப்பித் தவறி அந்த பாம்பும் சித்தரும் வந்துட்டா...?"

"அப்ப உனக்கு இந்த மாதிரி முட்டாள்தனமான விஷயங்கள்ல நம்பிக்கை இருக்குன்னு சொல்லு."

"இதுக்கு பேர் நம்பிக்கை இல்லை சுகுமார். இது ஒரு விதமான ஆசை..."

"பைத்தியக்காரத்தனமான ஆசை. தமிழ் சினிமாவுல அதுலயும் கரம்மசாலாவோட எடுக்கற காது குத்தற படங்கள்லதான் இந்த மாதிரி எல்லாம் நடக்கும்."

"டேய் ஒரு வேளை நடந்தா எப்படி இருக்கும்னுதானே நான் கேட்டேன்."

"அப்படி ஒரு வேளை நடந்தா அதையும் படமா எடுப்போம். டெலிகாஸ்ட்டும் பண்ணுவோம். உலகத் திலேயே ஒரு நம்ப முடியாத ரகசியத்தை படமா எடுத்த பெருமையும், அதனால் கோடி கோடியா சம்பாதிச்ச சாமர்த்தியமும் நம்பளத்தான் வந்து சேரும்."

"கோடி கோடியாவா?"

"ஆமாம்... ஒரு சாதாரண புகை மூட்டத்தை படமா எடுத்து அதை ஆவியோட படம்னு சொல்லி ஒருத்தன் பல ஆயிரம் டாலருக்கு வித்துருக்கான் தெரியுமா?"

"எங்க?"

"அமெரிக்காவுலதான்... வேற எங்க?"

"ஸோ... இந்த மாதிரி விஷயத்துல நமக்கு நிறைய முன்னுதாரணங்கள் இருக்குன்னு சொல்லு."

"இன்னும் இருக்குடா... மெக்ஸிகோல எல்ஸி மாதிரி ஒரு பில்டிங்கோட கண்ணாடிச் சுவத்துல மேரி மாதாவோட உருவம் தெரிஞ்சிருக்கு. அதுவும் ஒரு நாள் டி.வில வந்தது தெரியுமா உனக்கு?"

"சரி இப்ப நீ முடிவா என்ன சொல்றே? இந்த மாதிரி மிகைலான விஷயங்கள் உண்மைங்கறியா, பொய்யின்னு சொல்றீயா?"

"உண்மையா இருந்திருந்தா உலகத்துல இருக்கற அவ்வளவு நாத்திகர்களும் அதன் பிறகு மாறி யிருக்கணுமே...."

"அப்ப பொய்யா...?"

"அப்படி இல்லை சுகுமார். தற்செயலா நடக்கற சில விஷயங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கைகளுக்கு ஒரு தூண்டுகோலா அமைஞ்சிடுது. அவ்வளவுதான். மத்தபடி எல்லாம் கப்ஸாதான்..."

"அப்ப இங்கேயும் எல்லாம் கப்ஸாதான்னு சொல்லு..."

"நீ கேக்கறத பார்த்தா பாம்பும் சித்தரும் வந்தாதான் உனக்கு திருப்தியா இருக்கும்போல தெரியுதே...?"

பாஸ்கர் கேட்க, சுகுமார் அதற்கு ஒப்புதல் தருவதா, இல்லை மறுப்பைச் சொல்வதா என்று குழம்பும்போது 'கிணிங், கிணிங்' என்று திடீர் மணி சப்தம் அவர்கள் காதைச் சீண்டியது.

கொஞ்சம் போல பகீர் என்றது.

இருவருமாக தீயைத் தீண்டியது போல நிமிர்ந்தனர்.

பார்வை நேராக கருவறைப் பக்கம்தான் சென்றது. சன்னதியில் நாகலிங்க ஸ்வாமி முன் ஒரு சித்த புருஷர் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

பாஸ்கரும் சுகுமாரும் பேசிக் கொண்டிருப்பதை அவர் பார்த்த மாதிரியே தெரியவில்லை.

அவரது கைகள் ஒரு கூடையிலிருந்து வில்வ இலைகளை எடுத்து அர்ச்சித்தபடி இருந்தன.

சுகுமாருக்கும், பாஸ்கருக்கும் பிடரியில் நெருப்பெறிந்தது.

"பாஸ்... என்னடா இது...? எப்படா வந்தார் இந்த மனுஷர்?"

''தெரியலியே... இவர்தான் அந்த சித்தரா?''

''மைகுட்நெஸ்... ரியலா பெரிய மிராகிளா இருக்கே.''

''கமான் கேமிராவை ஆன் பண்ணு. க்விக்...''

சுகுமார் அடுத்த நொடி கேமராவை தோளுக்கு தூக்கினான். வலது கண்ணை வியூ ஃபைண்டரில் பதித்தான். செவ்வகத்திரை அந்த சித்த புருஷர் அர்ச்சிப்பதை படம் பிடிக்க ஆரம்பித்தது.

கைகால்களிலெல்லாம் உதறல். ஒரு வித நடுக்கம்.

பாஸ்கர் பயந்தபோதிலும் கர்ப்பகிருக வாயில்வரை துணிச்சலாகச் சென்றான்.

அந்த சித்த புருஷரோ அர்ச்சனையைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

''ஓம் மகேஸ்வராய நம...
ஓம் மல்லிகார்ஜுனாய நம...
ஓம் மஞ்சுநாதாய நம...
ஓம் மார்க்கண்டேய அனுகீரஹாய நம...
ஓம் மகாதேவாய நம...''

நல்ல கணீர் குரல்...! கொக்குச் சிறகுபோல தாடி...! இடுப்பில் ஒரு முழத்துக்கு ஒரு காவி வஸ்திரம்! மாநிறத்தில் தேகம், கழுத்தில் உத்திராட்ச மாலைக் கூட்டம். நெருக்கமாக அவரைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த பாஸ்கரிடம் திகைப்பு.

'யார் இவர்? எங்கிருந்து வந்தார்? எப்படி வந்தார்?'

கேள்விகள் கொத்திப் பிடுங்கிற்று. அவரோ திரும்பியே பார்க்கவில்லை.

பாஸ்கருக்குள் திடும்மென்று புதிதாக ஒரு எண்ணம்.

அங்கிருந்து நகர்ந்து வெளியே சென்றான். பிரகாரத்தைப் பார்த்தான். கேமராவை தூக்கிக் கொண்டு சுகுமாரும் அவன் பின்னாலேயே சென்றான்.

பாஸ்கர் இப்பொழுது சாத்திய கதவை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். 'ஒரு வேளை அது திறந்திருக்கிறதா? அதன் வழியாகத்தான் இவர் வந்திருப்பாரா?'

கேள்விகள்... கேள்விகள்...

கதவு சார்த்தியது சார்த்தியபடி இருந்தது. வெளிப் பிரகாரத்தில் ஒரே ஒரு ட்யூப்லைட் மட்டும் போகட்டும் என்கிற மாதிரி எரிந்துகொண்டிருந்தது.

ஒரு ஈசல் பூச்சிகூட அதைச் சுற்றி பறக்கவில்லை.

அந்த அளவு நிசப்தம். காதில் அர்ச்சனைக் குரல் மட்டும் பிசிறின்றி கணீரென்று கேட்டது.

'ஓம் நடராஜாய நம...
ஓம் நாகார்ஜுனாய நம...
ஓம் நமச்சிவாய நம...
ஓம் நாகாபரணாய நம...'

பாஸ்கர் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். சுகுமார் திரும்பவந்து நிற்பது கோபத்தைத் தந்தது.

''நீ ஏண்டா வந்தே?''

''நீ எதுக்கு அங்க இருந்து வந்தே?''

''அந்த ஆள் எப்படி வந்திருப்பார்னு பாக்க வந்தேன்.''

''பூட்டினது பூட்டினமாதிரி இருக்கறத பார்த்தா வந்துருக்கறது நாகசித்தர்தானோ?''

''அப்படித்தான் தெரியுது. அவர் ஏன் நம்பளை கண்டுக்கவேயில்லைங்கறதும் ஆச்சரியமா இருக்கு...''

''இதோ பார் முழுக்க நனைஞ்சிட்டோம். முக்காடு எதுக்கு? வா! அவர் கிட்டயே போய் கேட்போம். அதையும் படமா எடுத்துப்போம்.''

''உனக்கு பயமா இல்லையே...''

''பயந்தா வேலைக்கு ஆகுமா?''

இருவரும் கேள்வியும் பதிலுமாய் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்ட அந்த நொடியில் அர்ச்சனைக் குரலும் சட்டென்று நின்று போனது.

இருவரும் ஒருவரை ஒருவர் அதிர்ச்சி குறையாமல் பார்த்துக் கொண்டார்கள்.

''வா பாஸ்... போய் பார்ப்போம்''- ஓடினார்கள். கல்படிகளில் தாவி ஏறி நந்தி இருக்கும் பிரகாரத்தைக் கடந்து கருவறைக்கு முன் உள்ள தரிசன மண்டபத்தில் நுழைந்த போது ஒரு நாகம் நாகலிங்க ஸ்வாமியின் மேல் படம் எடுத்தபடி நின்றுகொண்டு அவர்களையே பார்த்தது. இருவருக்கும் உள்ளங்கால் வழியாக ஆணி ஏறி மேல் பாதத்தை பொத்துக் கொண்டு கூர்முனையைக் காட்டி நின்றது போல இருந்தது. ஒரு க்ஷணம் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

''பாஸ்... பாஸ்...'' - சுகுமார் குரலில் தந்தி அடித்தான்.

''பேசாதே. முதல்ல இந்த காட்சியையும் படமா எடு...''

கிசுகிசு குரலில் கத்தினான் பாஸ்கர்.

ஸ்ஸ்ஸ்ஸ்...! பாம்பிடம் ஒரு வித சன்னமான சீற்றம்.

சுகுமார் கேமிராவை திரும்ப தோளுக்கு ஏற்றி வியூஃபைண்டர் வழியாகப் பார்த்தான்.

படம் விரித்த நாகம் ஒரு சாண் வட்ட அளவு சுழன்றபடி அவர்களையே பார்த்துக் கொண்டிருக்க, பாஸ்கர் சிலை யாகவே மாறிப் போயிருந்தான். ஒரு சில வினாடிவரை அவர்களை வெறித்த அந்த நாகம் சிலையை விட்டு மெல்ல இறங்க ஆரம்பித்தது.

தலைபாகம் கருவறை படிமேல் இருந்தபோது வால்பாகம் லிங்கத்தின் ஆவுடையார்மேல் இருந்தது. அவ்வ்வ்வளவு நீளம்!

இதயம் துடிப்பதற்காக திணறியது.

ரத்தம் ஷட்டரை உடைத்துக் கொண்டு பாயும் அணைக் கட்டு நீராட்டம் உடம்பெங்கும் ஓடுவது போல் தோன்றியது.

விறுவிறுவென்று நெளிந்த அந்த பாம்பின் தேகம் நந்தி பீடத்தை கடந்து கற்படிகளில் இறங்கி ஓடத் தொடங்கியது.

பின் தொடர இயலாதபடி இருவரது கால்களும் பின்னிக் கொண்டு விட்டன.

சுதாரித்து வெளியே வந்து பார்த்தபோது வெளிப் பிரகாரம் நிலவொளியில் பளிச்சிட்டது. அந்தப் பாம்பைக் காணவில்லை.

திரும்பவும் உள்ளே வந்து நாகலிங்க சொரூபத்தை பார்த்தனர். லிங்கத்தின் மேல் அந்த பாம்பு உரித்த சட்டை.

''சுகுமார் என்னடா இது அதிசயம்?''

''அதிசயம்தான்... அதிசயமேதான்.''

''பயமா இருக்குடா. திரும்ப வருமா பாம்பு?''

''தெரியல. வா போயிடலாம். முக்கியமான காட்சியைத்தான் படமா எடுத்துட்டோமே...?''

இருவரும் நடுக்கத்துடன் வெளியே வந்தனர்.

பால்நிலா ஒளி வழிகாட்ட வெளிப்பிரகாரத்தை சுற்றிவர ஆரம்பித்தனர். தப்பித்து வெளியேறும் வழியை கண்ணிரண்டும் தேடி அலைந்தது.

நல்லவேளையாக வெளிப்பிரகார மதிலை ஒட்டி ஸ்தல விருட்சமான வில்வமரம் ஒன்று மதில் சுவருக்கு மேல் வரை கிளைவிட்டு நீண்டிருந்தது.

இருவரும் அதில் ஏறினர். மதிலின் உச்சியையும் தொட்டனர். கேமிராச் சுமை அழுத்திற்று. அதை மறுபக்கம் முதலில் கீழே குதித்த சுகுமார் தூக்கிப் போடச் சொல்லி பிடித்துக் கொண்டான். பாஸ்கரும் கீழே குதித்தான்.

''அப்பாடா...!'' இருவர் குரலும் சேர்ந்தாற்போல் ஆயாசித்தன.

''எப்படியோ தப்பிச்சுட்டோம். அதே சமயம் யாரும் செய்யாததை செய்திருக்கோம்.'' என்று வியர்வையைச் சுண்டினான் பாஸ்கர்.

''ஆமாம். நம்ம துணிச்சலுக்கு ஒரு பெரிய விலையையும் வெச்சுட்டா லைப்லயும் செட்டிலாயிடலாம்..''

ஆளரவமில்லாத கோவிலின் புறத் தெருவில் இருவரும். கிசுகிசுத்தபடி நடந்தார்கள். வளைந்து திரும்பிய அது

அவர்களை கோவில் முகப்பிற்கு கொண்டு வந்து விட்டது. எதிரில் திருக்குளம்.

முகம் கழுவிக் கொண்டால் இதமாக இருக்கும் என்று தோன்றியது. அவ்வளவு வியர்வை!

சேர்ந்தே நடந்து படிகளில் இறங்கினர்.

குளத்து பச்சை நீரில் நிலா பழுதின்றித் தெரிந்தது.

ரம்யமாக இருந்தது.

முதலில் பாஸ்கர் நீரில் காலை வைத்தான். முகம் கழுவிக் கொண்டான். கேமிராவோடு நின்று கொண்டிருந்த சுகுமார் சட்டென்று கைகளை நீட்டினான். பற்றிக் கொண்ட பாஸ்கர் அவனையும் சேர்த்து இழுத்தான். அதில் இருவருமாய் சேர்ந்தே குளத்தில் விழுந்தனர். கேமரா சுகுமார் பிடியில் இருந்து நழுவி குளத்து நீரில் அடிப்பாகத்தை நோக்கி இறங்க ஆரம்பித்தது.

சுதாரித்து நீந்திய இருவரும் படியைத் தொட்டு நிமிர்ந்தபோது படியின் மேல் அந்த நாகம் படம் எடுத்தபடி அமர்ந்து கொண்டிருந்தது.

கையை விலக்குவதற்குள் அதன் பேரபோலா போன்ற வாய்ப்பாகம் ஒரு அம்புச் சீற்றம் போல அவன் கைமேல் தாக்கிக் கொத்தியது.

'வ்வேய்ய்ய்..!' அலறலுடன் பின்னோக்கி விழுந்த சுகுமாரைத் தொடர்ந்து பாஸ்கரும் அதே போல கொத்தப்பட்டு தண்ணீரில் விழுந்தான்.

விடிந்து விட்டது.

எட்டிப் பார்த்த சூரியனின் கிரணங்கள் குளத்தைத் தீண்டியபோது நீலம் பாரித்த ஓர் உடும்பாட்டம் பாஸ்கரும் சுகுமாரும் மிதந்து கொண்டிருந்தார்கள்!

5

சென்ட்ரல் லைப்ரரி! அவ்வளவாக ஆளரவமேயில்லாத ரீடிங் ஹாலில் ஒரு நாவலில் மூழ்கியிருந்தவள் எதிரில் ''ஹாய்'' என்றபடி போய் நின்றான் பிரசாத்.

நிமிர்ந்த சொர்ணா உற்சாகமாக பதிலுக்கு 'ஹாய்' என்றாள்.

''என்ன பண்ணிக்கிட்டிருக்கே சொர்ணா...?''

''பார்த்தா தெரியலை - புத்தகம் படிச்சுக்கிட்டிருக்கேன். ஆமா என்ன இது லைப்ரரிக்கே வந்துட்டே?''

''ஏன் வரக் கூடாதா?''

''நான்சென்ஸ்... நான் அந்த அர்த்தத்துல கேக்கல பிரசாத். ஒரு வகைல நீ வந்ததும் நல்லதா போச்சு''. சொன்னபடியே நாவலை மூடினாள்.

''வீட்ல சம்மதம் சொல்லிட்டாங்க. அதான் தேடி அலைஞ்சுட்டு - இங்க வந்தேன்'' பிரசாத் அழகான கண்களை சிமிட்டினான்.

அடுத்த நொடி எலக்ட்ரிக் மத்தாப்பாட்டம் முகம் மாறிய சொர்ணா அவனைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் ஒரு முத்தமும் தந்தாள்!

''ஏய் என்ன இது...'' கூச்சப்பட்டான் பிரசாத்.

''முத்தம்டா... எவ்வளவு பெரிய விஷயத்தை சொல்லியிருக்கே நீ! அதான் காஸ்ட்லியான ஒரு விஷயத்தை முதல்ல கொடுத்தேன். ஆமா உன் மாமா பொண்ணு, அத்தை பொண்ணு, அக்கா பொண்ணுங்கல்லாம் கார்னர் பண்ணுவாங்கன்னு சொல்லி பயந்துக்கிட்டிருந்தியே. என்ன ஆச்சு?'' அவளிடம் குஷி பிய்த்துக் கொள்ள ஆரம்பித்தது.

''காதல் தெய்வீகமானதில்லியா... அதான் ஒழிஞ்சு போன்னு விட்டுட்டாங்க.''

''ஒழிஞ்சு போன்னு விட்டாங்களா இல்லை உன்னோட மாட்டிக்கற கொடுமைல இருந்து தப்பிச்சா போதும்னு விட்டாங்களா?''

''என்ன கிண்டலா? அவங்கள்லாம் ஒதுங்கிக்கிட்டதுக்கு பின்னால இன்னொரு காரணமும் இருக்கு.''

''சொல்லு... சஸ்பென்ஸ்ல நிறுத்தாதே.''

''உன் ஆராய்ச்சிக்கு ரொம்ப பிடிச்ச காரணம்தான்!'' திரும்பவும் கண்களைச் சிமிட்டினான் பிரசாத்.

''விளக்கமா சொல்லு பிரசாத். என்ன அது?''

''எனக்கு ஜாதகரீதியா நாகதோஷம் இருக்காம். அதாவது கால சர்ப்பதோஷம்...''

''ஓ... அப்படி ஒண்ணு இருக்கா?''

''கேளு.. அந்த தோஷம் உள்ளவங்களுக்கு அவ்வளவு சுலபத்துல கல்யாணம் நடக்காதாம். நடந்தாலும் என்னோட தோஷம் வரப் போற மனைவியை அடிச்சுடுமாம்!''

''ஃபன்டாஸ்ட்டிக். அப்ப நீ என் கழுத்துல தாலிய கட்டினா நான் அவுட்டா?'' சொர்ணா படுகேஷுவலாகக் கேட்டாள். பிரசாத்தோ அவளை முறைக்க ஆரம்பித்தான்.

''சொல்லு... நான் அவுட் ஆயிடுவேனா?''

''அப்படின்னு ஜாதகம் சொல்லுது. அது சொல்றதை நானும் உன்கிட்ட சொல்லிட்டேன். நீ இதை நம்ப மாட்டேன்னு எனக்கு நல்லாத் தெரியும். இருந்தாலும்...'- இழுத்தான் பிரசாத்.

''என்ன இழுக்கறே?''

''ஒண்ணுமில்ல சொர்ணா. உன் பேரண்ட்ஸ் என்ன சொல்வாங்களோன்னுதான் யோசிக்கறேன்.''

அடுத்த வினாடி சொர்ணா அந்த ரீடிங் ஹாலே அதிரும்படி ஒரு சிரிப்பு சிரித்தாள். லைப்ரேரியன் கூட எட்டி ஒரு பார்வை பார்த்தார்.

''சரி சரி இங்கே இனி இருக்க வேண்டாம் - மாவீரன் அலெக்சாண்டர் தன்னோட ராஜபார்வையைப் பார்க்க ஆரம்பிச்சுட்டார். வா வெளிய போகலாம்.''

அவளிடம் இங்கிதம் இளமைத் துடிப்போடு வெளிப் பட்டது. அவனும் எழுந்து நின்றான்.

''இரு இந்த புத்தகத்தை ரேக்குல எடுத்த இடத்துலயே வெச்சுட்டு வரேன்.''

புத்தகத்தோடு நடந்தாள். சுடிதாரின் துப்பட்டா தரை உரச அவள் நடந்த விதத்தைப் பார்த்து தேனை நக்கின மாதிரி ஒரு சிலிர்ப்பை அடைந்தான்.

'அழகு, தைரியம் இரண்டும் கொண்டிருக்கும் இவளைப் போன்ற ஒரு பெண்ணைப் பார்க்க முடியுமா?'

கன்னத்தில் கை வைத்துக் கொண்டு யோசிக்கவும் ஆரம்பித்தான்.

புக்ஷெல் ராட்சஸ சைஸில் ஏராள புத்தகங்களுடன் நிமிறிக் கொண்டிருந்தது. சிலர் நின்று கொண்டு புத்தகங்களை உருவி எடுத்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். சொர்ணா தன் புத்தக எண்ணைப் பார்த்து எடுத்த இடத்தில் செருகும் போது ஒரு பெண் 'வீல்' என்று அலரும் சப்தம் கேட்டதும், திரும்பிப் பார்த்தாள்.

'பாம்பு பாம்பு' என்றபடி அந்தப் பெண் புத்தக ரேக்கையே தள்ளிவிட்டு ஓடிக் கொண்டிருந்தாள்.

''எங்க.. எங்க...?'' - எல்லோர் பார்வையும் ஒரு வட்டம் கட்டி சுழன்றபோது லைப்ரரியின் சாளரக் கம்பிமேல் நழுவும் ஒரு பாம்பின் வால் பாகம் மட்டும் ஒரு நொடி தெரிந்து பின்பு அதுவும் மறைந்து போனது.

ஓடி வந்து நின்று கை வளையல் சைசுக்கு கண்களைத் திறந்தபடி மிரண்டு போயிருந்தார் லைப்ரரியன்.

அவர் உதடு மட்டும் ''திரும்பவும் வந்துடிச்சா'' என்றது.

''திரும்பவும் வந்துடிச்சான்னா?''- சொர்ணாதான் கேட்டாள்.

''இந்த லைப்ரரிக்கு அந்த பக்கம் ஒரே புதர்மா. அங்க ஏகத்துக்கும் பாம்புங்க. அதுல ஒண்ணு அடிக்கடி லைப்ரரிக் குள்ள நுழைஞ்சு இப்படித்தான் அலறவிடுது.''

-படபடப்பாக அவர் சொல்லி முடிக்க சொர்ணாவுக்கு கோபம் சீறினாற்போல் வந்தது.

''புதரை வெட்டி சுத்தம் பண்ணலாம்ல?'' அலறினாள்.

''அது சரி... எனக்கு கொடுக்கற சம்பளத்துக்கு நான் அந்த வேலை ஒண்ணுதான் செய்யல. இனி அதையும் செய்துட வேண்டியதுதான்.'' என்றவர் சாளரத்தை தயக்கத்தோடு நெருங்கினார். அருகில் இருந்த புத்தக ரேக்கின் மேல் காலை வைத்து மேலேறியவர் சாளரக் கதவையும் இழுத்து மூட ஆரம்பித்தார். கதவு இறுகிப் போய் பிடித்துக் கொண்டிருந்தது. எவ்வளவு இழுத்தும் இறுக்கம் தளராமல் அவரை பெருமூச்சு விட வைத்தது.

பார்த்துக் கொண்டிருந்த பிரசாத் அவரை ஒதுங்கச் சொல்லிவிட்டு முயற்சி செய்ய ஆரம்பித்தான். அப்படியே பார்வையும் வெளியே புதர்களின் பக்கமாக போனது.

ஊமத்தையும் முள்ளுக்கரம்பையும் உரம் போட்டாற் போல் தழைத்திருந்தன. அதில் ஒய்யாரமாக வாலை வளைத்துப் போட்டிருந்த நிலையில் நிமிர்ந்து ஒரு எம்பு எம்பியது சற்று முன் வாலை மட்டும் காட்டியிருந்த அந்த சர்ப்பம்.

அது பார்வையில் பட்ட நொடி அவன் வயிற்றில் மண் வெட்டியால் வெட்டியது போல ஒரு பயப்பள்ளம்.

அப்படியே அதிர்ச்சியோடு கதவை அடைப்பதை விட்டு விட்டு திரும்ப கீழே குதித்தான் பிரசாத்.

''என்ன பிரசாத்.. முடியலையா?''

''நோ சொர்ணா... அந்த பாம்பு.. அந்த பாம்பு....''

''எங்க?'' - அவன் சாளரத்தை நோக்கி கைகளைக் காட்ட, துணிச்சலாக ரேக்கின் மேல் காலை வைத்து ஏறி வெளியே பார்த்தாள் சொர்ணா.

'ஸ்ஸ்ஸ்...! சின்ன கடுகு மணிக் கண்களில் ஒருவித வெறி மின்ன. அந்த நாகம் அவளையும் பார்த்தது. ஜான்சனின் பாம்புப் பண்ணையில் பார்த்த அதே நாகம். ஜான்சன் தன் பண்ணைப் பாம்புகளின் உடலில் ஒருவித ரசாயன மையை உடம்பின் மையத்தில் ஒரு அடையாளத்துகாக பூசி வைப்பது வழக்கம். அந்த மையோடு தெரிந்த அதன் உடலும், அதன் படம் விரித்த சீற்றமும் அவளையும் ஒரு மிரட்டு மிரட்டிற்று. அடுத்த கணம் ரேக்கிலிருந்து குதித்தாள்.

''கமான் பிரசாத் இனி நாம இங்க இருக்க வேண்டாம்.''- அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே ஓடத் தொடங்கினாள்!

6

சிணுங்கிய தொலைபேசியை எடுத்து காதைக் கொடுத்தார் டாக்டர் ஜான்சன்.

''டாக்டர் நான் சொர்ணா பேசறேன்.''

''சொல்லும்மா என்ன விஷயம்?''

''நம்ப பண்ணைல மிஸ்ஸான அந்த பாம்பை நான் இப்ப பார்த்தேன்.''

''நிஜமாவா?''

''ஆமாம். சென்ட்ரல் லைப்ரரிக்கு போயிருந்தேன். அங்க லைப்ரரியை ஒட்டி ஒரு புதர்ல அது இருக்கு.''

''தி சேம் ஸ்னேக்?''

''எக்ஸாக்ட்லி. நீங்கதான் உங்க பாம்புகளுக்கெல்லாம் ஒருவித ரசாயன மையை பூசுவீங்களே. அதை வெச்சு கண்டுபிடிச்சேன்.''

''ரியலி?''

''உடனே உங்க ஆட்களை அனுப்பி அதை பிடிக்கப் பாருங்க. அதான் போன் பண்ணிக்கிட்டிருக்கேன்.''

''நான் இப்பவே ஸ்டேபன்சனை அனுப்பறேன். ஆமா நீ எங்கிருந்து பேசறே?''

''லைப்ரரிக்கு எதிர் வரிசைல இருக்கற ஒரு ஹோட்டல்ல இருந்து.''

''எல்லாம் சரி. பாம்பை முதல்ல பார்த்தது யார்? நீயா இல்லை வேற யாராவதா?''

''எதுக்கு கேக்கறீங்க...?''

''அது காணாம போனது என்கிறதே என் வரைல ஒரு அதிசயம். அது திரும்ப உன் கண்ணுல பட்டுருக்குங்கறத அதைவிட பெரிய அதிசயமா நினைக்கறேன். அதான் கேட்டேன்.''

''லைப்ரரில ரீடிங் ரூம் வரைக்குமே அது வந்துடிச்சு. ஒரு பொண்ணு பார்த்துட்டு கத்தினா. அப்புறமாதான் நான் பார்த்தேன்.''

''எப்படிம்மா.. உன்னைத் தேடி வந்த மாதிரி ஃபீல் பண்றீயா, இல்லை தற்செயலா நடந்ததா நினைக்கறீயா?''

''எனக்கு சொல்லத் தெரியல டாக்டர். முதல்ல அதைப் பிடிங்க. அப்புறமா மற்ற விஷயங்களைப் பேசுவோம்.''

-செல்லை முடக்கினாள் சொர்ணா. ரெஸ்ட்டாரண்டின் ஏ.சி. அறையை மீறி கொஞ்சம் வியர்த்திருந்தாள். எதிரில் கலக்கமாக பிரசாத்.

''நீ ஏன் உம்முன்னு உட்கார்ந்திருக்கே பிரசாத்?''

''உட்காராம... நீ சொல்றதை எல்லாம் கேட்டா தெலுங்கு டப்பிங் படம் பார்க்கற மாதிரி இருக்கு.''

''அவ்வளவு ஜாலியாவா இருக்கு?''

''ஸ்டுப்பிட். பி சீரியஸ்! ஏ சொர்ணா நல்லா யோசிச்சு சொல்லு. நீயும் நானும் பார்த்த பாம்பு பண்ணைல இருந்து தப்பிச்ச பாம்புதானா?''

''எதுக்கு இவ்வளவு ஸ்ட்ரெஸ் பண்ணி கேக்கறே? நான்தான் தெளிவா சொன்னேன்ல...''

''அப்ப அது பழிவாங்கத்தான் வந்துருக்குமோ?''

''தெரியும் பிரசாத். நீ இப்படித்தான் எசகு பிசகா எதையாவது கேப்பேன்னு எனக்கு நல்லாத் தெரியும். நானே அதை அப்படியெல்லாம் எடுத்துக்கலை. நீ ஏன் கிடந்து அலட்டிக்கறே?''

''எப்படி சொர்ணா இப்படி உன்னால இவ்வளவு ஸ்போர்ட்டிவா, டேக் இட் ஈஸியா எடுத்துக்க முடியுது?''

''கடவுளே.. நான் நானா இருக்கேன். அவ்வளவுதான். இதுக்கு ஒரு வியப்பும் பாராட்டும் ரொம்ப வேஸ்ட் பிரசாத். நீ ரொம்ப அலட்டிக்கறே?''

''அலட்டிக்கலை சொர்ணா. உனக்கு எப்படி புரிய வைப்பேன்? லுக் சொர்ணா! ஒருக்கால் அந்த பாம்பு பழிவாங்க வந்திருந்தா என்ன பண்ணியிருப்பே?''

''என்னடா பண்ண முடியும், அதுகிட்ட ஐ ஆம் சாரி ஸ்டேனெக். உன் குழந்தையை ஐ மீன் உன் குட்டி பாம்பை நான் கொல்லணும்னு கொல்லலை. தட் வாஸ் அன் ஆக்ஸிடென்ட்டுன்னு சொல்வேன்.''

''அது கேக்குமா?''

''என்னை ஞாபகம் வெச்சு இவ்வளவு பாப்புலேஷன் உள்ள சென்னைல அதால தேடி கண்டுபிடிச்சு வர முடியும்னா, நான் சொல்றதையும் கட்டாயமா கேட்டுக்கும்.''

''என்னவோ சொர்ணா ஆனாலும் நீ ரொம்ப பெக்கூலியர். எதுக்கும் கவலைப்படமாட்டேங்கறே. எல்லோரும் ஒரு வழில போனா, நீ தனியா ஒரு பாதைல போறே! உன்னைப் புரிஞ்சுக்கறதே ரொம்ப கஷ்டமா இருக்கு.''

''இப்ப நீ என்னதான் சொல்றே.. அப்ப நீ இவ்வளவு நாளா என்னைப் புரிஞ்சுக்காமலே காதலிச்சிருக்கேன்னு சொல்றியா?''

''அப்படி இல்ல. உன் தைரியம், தனித்தன்மை இதெல்லாம் எனக்கு ரொம்ப பிடிச்ச ஒண்ணு. அதுதான் நான் உன்னை நேசிக்கவே காரணம். ஆனா இப்ப அதுவே எனக்கு பெரிய பயத்தை தருது.''

"என்னடா இப்படி தொடை நடுங்கறே. பாம்பு பழிவாங்கும்னு நீயுமா நம்பறே?"

"நடக்கறதை பார்த்தா நம்பாம இருக்க முடியலையே..."

"இதோ பார் பிரசாத் நீ ரொம்ப அலட்டிக்கறே... டேய் நாம இன்டர்நெட் பீப்பிள்டா. ஸ்பேஸ் சென்டர்ல காலனி கட்டி அங்க குடிபோகப்போற ஒரு கிரேட் ஹ்யூமன் சொஸைட்டில இருக்கறவங்க நாம. தப்பித் தவறிகூட இந்த மாதிரி முட்டாள்தனமான விஷயங்களை கன்சிடர் பண்ணக்கூடாது. தெரிஞ்சுக்கோ."- மேடைப் பிரசங்கி மாதிரி பேசிவிட்டு மஷ்ரூம் சூப்பை சுவைக்க ஆரம்பித்தாள்.

பிரசாத் அரைச் சமாதானம் ஆகியிருந்தான். தன்முன் உள்ள சூப்பை ஸ்பூனால் கலக்கினான்.

"கலக்காதே குடி..."

- அவள் அதட்டினாள். அவனும் இரண்டு மடக்கு குடித்தான். பிறகு திரும்பவும் பழைய விஷயத்துக்கே வந்தான்.

"ஆமாம் உன் ரிசர்ச் எப்ப முடியும்?"

"எதுக்கு கேக்கறே?"

"சீக்கிரமா முடிச்சு மூட்டையை கட்டு, அப்பதான் நம்ம கல்யாணம் நடக்கும்."

"கல்யாணத்துக்கும் ஆராய்ச்சிக்கும் என்னப்பா சம்பந்தம்?"

"நிறைய இருக்கு. பாம்புகளை பற்றின நம்பிக்கைகளை உடைக்கறதுதான் உன் ரிசர்ச்சோட நோக்கம். ஆனா என் குடும்பம் அதுக்கு நேர் எதிரானது."

"அதான் தெரியுதே... நாக தோஷம்ன உடனே உனக்கு லைனை க்ளியர் பண்ணி கொடுத்துட்டு எல்லா பெண்களும் ஓடிட்டாங்களே."

"இதோ பார் அது அவங்க நம்பிக்கை. உன் ஃபேமிலில என்ன சொல்வாங்கன்னு நீ சொல்லவே இல்லையே...?"

"என் ஃபேமிலில நான் சொல்றதுதான் சட்டம். இன்ஃபாக்ட் இந்த ஜாதகம், ஜோசியம் பத்தியெல்லாம் என் வீட்டு வேலைக்காரிகூட கவலைப்பட்டது கிடையாது. நாங்க அதைப்பத்தி எல்லாம் நினைக்கறதே இல்லை."

"அப்ப நம்ம கல்யாணத்துக்கு என் ஜாதக விஷயம் ஒரு தடையா இருக்காதுன்னு சொல்லு."

"முட்டாளே... நீ என்னை ஜாதகம்லாம் பார்த்தா காதலிச்சே... எந்த காதலர்கள் ஜாதகம்லாம் பார்த்து வெச்சுக்கிட்டு காதலிக்கிறாங்க? ஏன் இப்படி பித்துக்குளி மாதிரி கேள்வியெல்லாம் கேக்கறே...?"

-சொர்ணாவின் குரலில் சப்தம் அதிகரித்தது. அருவி நீராட்டம் சரிந்து முன் விழுந்த கூந்தலை காதோரம் ஒதுக்கி அடக்கியவளாக எழுந்து நின்றாள்.

அவனும் சூப்பை குடிக்காமலே எழுந்தான். அரை வெளிச்சத்தோடும் ஸ்டீரியோ கசிவோடும் இருந்த அந்த அறையை விட்டு இருவரும் வெளியே வந்தனர்.

வெய்ட்டர் பில்லோடு ஓடிவந்தான். அவன் வசம் அலட்சியமாக ஒரு நூறு ரூபாய்த் தாளை விட்டெறிந்து விட்டு ஹோட்டலுக்கு வெளியே வந்தாள். அவளது ஸ்கூட்டியும் அவனது காரும் ஒட்டிக்கொண்டு நின்று கொண்டிருந்தன. ஒரு மாதிரி இறுக்கம் நிலவிய அந்த வேளையில் அவளது செல்ஃபோன் அலறியது.

எடுத்துக் காதைக் கொடுத்தாள்.

டாக்டர் ஜான்சன்தான் பேசினார்.

"சொர்ணா, அந்த பாம்பு அங்கு இல்லைம்மா..."

"நல்லா தேடி பார்த்தாங்களா டாக்டர்?"

"நல்லாவா.. இண்டு இடுக்கு விடலை. இன்ஃபாக்ட் சம்பந்தமே இல்லை. இரண்டு சாரை, ஒரு பச்சை, ஒரு கட்டு விரியன் கிடைச்சிருக்கு. ஆனா, ஒரு கோப்ராகூட இல்லை. நல்லா ஞாகப்படுத்திச் சொல்லும்மா, நீ பார்த்தது கோப்ராவைதானே?"

''அப்சல்யூட்லி ஐ ஆம் ரைட் டாக்டர். அது படம் எடுத்து வெறிச்சிச்சு. சென்டர்பாடில பிளாக் கிரீன் கலர்ல நீங்க அப்ளை பண்ணியிருந்த கெமிக்கல் மையும் என் கண்ணுல பளிச்சின்னு பட்டுச்சு.''

''தென் அது அங்கிருந்து வேற எங்கயாவது போயிருக்கணும். இட்ஸ் ஓ.கே. உனக்கு ஒண்ணும் பயமில்லையே?''

''எனக்கு என்ன பயம்? நான் அப்படியெல்லாம் தொடை நடுங்கற பொண்ணு இல்லை டாக்டர். இந்த சம்பவத்தை ஒரு சோக இன்சிடென்டா மட்டும்தான் பாக்கறேன்.''

''வெரிகுட்... ரியலி ஐ ஆம் ப்ரவுட் ஆஃப் யூ மைடியர் சொர்ணா. உன்னை மாதிரி லட்சத்துல ஒரு பொண்ணைத்தான் பார்க்க முடியும். சரி எப்ப பண்ணைக்கு வரே...?''

''டயம் கிடைக்கும்போது வரேன் டாக்டர்.''

''ஓ.கே.ம்மா பை. ஹேவ் எ நைஸ் டே''- சொர்ணா செல்லை முடக்கினாள். நிமிர்ந்தாள். பிரசாத் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

''என்ன மேன் உன்னோட நெக்ஸ்ட் புரோக்ராம்?''

''நத்திங்... இன்னிக்கு பூரா உன்கூட ஊரைச் சுத்தணும். இஃப் பாசிபிள், உன் வீட்டுக்கு வந்து உன் அப்பா அம்மாவை பார்த்து நம்ம கல்யாண டாபிக்கை ஓப்பன் பண்ணணும்.''- அவன் கை கட்டிக் கொண்டு பேசிய விதம் அவளுக்கு சிரிப்பைத் தந்தது.

''ஆமா ஆபீஸ்க்கு இன்னிக்கு மட்டமா?''

''யெஸ்... இன்னிக்கு நம்ம கல்யாண விஷயத்துக்கு ஒரு முடிவு கட்டிட்டுதான் மத்த வேலைகள பாக்கப்போறேன்.''- அவன் சொல்லவும் அதைக் கேட்டு உதட்டைச் சுழித்தபடி ரசித்தாள்.

''சரிப்பா. இந்த ஸ்கூட்டில நான் என் வீட்டுக்கு வந்துடறேன். நீ கார்ல வந்துடறியா?''

''சேர்ந்தே போகலாமே.''

''இடியட். இதை என் தலைல வெச்சுக்கிட்டா வரமுடியும்?''

''உன்னை யார் தலைல வெச்சுக்கிட்டு வரச்சொன்னா... இங்கேயே இருக்கட்டும். அப்புறமா வந்து எடுத்துக்கலாம்.''

''நத்திங் டூயிங். இந்த ஸ்கூட்டிதான் என் முதல் காதலன். இதை என்னால பிரிய முடியாது. நீ கார்ல வா. நான் பின்னாடியே வரேன்.'' - சொல்லிவிட்டு ஒயிலாக அதைக் கிளப்பினாள். அலறிக் கொண்டு கிளம்பிய அதுவும் ஒரு புதிய புயலாட்டம் சீறிக் கொண்டு கிளம்பியது. பிரசாத் பின் தொடர்ந்தான். டிராஃபிக்குகளில் சொர்ணா துளியும் அச்சமில்லாத ஒரு வேகத்தை காட்டினாள். ரசித்தபடியே பின் தொடர்ந்து கொண்டிருந்த பிரசாத்துக்கு அவளது வேகம், தைரியம் எல்லாமே அசாத்யமான ஒன்றாக தெரிந்தது.

சட்டென்று தன்னுடைய ஜாதக நினைப்பும் கவ்விப் பிடித்தது.

''இந்த ஜாதகத்துக்கு கல்யாணம்னு ஒண்ணு நடக்கறது ரொம்ப அபூர்வமான விஷயம். மீறி நடந்தாலும் அந்த கல்யாணத்துக்கு அதிகபட்ச ஆயுள் மூணு மாசம்தான். ஏன்னா அந்த அளவுக்கு காலசர்ப்ப தோஷம் இருக்கு. ஜாதகம் பார்த்து கல்யாணம் பண்றது நல்லது. இல்லாட்டி ரொம்பவும் விபரீதங்களை வாழ்க்கைல சந்திக்க வேண்டிவரும்.''-

ஜோசியர் அப்படிச் சொன்னதாலோ என்னவோ நான்தான் அத்தானுக்கு ஏற்ற ஜோடி என்றும், சொந்தம் விட்டுப் போய் விடக்கூடாது என்றும் சொல்லிக் கொண்டிருந்த ஒவ்வொரு வரும் நைஸாக கழட்டிக் கொண்டார்கள். நல்லவேளையாக எதற்கும் துணிந்த சொர்ணா இருக்கிறாள். சொர்ணாவை சந்தித்தது கூட அவன் வரையில் ஒரு அட்வென்சர்தான். அதையும் நினைத்துப் பார்க்கிறான். கடலுக்கடியில் நீந்திச் செல்லும் டால்ஃபின் மீனை படம் பிடித்தபடியே பின் தொடரும் ஒரு நீர் மூழ்கியாட்டம் சாலையில் முன் செல்லும் அவளை பின் தொடர்ந்தபடி இருக்கிறது அவனது கார்...

அவன் நினைவுகளும் பின்னோக்கிச் செல்கின்றன!

7

கம்ப்யூட்டர் கல்வியில் ஒரு புராஜக்ட் ஒர்க்குக்காக லாம்ப்சன் அண்ட் லாம்ப்சன் கம்பெனிக்கு போன இடத்தில் தான் முதன் முதலாக அவளைச் சந்தித்தான்.

கிட்டத்தட்ட பதினைந்து பேர் பிராஜக்ட் ஒர்க் செய்ய வந்த இடத்தில் சொர்ணா மட்டும் பளிச்சென்று தனியாக தெரிந்தாள்.

செகண்ட் ஷிப்டில் ஒர்க் செய்தால் கொஞ்சம் வசதியாக இருக்கும் என்று கம்பெனியில் சொன்னபோது ஒருவர் கூட அதற்கு உடன்படவில்லை.

இரவு 12 மணிக்கு ஷிப்ட் முடியும். அதன்பின் ஒரு சுடுகாட்டைக் கடந்துதான் ஊருக்குள் வரவேண்டும். சதா ஏதாவது ஒரு பிணம் எரிந்தபடி இருக்கும். மிகப் பழமையான சுடுகாடு அது.

ஷிப்ட் ட்யூட்டி பார்க்கும் தொழிலாளர்களே இரவு கம்பெனி ரெஸ்ட் ஷெட்டில் படுத்துத் தூங்கிவிட்டு விடிந்த பிறகுதான் கிளம்பிச் செல்வார்கள்.

சொர்ணா இது எதையுமே கண்டு கொள்ளவில்லை.

துணிச்சலாக இரண்டாவது ஷிப்டிற்கு வந்தாள்.

ஷிப்ட் ஃப்ளோரே அவளை ஆச்சரியமாகப் பார்த்தது.

"மேடம்! நைட் எப்படி வீட்டுக்கு போவீங்க...?"

"வழக்கம் போல என் ஸ்கூட்டிலதான்."

"ஐய்யோடா.. மேடம் வழில காட்டுமடை சுடுகாடு இருக்கு. குடுகுடுப்பைக்காரனே போகப் பயப்படுவான்."

"எனக்கு பயமெல்லாம் கிடையாது... ஐ டோன்ட் கேர்."

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க. அது ரொம்ப டேஞ்சரான இடம். பலபேருக்கு பேய் அடிச்சிருக்கு."

"அடிக்கும் அடிக்கும். ஆமா எதால அடிக்கும்? கையாலையா? காலாலையா?"

"சரிதான் உங்களுக்கு பட்டாதான் புத்தி வரும். எப்படியோ போங்க. தலையெழுத்தை யாராலா மாத்த முடியும்?" - ஆளாளுக்கு பேசிப் புலம்பிவிட்டு போய்விட்டார்கள்.

பிரசாத்தும் விடவில்லை.

"மேடம் யோசியுங்க." என்றான்.

"இப்படி சொல்ல உங்களுக்கு வெட்கமாயில்லை?"

"நான் நடைமுறையை சொன்னேன். இதுல வெட்கப்பட என்ன இருக்கு?"

"ஆம்பளையா லட்சணமா பேசுங்க மிஸ்டர் பிரசாத். பேய் பிசாசுங்கறதெல்லாம் மனசுலதான் இருக்கு. ஒரு நாளைக்கு எவ்வளவோ உயிர் சாகுது. அவ்வளவும் பேயா பிசாசா அலைய ஆரம்பிச்சா நாம் வசிக்கறதுக்கு ஒரு முழுமிடம் இந்த பூமியில இருக்காது. அதாவது உலகம் தோன்றின நாள் முதலா சராசரியா ஒரு நூற்றாண்டுக்கு இருபது கோடி பேர் விதம் பல நூறு நூற்றாண்டுகளுக்கு செத்தவங்களை கணக்கு வெச்சா எட்டாயிரம் கோடி பேர் பிறந்து இறந்திருக்கறதா ஒரு புள்ளி விவரம் சொல்லுது. நம்ம பூமியோட நிலப்பரப்புல இந்த எட்டாயிரம் கோடி பேர் நிற்கக்கூட இடம் கிடையாது. தெரியுமா உங்களுக்கு?" சொர்ணா ஒரு பெரிய புள்ளி விவரக் கணக்கே போட்டு சொல்லி முடித்தாள். பிரசாத் கிறுகிறுத்துப் போனான்.

"அப்ப பேய் பிசாசெல்லாம் பொய்யா?" கேட்டான்.

"நான் உங்களைக் கேட்கறேன். உண்மையா?"

"அப்படித்தான் நான் நினைக்கறேன்."

"சரி ஒரு பேயையாவது எனக்கு அறிமுகப்படுத்தி வையுங்களேன்."

''இது... இது...''

''அது.... உங்களால முடியாதுன்னு தெரியும் மிஸ்டர் பிரசாத்.''- இருவரின் சம்பாஷணைக்கு இடையே ஒருவன் குறுக்கிட்டான். லஷ்மண்!

லாம்ப்ஸன் அண்ட் லாம்ப்ஸன் கம்பெனி அதிபர் விட்டல்ராவின் ஒரே மகன். சொந்த கம்பெனியிலேயே தொழில் கற்றுக் கொள்வதற்காக ஒரு அப்ரன்டீஸாக இருந்து வருபவன்.

''ஹலோ.. ஏதோ சுவாரஸ்யமான டிஸ்கஷன் நடந்துகிட்டு இருக்குபோல தெரியுதே...?''

''அஃப்கோர்ஸ் மிஸ்டர். லஷ்மண். உங்க ஃபேக்டரியை நீங்க சுடுகாட்டுக்கு இந்த பக்கமா கட்டி வெச்சிருக்கீங்க. அதைப் பார்த்து ரொம்ப பேர் பயப்படறாங்க. பர்ட்டிகுலரா ஷிஃப்ட் எம்ப்ளாயீஸ் வேலைக்கு வரவே பயப்படறாங்க. ஆனா சொர்ணாவோ பேயும் பிசாசும் வெறும் கற்பனை தான்னு சொல்றா. அதான் பேசிக்கிட்டிருக்கோம்.''

''ஈஸ் இட்? வெரிகுட் மிஸ். சொர்ணா. உங்க தைரியத்தை நான் பாராட்டறேன். ஆமா இப்படி பேசற நீங்க தனியா நடுராத்திரில சுடுகாட்டுக்கு போய் அங்க எரிஞ்சுகிட்டிருக்கற ஒரு சிதைல இருந்து ஒரு எலும்புத் துண்டை எடுத்துக்கிட்டு வான்னா வருவீங்களா?''

''அந்த எலும்புத் துண்டை வெச்சுக்கிட்டு நீங்க என்ன பண்ணப் போறீங்க மிஸ்டர். லஷ்மண்.''

''அதுல சூப் போட்டா சாப்பிட முடியும்? உங்க தைரியத்துக்கு ஒரு பரீட்சைதான்.''

''எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனா உங்களுக்காக நீங்க பாராட்டணும்கறதுக்காகவெல்லாம் என்னால சுடுகாட்டுக்கு போய்ட்டு வரமுடியாது.''

''சரி என்ன வேணும்னு சொல்லுங்க. ஐ வில் கிவ் யூ.''

''சொர்ணா வேண்டாம்... இது விபரீத விளையாட்டு.''

''ஒரு புடலங்காயும் கிடையாது. மிஸ்டர். லஷ்மண் இப்பதான் வழிக்கே வர ஆரம்பிச்சிருக்காரு. நீங்க என்ன பிரசாத். கொஞ்சம் சும்மா இருங்க. ஓகே மிஸ்டர். லஷ்மண். என்ன தரமுடியும் உங்களால?''

''வாட் யூ வான்ட் யூ டெல்மி.''

''எனக்கு காசு, பணம், புகழ், பாராட்டு எதுவும் வேண்டாம். நீங்களும் பயப்படாம என்னைப் போலவே சுடுகாட்டுக்கு போய் ஒரு எலும்புத் துண்டை கொண்டுகிட்டு வந்துட்டா போதும்.''

''வாட்?''

''என்ன வாட்...? ஒரு பொம்பள நான் போய் எடுத்துகிட்டு வரும்போது ஆண்பிள்ளை சிங்கம் உங்களுக்கென்ன?''

- சொர்ணா தான் தப்பித்துக் கொள்வதற்காகத்தான் அப்படி ஒரு மடக்கு மடக்குவதாக பிரசாத் அப்பொழுது நினைத்தான். ஆனால் லஷ்மணோ ''ஓ.கே.'' என்று கூறிவிட்டான்.

''இப்ப ஓ.கே. சொல்லிட்டு அப்புறமா பயந்தாலோ, பின் வாங்கினாலோ நான் சும்மா இருக்க மாட்டேன். இந்த கம்பெனியோட வருங்கால எம்.டி.ன்னு நினைச்சு போனா போகுதுன்னுல்லாம் விடவும் மாட்டேன். போஸ்டர் அடிச்சு ஒட்டிடுவேன்.''

-சொர்ணா தன் கண்டிஷனில் மிரட்டினாள். பிரசாத்துக்கு பரபரப்பாகிப் போனது.

''இதோ பாருங்க, இப்படியெல்லாம் ஒரு போட்டி வேண்டவே வேண்டாம். சொர்ணா சொன்னா கேளுங்க. இப்படியெல்லாம் பந்தயம் கட்டிக்கறது ஆபத்து. அது நல்லதல்ல...''

''லுக் மிஸ்டர். பிரசாத். பந்தயம் நான் கட்டல. பேய் பிசாசு இருக்கு, இல்லைன்னும் நான் சொல்லல. நான் என்

பாட்டுக்கும் என் வழில வந்து போய்கிட்டிருக்கறவ. போட்டி பந்தயம்னு வந்தவர் இவர்தான். இவர்கிட்ட சொல்லுங்க.''

''மிஸ்டர். லஷ்மண். என்ன இது...? வேண்டாம் விட்ருங்க.''

''நோ மிஸ்டர். பிரசாத். நான் எப்பவும் முன் வெச்ச காலை பின்னால வைக்கமாட்டேன். ஒரு பொட்டச்சிக்கு இவ்வளவு தைரியம் இருந்தா, ஆம்பளைங்க நமக்கு எவ்வளவு இருக்கணும்? யோசியுங்க.''

- லஷ்மண் பேச்சுவாக்கில் பொட்டச்சி என்று அவளது இனத்தை குறிப்பிட்டு மட்டப்படுத்தி பேசியது சொர்ணாவின் மனதில் நெருப்பை மூட்டியது.

''மிஸ்டர் ஆம்பள சிங்கம், இனி நீங்களே தடுத்தாலும் நான் கேக்கப் போறதில்ல. இன்னிக்கே கூட நான் அந்த சுடுகாட்டுக்கு போய் எலும்பை எடுத்துக்கிட்டு வந்துடறேன். நீங்க தயாரா?''

''ஓயெஸ்... நான் ரெடி'' - லஷ்மண் பதிலோடு கை மணிக்கட்டைப் பார்த்தான். இப்ப மணி நாலாகுது. இன்னிக்கு நைட் 12 மணிக்கு நீங்க போறீங்க. எலும்பை எடுத்துக்கிட்டும் வரீங்க. பை தபை எலும்பை எரியற சிதைல இருந்து எடுத்துக் கிட்டு வரணும். நான் ஒரு ஹேண்டி கேமிரா தருவேன். அதுல டெட்பாடி எரியறதை ஷூட் பண்ணி எடுத்துக்கிட்டு வந்தும் காட்டணும். நீங்க பாட்டுக்கு எதோ ஒரு எலும்புத் துண்டை எடுத்துக் கிட்டு வந்து காட்டி என் காதுல பூ சுத்திடக்கூடாது.''

''இந்த பூ சுத்தறது, காது குத்தறது எல்லாம் உங்க ஆண்வர்க்கத்தோட வேலை. சொன்ன சொல்லுல நான் துளிகூட பிசுகமாட்டேன்.''

''ஸோ.. ஹேவ் யூ பிரேவ் ஹார்ட். ஈஸீட்?''

''ஐ டோண்ட் நோ.. பட் ஐ நோ ஒன்திங். பாஃபெக்ட்லி யூ ஆர் நாட் எ பிரேவ்.''

சொர்ணா அவனை வார்த்தைகளைத் தூக்கி எரிந்தாள். அவன் அப்பொழுதே பரபரப்பாக நகம் கடிக்கத் தொடங்கிவிட்டான்.

பிரசாத்துக்குதான் தர்ம சங்கடமாகிப் போனது.

ட்யூட்டி முடிந்தும் வீட்டுக்கு போகாமல் ஆபீசிலேயே கிடந்தான்.

இரவு பன்னிரெண்டு மணியும் வந்தது.

படுகேஷுவலாக சொர்ணா தன் ஸ்கூட்டியை கிளப்பிக் கொண்டு புறப்பட்டாள். தோளில் ஹேண்டி கேமரா. லஷ்மண் பார்த்துக் கொண்டே இருந்தான்.

செக்யூரிட்டி கார்டுகூட பயந்தார்.

''மேடம் விடிஞ்சு வீட்டுக்கு போகலாமே...''

''இல்ல சார்.. நான் இப்ப வீட்டுக்கு கூட போகலை. நீங்க எல்லாம் நினைக்கவே பயப்பட்ற சுடுகாட்டுக்குதான் போறேன். போய்ட்டு வந்து உங்க மத்த அட்வைஸ்களை கேட்டுக்கறேனே...''

- செக்யூரிட்டி கார்டுக்கு நன்கு பெரிய வீரப்ப மீசை. அது தொங்கிப் போகுமளவு ஒரு போடு போட்டுவிட்டு கிளம்பிச் சென்றாள்.

பிரசாத்துக்கு இதயம் தாறுமாறாக துடிக்க ஆரம்பித்தது. ஒரு பெண்ணுக்கு இத்தனை தைரியம் கூடாது என்று மட்டும் ஒரு ஆயிரம் தடவையாவது சொல்லிக் கொண்டிருப்பான்.

நேரமும் குழாய் நீர்ச்சொட்டு போல காலாவதியாகி மணி ஒன்றில் வந்து நின்றது. சாலையிலும் ஸ்கூட்டியின் ஹெட்லைட் வெளிச்சம் நன்கு தெரிந்தது. சந்தேகமேயில்லை சொர்ணாவேதான்!

ஒரு புயல் காற்றுப் போன்ற வேகத்துடன் அந்த இரவில் செக்யூரிட்டி கேட்டைக் கடந்து உள்ளே பிரவேசித்தாள். காத்துக் கொண்டிருந்த பிரசாத்தும், லஷ்மணும் ஆவலாக ஸ்கூட்டர் ஸ்டாண்டிற்கே வந்தார்கள். வண்டியை அழகாக

பார்க் செய்து விட்டு இருவர் பக்கமும் திரும்பினாள். ஒரு கையில் கேமிரா மறுகையில் ஒரு சுருட்டிய பாலிதீன் தாள்.

ஒரு சிகரெட்டோடும் அதன் புகையோடும் லஷ்மண் அவளை ஏறிட்டான்.

அவன் எதிரில் கேமராவை நீட்டினாள். அப்படியே பாலிதீன் தாளையும் தந்தாள். வாங்கிப் பிரித்தான். இதமான சூட்டோடு ஒரு எலும்புத் துண்டு. பகீர் என்றது. அடுத்த நொடி தொடக்கூடாததை தொட்டுவிட்டாற்போல அதை தூக்கி எரிந்தான். பார்வையாலேயே அவள் 'எல்லா வற்றையும் திட்டமிட்டபடி முடிந்துவிட்டேன். கேசட்டை போட்டுப்பார்' என்றாள்.

பின் மூவரும் கான்ஃப்ரன்ஸ் ஹாலில் உள்ள டி.வி.யையும், டெக்கையும் நெருங்கினார்கள். லஷ்மண் அடுத்தடுத்த சிகரெட்டோடு கேசட்டை தப்புத்தப்பாக போட்டு தடுமாறினான். சொர்ணாவே ஒழுங்காக போட்டு ரீப்ளே செய்து ஓடவிட்டாள்.

இருண்ட சுடுகாட்டுச் சூழ்நிலை. அதில் திகுதிகு நெருப்பெறிய ஒரு சடலம் எரிந்து கொண்டிருந்தது. ஒரே கோணத்தில் நின்ற இடத்தில் அந்தக் காட்சியை பதிவு செய்யாமல் ஒரு தேர்ந்த கேமராமேனைப் போல மிக அருகில் சுற்றிச் சுற்றி வந்து பதிவு செய்திருந்தான்.

பிரசாத்திடம் பிரமிப்பு.

லஷ்மணிடம் விதிர்ப்பு.

''என்ன ஓ.கே.வா...?''

''இது... இது...''

''எரிஞ்சுகிட்டிருக்கற பிணமேதான். சந்தேகமா இருந்தா இப்பதான் நீங்க போகப்போறீங்களே. பார்த்துட்டு முடிவு செய்துக்குங்க...''

''ரியலி...?''

''இனி கேள்விக்கெல்லாம் இடமில்லை. அடுத்த ரவுண்டு உங்களோடது மிஸ்டர் லஷ்மண். எப்ப புறப்படப்போறீங்க? கால்மணி நேரம் அவகாசம் தரேன்...''

- லஷ்மண் விழித்தான். பிரசாத் இடைவெட்டினான்.

''சொர்ணா போதும் விட்ரு. நீ தைரியசாலிதான். உனக்கு பயம்னா என்னன்னே தெரியாது. நாங்க ஒத்துக்கறோம். இது ஒரு டர்ட்டி கேம் - அழுக்கு விளையாட்டு. வேண்டாம் விட்டுடு...''

''விட்டுட்றேன், தன்னோட பயத்தை லஷ்மண் ஒத்துக்கிட்டா...''

''மிஸ்டர். லஷ்மண் என்ன பண்ணப்போறீங்க?''

''அது... அது...''

''தயக்கம் எதுக்கு? இங்க நாங்க ரெண்டு பேர்தான் இருக்கோம். சொர்ணாவோட தைரியத்தை பாராட்டிட்டு விட்ருங்க.''

''அது... அது.. யெஸ் மிஸ். சொர்ணா, உங்க தைரியத்தை பாராட்றேன். ஐ ஆம் ப்ரவுட் ஆஃப் யூ...''

''ஸோ பாராட்டிட்டு ஜகா வாங்கப் போறேன்னு சொல்லுங்க.''

- அவளது வார்த்தைக் கிள்ளல் அவனுக்குள் உள்ள ஆண்மை மேல் ஒரு சம்மட்டி அடியைத் தந்தது. அமிலத்தை சப்பியது போல அவனது முகம், உடம்பெங்கும் புழுக்கள் புரண்டு நெளிகிற மாதிரி வியர்வை கொட்டியது.

''சொர்ணா விட்ரு. பெருந்தன்மையா நடந்துக்கோ...''

''போட்டில பெருந்தன்மைக்கெல்லாம் இடமில்லை. நான் புறப்படும் போதும் நீங்க இப்படியெல்லாம் சொன்னீங்க. ஆனா இவர் அப்ப எதுவும் சொல்லலையே...''

''அப்ப லஷ்மண் சுடுகாட்டுக்கு போய்ட்டு வந்துதான் தீரணுமா?''

''கட்டாயமா. என்னைப் போலவே வீடியோவில் ஷூட் பண்ணிக்கிட்டு வரணும். வேணும்னா துணைக்கு நான் வரேன். எனக்கு பயமில்ல. ஆட்சேபணையுமில்ல...''

- லஷ்மணனை அவள் பதில் ஒரு புரட்டு புரட்டி எடுத்தது.

''ஸ்டாப் இட் சொர்ணா. ஐ வில் கோ...'' என்றான் மிக உறுதிபட. அடுத்த மூன்றாவது நிமிடம் அவனது ஃபியட் செக்யூரிட்டி கார்டுகளின் விரைப்பான சல்யூட்டை கடந்து வெளியேறியது! பார்த்துக் கொண்டே இருந்தார்கள் சொர்ணாவும், பிரசாத்தும்...

''சொர்ணா திஸ் ஈஸ் டூ மச். ஒரு பெண்ணுக்கு இப்படி ஒரு வீம்பும் தைரியமும் ஆகாது...''- கசகசத்தான் பிரசாத்.

''புலம்ப வேண்டாம் பிரசாத். சுடுகாடுங்கறது ஒண்ணும் நீங்க நினைக்கற மாதிரி அருவருப்பான, தீண்டத்தகாத, பார்க்கக் கூடாத இடமில்லை. மனுஷக் குப்பைகளை எரிக்கற ஒரு பரியல் கிரவுண்ட். அவ்வளவுதான். அதன் பேரால நிலவுகிற மற்ற எல்லா விஷயங்களுமே இந்த சமூகம் கட்டிவிட்ட கதை...''

''அது எப்படியோ இருந்துட்டு போகட்டும். அதுக்காக இப்படி ஒரு பந்தயம் தேவையா? லஷ்மண் யாரோ இல்லை. இந்த கம்பெனியோட வருங்கால முதலாளி. ஒரே ஒரு வாரிசு. அவர் மனநலமும் உடல் நலமும் ஆயிரக்கணக்கான எம்ப்ளாயிஸுக்கு நல்லது செய்யப்போற ஒரு விஷயம்.''

''அப்ப அதுக்கு தகுந்த பொறுப்புணர்ச்சியோட அவர் பேசணும், நடந்துக்கணும். லேடீஸை பொட்டச்சிங்கற பாமரச் சொல்லால விமர்சிக்கறதும், ஸ்ட்ரீட் ஃபைட்டர் மாதிரி பந்தயம் கட்டறதும் ஒரு வருங்கால எம்.டிக்கு அழகா பிரசாத்?''

சொர்ணாவின் மடக்கல் பிரசாத்தை கட்டிப்போட்டது.

''என்ன பிரசாத் பேச முடியலையா?''

''ஆமாம். எல்லா விஷயத்துலையும் உங்ககிட்ட நூல் பிடிச்ச மாதிரி ஒரு தெளிவு இருக்கு. இரும்பு மாதிரி ஒரு திடம் இருக்கு. என் வாழ்க்கைல உங்களைப்போல ஒரு பொண்ணைப் பார்த்ததே இல்லை. பெண்களை தென்றல் காற்றுக்கு ஒப்பிடுவாங்க. நீங்க தென்றல் மட்டுமில்ல புயலும்கூட...''

''அதாவது அபாயத் தென்றல்னு சொல்லாம சொல்றீங்க. கூடவே பஜாரி, பெண்மை இல்லாதவ, ஊர் சுற்றின்னும் சொல்லப் போறீங்க.''

''இல்ல சொர்ணா, அப்படியெல்லாம் சத்தியமா சொல்ல மாட்டேன்.''

''அப்ப ஜான்சிராணி, லட்சுமிதேவி, ராணி மங்கம்மான்னு பாராட்டப் போறீங்களா?''

''தப்பு இல்லையே...?''

-இருவரும் கான்ஃபரன்ஸ் ஹாலில் இதமான ஏ.சி. குளிரில் மிதமான நடுக்கத்தோடு பேசிக் கொண்டிருந்தனர். நடுவில் நைட் ஷிஃப்ட் இன்சார்ஜ் ஆக வந்திருக்கும் ஃபேக்டரி மேனேஜர் ராகவனின் பிரவேசம்.

''ஹலோ சார் ஷிஃப்ட் இன்சார்ஜா?''

''ஆமாம்.. நீங்க என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க? உங்களுக்கு நைட் ஷிஃப்ட்டா...?''

''இல்ல சார்... டே ட்யூட்டிதான். இருந்தாலும் கன்டினியூ பண்ணிக்கிட்டிருக்கோம்.''

''ஏதோ போட்டி பந்தயம்னும் கேள்விப்பட்டேனே...?''

''ஓ... உங்க காது வரை வந்துடிச்சா?''

''நான் நைட் ஷிஃப்ட்டுக்கு இன்சார்ஜ். ஃபேக்டரில நடக்கற எல்லா விஷயத்துக்கும் நான்தான் விடிஞ்சா பதில் சொல்லணும். ஆமா எங்க ஜே.எம்.டி...?''

''மிஸ்டர். லஷ்மணை கேக்கறீங்களா? வந்துடுவார்.''

''நீங்க ஸ்டூடன்ட்ஸா புராஜக்ட் ஒர்க் பண்றதால அவரை தைரியமா பேர் சொல்லி கூப்பிடுறீங்க. ஆனா இங்க அந்த கல்ச்சர் கிடையாது. எம்.டிக்கு தெரிஞ்சா ரொம்ப ஃபீல் பண்ணுவார்.''

''அவர் ஜே.எம்டி.ங்கறதுக்காக பேர் சொல்லக் கூடாதா? அப்ப எதுக்கு அவருக்கு பேர் வெச்சிருக்காங்க?''- சொர்ணா ராகவனை பதம் பார்க்க ஆரம்பித்தாள். ராகவனும் அவளை ஒரு தினுசாக பார்த்தான்.

''ஆமா நீங்க இங்க புராஜக்ட் ஒர்க் பண்ண வந்தீங்களா இல்லை உங்களுக்கு வேற ஏதாவது நோக்கமா?''

''வாட் டு யூ மீன் சார்...?''

''உங்களைப்பத்தி நிறைய தப்பு தப்பா கேள்விப்படறோம் மிஸ். சொர்ணா. ஒரு பொண்ணுக்கு தேவை அடக்கம். அப்புறமா பயம். எதுவும் இல்லை உங்ககிட்ட...''

- ராகவன் விசாரிக்க வரவில்லை. மோதவே முடிவு செய்து வந்துவிட்டிருக்கார் என்பது சொர்ணாவுக்கும் புரிந்தது.

''அநாவசிய பேச்சு வேண்டாம் மிஸ்டர். ராகவன். மிஸ்டர் லஷ்மண் கொஞ்ச நேரத்துல வந்துடுவார். அவர்கிட்ட கேளுங்க. என் பங்கு இதுல எதுவும் இல்லைங்கறது தெரிஞ்சுடும்.''

சொர்ணாவும் ராகவனும் மோதிக் கொண்ட அந்த இரவு நேரத்தில் பிரசாத் இடையில் பரிதவித்துப் போனான். கையைப் பிசைந்து கொண்டான். விளையாட்டு விபரீத மாவது என்பது இப்படித்தான். ராகவனும் அதற்குமேல் எதுவும் பேசவில்லை. தன் செக்ஷனுக்கு போய் கதவை அடைத்துக் கொண்டார். கண்ணாடி கதவுகள். உள்ளே அவர் யார் யாருக்கோ போன் செய்வதைப் பார்க்க முடிந்தது.

விஷயம் விபரீதமாக போய்க் கொண்டிருப்பதை அனுமானிக்க முடிந்தது. போன லஷ்மணையும் காண

வில்லை. மணி இரண்டைக் கடந்து மூன்று மணிக்குத் தாவியது. ராகவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழுந்து வெளியே வந்தார். செக்யூரிட்டி கேட் அருகே போய் நின்று கொண்டார்.

அங்கிருந்தும் யாருக்கோ போன் செய்தார். பிரசாத் கச்சிதமாக யூகித்தான்.

''சொர்ணா ராகவன் சார் எம்.டி.க்கு போன் பண்றார்னு நினைக்கறேன். போன லஷ்மணையும் வேற காணலை.''

''அதுக்கு என்ன பண்ணச் சொல்றீங்க பிரசாத்? வேணும்னா என்கூட வாங்க சுடுகாட்டுக்கே போய் பார்ப்போம்.''

- அவள் பதில் அவனைத் திணற வைத்தாலும் வேறு வழி தெரியவில்லை.

''சரி வாங்க''- கிளம்பினான். கேட்டைத் தாண்டும்போது எதிரே ஒரு காரின் வருகை தெரிந்தது.

''ஐ திங்க் லஷ்மண்தான்னு நினைக்கறேன்.''

- ஆனால் நினைப்பு பொய்யாகிப் போனது. வந்தது எம்.டி விட்டல்ராவினுடைய கார். உள்ளிருந்து நைட் டிரஸ்ஸில் அவர் இறங்கிய தோரணையிலேயே புழுதி பறந்தது.

''என்ன ராகவன்.. வாட்ஸ் கோயிங் ஆன் ஹியர்? லஷ்மண்?''

''அவர்.. அவர்.. வந்துடுவார் சார். நீங்க உள்ள வாங்க சார். ப்ளீஸ்...'' ராகவன் கைகால்கள் தந்தி அடிக்க அவரை உள்ளே அழைத்தார்.

''வேர் ஈஸ் மை சன்...? அத சொல்லுய்யா''

''அவர்... அவர்...''- ராகவனால் சொல்ல முடிய வில்லை. பார்த்துக் கொண்டிருந்த சொர்ணா இனியும் தாமதித்தால் ஆபத்து என்கிற மாதிரி தன் ஸ்கூட்டியை கிளப்பினாள்.

''பிரசாத் கம் இன்...''- என்று அவனை உரசிக் கொண்டு நின்றாள்.

''அவன் ஒரு ஹார்ட் பேஷண்ட்டுய்யா. எதுல விளையாட்றதுன்னு இல்ல?''- எம்.டி. விட்டல்ராவின் குரலில் கோபமும் வருத்தமும் கலந்து தொனித்தது.

''டொன்ட் ஒர்ரி சார். வி வில் கெட் ஹியர். கமான் பிரசாத்.''- சொர்ணா பட்டனை அழுத்தினாள்.

பறக்கத் தொடங்கிது அந்த வாகனம்.

சுடுகாட்டுக்குள் நுழையும் முன் வெளியிலேயே பார்த்துவிட்டனர் இருவரும்.

ஸ்கூட்டியின் ஹெட் லைட் வெளிச்சம் உள்ளே ஒரு வட்டம் கட்டி சுழன்றது. அங்கங்கே திட்டுத்திட்டாக சமாதிகள். சுவர்க்கோழி சப்தம்.

''லஷ்மண்... மிஸ்டர் லஷ்மண்...''- என்று சொர்ணா தைரியமா குரல் கொடுக்க பிரசாத் மிடறு விழுங்கினான்.

பிணம் பாட்டுக்கு எரிந்து கொண்டிருந்தது. நடுநடுவே உடம்பின் கொழுப்பெல்லாம் உருகிக் கரையும்போது உடம்பு இழுபட்டு பட்பட்டென்று சப்தம் கேட்கும். அப் பொழுது பார்த்தால் பிணம் எழுந்து அமருகின்ற மாதிரியே இருக்கும்.

பிரசாத் பார்க்கும் பொழுதும் அப்படி ஆனது. தீட்டலாக ஒருவித புகை அவர்களை சுற்றிவர, அதில் சில துண்டுப் புகைகள் ஆவி உடம்பு போல தெரிந்து உடம்பு நரம்பை துணியைப் பிழிகிற மாதிரி பிழிந்தும் போட்டன.

''சொர்ணா லஷ்மண் எங்கன்னு தெரியலியே...''- பிரசாத் அலறினான்.

''வெயிட்... வெயிட்...'' சொர்ணா ஸ்கூட்டியை விட்டு இறங்கி சமாதிகளை தாண்டி நடக்க ஆரம்பித்தாள். காலை இடறிய உடைந்த சட்டிகளை ஒரு ஃபுட்பாலை உதைப்பதுபோல உதைத்து தள்ளியபடி நடந்தாள்.

ஸ்கூட்டி ஹெட்லைட் வெளிச்சத்தை பிரசாத் அவளை நோக்கியே காட்டியபடி இருந்தான்.

''லஷ்மண்... லஷ்மண்...''

சொர்ணாவின் குரலில் அசாத்ய சத்தம். பதிலுக்கு யாரோ உட்கார்ந்து அழுவதுபோல ஒரு முனங்கல் சப்தம் காதில் கேட்டது.

''யாரது?'' - கேட்டுவிட்டு சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். புதர் போன்ற தலையை சொரிந்தபடி யாரோ எழுந்து நிற்கிற மாதிரி கூட தோன்றியது. எல்லாம் பிரமையா...இல்லை கற்பனையா? அவளுக்குள் கேள்விகள் புரண்டாலும் பார்வை துழாவிக் கொண்டே இருந்தது.

கால்கள் சருகுகளை மிதித்துக் கொண்ட நடக்க அது போட்ட சப்தமே அந்த நிசப்தத்தில் பெரும் சப்தமாக கேட்டது.

அச்சத்தை அறியாத அவள் மனதிலும் லேசாக அச்சம் உருவாகும் போல தோன்றிய அந்த நொடி அவள் காலை ஒரு உருவம் இடறியது.

குனிந்து பார்த்தாள்.

மயங்கி - வாயில் ரத்தக் கசிவோடு லஷ்மண்!

8

பழைய நினைவுகள் ஒரு முறை பிரசாத்துக்குள் வலம் வந்து முழுவதுமாக முடிவதற்குள் சொர்ணாவின் வித்யாமகால் பங்களா வந்து விட்டது.

ஸ்கூட்டியில் பிரவேசித்தவள் அதை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினாள். பின்னால் வந்த பிரசாத்தின் காரை நிறுத்த தோட்டத்து பாதையிலேயே ஒரு இடத்தைக் காட்டினாள்.

அவனும் காரை நிறுத்திவிட்டு இறங்கினான்.

இன்செய்து கொண்டிருக்கும் சட்டையை சரி செய்து கொண்டான்.

''போதும் போதும் மாப்ளைமாதிரிதான் இருக்கே'' - என்றவள் அவனோடு வீட்டினுள் நுழைந்தாள்.

வீடா அது... பிரம்மாண்டத்தில் மேல் நாடுகளின் தாக்கம்!

அப்பா ராஜவேலு ஒரு பிசினஸ்மேன். கறுப்புத் தங்கம் என்று இந்திய சமூகம் பெரிதும் மதிக்கும் கிரானைட் பிசினஸ்.

அம்மா ஒரு வடக்கத்திய மார்வாடிப் பெண். வினோதக் கலவை. இந்தக் கலவையில்தான் இப்படி தைரியமிக்க பெண்கள் பிறக்க முடியுமோ?

கேள்வியோடு உள்ளே பார்த்துக் கொண்டே நடந்தான்.

நிறைய போன்சாய் மரங்கள், வால்பிக்சர்கள், நடந்தால் முழு உடலும் மெருகேறினதுபோல தெரியும் கறுப்பு கிரானைட் தரைப்பரப்பு....

''வெல்கம் மிஸ்டர் பிரசாத்... வார்ம் வெல்கம்'' அழைப்பு வேறு. அவள் அப்பா ராஜவேலுதான்.

''குட்மார்னிங் சார்...''

''வெரிகுட்மார்னிங். உட்காருங்க.''

பிரசாத் தயக்கத்தோடு உட்கார்ந்தான்.

''டாட்! இவர் தான் பிரசாத். மை உட்பி.''- பளிச்சென்று பற்பசை விளம்பரத்துக்காக சிரிப்பது போல சிரித்துக் கொண்டு சொன்னாள் சொர்ணா.

''வெரி கிளாட் டு மீட் யூ மிஸ்டர்...மிஸ்டர்....''

''பிரசாத்னு சொன்னேனே..''

''ஆங் பிரசாத். பிரசாத்... உங்களைப் பத்தி நிறைய சொல்லியிருக்கா சொர்ணா...''

''ஐ.சீ.''

''ஏதாவது சாப்பிட கொண்டுவாம்மா..''

''பிரசாத் என்ன சாப்பிட்றே? எங்க வீட்ல பாதாம் கீர் நல்லா இருக்கும். அம்மாவோட தயாரிப்பு. சாப்பிட்றீயா?''

''வித் ப்ளஷர்!''

அவள் சிரித்தபடி உள்ளே மறைய, பிரசாத் ராஜவேலுவை பார்த்து மெல்ல சிரித்தான்.

''இப்ப எதுல ஒர்க் பண்றீங்க நீங்க?''

''சொல்லலையா சொர்ணா. நான் இப்ப கம்ப்யூட்டர் புரொக்ராமரா மித்வேர்ல்ட் டாட் காம் ல ஒர்க் பண்றேன்.''

''மித்வேர்ல்ட் டாட்காம்...?''

''ஆமாம்.. ஒரு இன்டர்நெட் பத்திரிகை. லிட்ரேச்சர், பாலிடிக்ஸ், ஜாக்ரபிக்கு பல பத்திரிகை இருக்கு. மித்தாலஜி சம்பந்தப்பட்ட விஷயத்துக்கு உலகத்துலயே இது ஒண்ணுதான்...''

''ஐ.சீ... மித்தே ஒரு ஏமாத்து வேலை தானே?''

''அது அவங்கவங்க அபிப்ராயத்தை பொறுத்தது சார்.''

''உங்க கருத்து என்ன?''

''ஒரு சத்தியம் இல்லாத, ஒண்ணுமே இல்லாத ஒரு விஷயம் ரொம்ப நாளைக்கு சொஸைட்டில இருக்க முடியாது சார்.''

''ஸோ இருக்குன்னு சொல்றீங்களா?''

''இருக்கலாம்னு சொல்றேன்.''

''ரொம்ப சாமர்த்தியமான பதில். ஆமா. சொர்ணா இந்த மாதிரி விஷயத்தை துளி கூட கேர்பண்ண மாட்டாளே.. உங்க கூட மட்டும் எப்படி பழகறா?''

''இதை நீங்க அவ கிட்டதான் கேக்கணும். எது எப்படியோ சொர்ணாவோட தைரியம் இந்த சென்னைக்கே பிரசித்தம். ரொம்ப போல்டான அவளோட டெசிஷன்ஸ். அதை அவ சந்திக்கிற விதம் எல்லாமே ஒண்டர் ஃபுல். ஈவன் என் வரைல அவளே ஒரு மித் தான்.''

''போச்சுடா. இதுமட்டும் அவ காதுல விழுந்தது உங்களை தொலைச்சுடுவா.''

ராஜவேலு சொல்லிவிட்டு சிரிக்க தலைநிறைய பூவும் நெற்றி கொள்ளாத பொட்டுமாய் பட்டு சரசரக்க அவர்களிடம் வந்து நின்றாள் சொர்ணாவின் அம்மா லஷ்மிபாய்.

''நமஸ்காரம் மேடம்.''

''மேடமா.. அத்தேன்னுல்ல சொல்வாங்க உங்க கல்ச்சர்ல...''

வாயைத் திறக்கும்போதே லஷ்மிபாயிடம் உறவும் உரிமையும் எட்டிப் பார்த்தது. பிரசாத் அதைக் கேட்டு நெக்குருகிப் போனான். வழிசலாக சிரித்தான்.

''பதில் சொல்லுங்க பிரசாத்...''- இடையில் ராஜவேலு.

''என்னத்த சார் சொல்ல.. நீங்கள்லாம் இவ்வளவு ஓப்பனா இருக்கறதை நினைச்சா எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. உங்களை மாதிரி பேரண்ட்ஸ் நிறைய பேர் இருந்துட்டா காதல் பிரமாதமா வாழும். அந்த சொஸைட்டில அம்பிகாபதி அமராவதி கதைகளுக்கும் இடம் இல்லாம போயிரும்.''

பிரசாத் நிஜமாலுமே உருகினான்.

''ஆமா உங்க ஃபேமிலி எப்படி?''

''உங்க அளவு விசாலமான மனசு கிடையாது சார். இப்பதான் எங்க காதலுக்கு முழு சம்மதம் கிடைச்சிருக்கு.''

''ஐ.சீ...''

''ஒரு உண்மையை நான் சொல்ல விரும்பறேன்.''

பிரசாத் அந்த நாகதோஷ விஷயத்தை தொட வரும்போது கச்சிதமாக குறுக்கில் புகுந்து கத்தரித்தது சொர்ணாவின் குரல்.

''எந்த உண்மையையும் சொல்ல வேண்டாம். அது உண்மையும் கிடையாது. ஜாதகமாம், தோஷமாம். இடியாட்டிக்கா இல்ல பிரசாத் உனக்கு...? திரும்பத் திரும்ப அதையே பேசறியே...''

''என்னம்மா... ஜாதகப் தோஷம்னுகிட்டு.. என்ன?''

''ஒண்ணுமில்ல சார். என் ஜாதகத்துல நாகதோஷம் இருக்காம். அது என் மனைவியா வரப்போறவளை கொன்னுடும்னு ஜோசியர் ஒருத்தர் சொன்னார்.''

''ஐ.சீ...'' - சாதாரணமாக கேட்டுக் கொண்டார் ராஜவேலு.

''என்ன சார் உங்களுக்கு அதிர்ச்சியா இல்லையா?''

''ஓஹோ... இதுக்கு அதிர்ச்சியடையணுமாக்கும்?''

ராஜவேலு திரும்பவும் கேலியாகக் கேட்டார். விக்கித்துப் போய் அவரைப் பார்த்தான். 'பெண், அப்பா இருவருமே புரட்சி எண்ணங்கள் கொண்டவர்களாக இருக்கிறார்கள். என்ன ஒரு தெளிவு, என்ன ஒரு திடப்பாடு.'

''அப்ப உங்களுக்கும் நம்பிக்கை இல்லையா சார்?''

''இந்த பாம்பு தோஷம் அது இதுன்னு யார் பேசினாலும் கோபம்தான் வருது மிஸ்டர் பிரசாத். எனக்கு என்ன ஆச்சரியம்னா நீங்களும் இதை பேசறதுதான். பகுத்தறிவுங்கறது எதுக்கு இருக்க மிஸ்டர் பிரசாத்...?''

''எனக்குகூட கொஞ்சம் ஜோசியம் ஜாதகத்துல நம்பிக்கை இருந்துச்சு. ஆனா இவரை கல்யாணம் பண்ணினதும் நான் மாறிட்டேன்.''- என்றாள் மிஸஸ். ராஜவேலு.

''பாதாம் கீரை சாப்பிடு பிரசாத். அம்மாவோட புரொடக்ஷன்'' சொர்ணா சொல்லிவிட்டு அவளைப் பார்த்தாள். அவளிடம் மாப்பிள்ளை அருமையாக இருக்கிறார் என்ற கருத்தை உணர்த்தும் பாவனை.

பிரசாத் பாதாம் கீரை குடிக்க ஆரம்பித்தான். மேலாக ஏடு பரவியிருந்தது. ஊதி அதை ஒதுக்க நினைத்து உஸ்ஸ் என்று லேசாக ஊதினான். அவன் ஊதி முடித்த நிலையில் 'ஸ்ஸ்ஸ்' சப்தம் கேட்கிற மாதிரி தோன்றியது.

நிமிர்ந்து பார்த்தான்.

''என்ன பிரசாத்?''

''இல்ல ஸ்ஸ்ஸ்னு ஒரு சப்தம் கேட்கல...?''

''ஸ்ஸ்ஸ்னு சப்தமா...? இல்லையே...''

திரும்ப வாயருகே டம்ளரை கொண்டு செல்ல 'ஸ்ஸ்ஸ்' சப்தம் காதைச் சீண்டியது. அவர்களும் ''ஆமாம் சப்தம் கேட்குது'' என்றபடி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''எங்க இருந்த வருது?''- கேள்வியோடு பார்வை சுற்றிச் சுழலத் தொடங்கியது. சிலபல நொடிகளுக்கு சப்தமே சுத்தமாக கேட்கவில்லை. 'பிரமையோ? இல்லை எங்காவது குழாயில் காற்று கசிகிறதோ?' கேள்வி குடைந்தெடுத்தது. ராஜவேலு திரும்ப சப்தம் வருகிறதா என்று காதை விடைக்கவிட்டுக் கொண்டார். சொர்ணா சுற்றி வர ஆரம்பித்தாள். 'எங்கே.. எங்கே?' தேடியபடி நடந்தவள் ஓர் இடத்தில் ஸ்தம்பித்து நின்றாள். ஹாலில் உள்ள நவீன ரக சிலை ஒன்றின் கழுத்தில் பண்ணையில் தொலைந்து போன அதே பாம்பு.. கையகல படத்துடன் ஒன்றரை முழ உயர நிமிர்வுடன், கண்களில் கடூரத்துடன் இரட்டை நாக்கை வெளியே நீட்டிக் கொண்டு...

''மை குட்நெஸ்'' -அலறிக் கொண்டு துப்பாக்கியை எடுக்க ஓடினார் ராஜவேலு. சொர்ணா ஸ்தம்பித்து விட்டிருந்தாள். பிரசாத் நொறுங்கிப் போய் ஒரு சோளக் கொல்லை பொம்மை மாதிரி வெறிக்கத் தொடங்கி விட்டிருந்தான்.

லஷ்மிபாய் தன் புடவை முந்தியால் வாயை மூடிக் கொண்டு விக்கித்துப் போவதில் உச்சியில் இருந்தாள்.

ராஜவேலு துப்பாக்கியும் கையுமாக ஓடிவந்து குறிபார்க்க ஆரம்பித்தார். சொர்ணா அதைப் பார்த்துவிட்டு ஓடிப்போய் அவர் கையை தட்டிவிட்டாள்.

''நோ டாடி.. நோ...''

''விடும்மா. எவ்வளவு தைரியமிருந்தா வீட்டுக்குள்ள வரும்? இந்த தோட்டக்காரங்க என்ன பண்றாங்க? ஆறுமுகம்.. மாடசாமி...'' சொர்ணா அவர் கையை போடடு அழுத்த அவர் திமிறிக் கொண்டு பேச - லஷ்மிபாய், பிரசாத் இருவரின் கவனமும் கூட அவர்கள் பக்கம் திரும்ப அவர் வேறு வழி இல்லாமல் துப்பாக்கியைக் கீழே போட்டார்.

''ஆறுமுகம்.. மாடசாமி...!'' அலறினார். அவர்களும் ஓடிவந்தார்கள். ஆனால் அந்த சிலையின் கழுத்தில் அதுவரை இருந்து கொண்டு சீறிக் கொண்டிருந்த பாம்பைத்தான் காணவில்லை.

எங்கே போயிற்று?

9

கடற்கரை!

அலை புரண்டு கொண்டிருந்தது. காற்றிடமும் குதூகலமான வீச்சு. ஆனால் சொர்ணா மட்டும் மௌனமாக இருந்தாள். அருகிலேயே பிரசாத்.

''என்ன சொர்ணா பேசமாட்டேங்கறே....?''- மணலில் கோலம் போட்டபடியே கேட்டான்.

''என்னத்த பேசறது?''

''எதையாவது பேசு. பாம்பு வந்ததை ஜீரணிக்க முடியலியா?''

''ஆமாம்... எப்படி இது சாத்யம்னுதான் தெரியல.''

''நான்தான் சொன்னேனே....? உலகத்துல நமக்குத் தெரியாத, புரியாத விஷயங்கள் எவ்வளவோ இருக்கு. அதுல இதை எல்லாமும் சேர்த்துக்க வேண்டியதுதான்.''

''இல்ல பிரசாத்.... இத என்னால நம்ப முடியால. நாம எதாவது செய்யணும் பிரசாத்.''

''நீ என்னிக்கு என் பேச்சை கேட்டிருக்கே...''

''என்ன சொல்றே பிரசாத். இந்த பாம்பு சமாச்சாரத்தை பழிவாங்கற விஷயமா நம்பச் சொல்றீயா?''

''வேற இதை எப்படி எடுத்துக்கறது. நீ இருக்கற இடம் தேடி அந்த பாம்பு ரெண்டு தடவை வந்துடிச்சு... எனக்கு ரொம்ப பயமா இருக்கு சொர்ணா.''

சாதாரணமாகத்தான் சொன்னான் பிரசாத். ஆனால் பதிலுக்கு நெருப்புப் பார்வை பார்த்தாள் சொர்ணா.

''அப்படி பாக்காதே... நீ அப்படி பாக்கறதால நான் சொல்றது பொய் ஆயிடாது.''

''என்ன பொய் ஆயிடாது... ஏன் பிரசாத் அது ஜஸ்ட் கோ-இன்சிடென்ஸா இருக்கக்கூடாது?''

''எது கோ-இன்சிடென்ஸ்...? லைப்ரரில நீ பார்த்தது வேணும்னா கோ-இன்சிடென்ஸ்னு சொல்லலாம். உன் வீட்டுக்குள்ளேயே பாம்பு வந்திருக்கறதை எப்படி கோ-இன்சிடென்ஸ்னு சொல்வே?''

''அப்ப பாம்பு பழி வாங்கும்கறது உண்மையா?''

''ஆமாம்னுதான் தோணுது. நீயும் நானும்தான் பாக்கறோமே...''

''அப்ப அந்த பாம்பு ஏன் தவணை முறைல தெரிஞ்சு மிரட்டணும்? அதோட நோக்கம் பழி வாங்கறது தான்னா இந்த பீச்சுக்கு வர வேண்டியதுதானே?''

அவள் கேட்ட நொடி 'ஸ்ஸ்ஸ்' சப்தம் காதைத் தாக்கியது. அலை கடலின் ஊழிச் சப்தத்தை மீறிக் கொண்டு துல்லியமாகவே கேட்டது. வெடுக்கென்று திரும்பிப் பார்த்தான். மணல்வெளிமேல் படம் எடுத்தபடி அதே பாம்பு.

''சொர்ணா... சொன்னே - வந்திடுச்சு பார். கமான் கெட் அப்...''- அவளை தோளைத் தொட்டு எழுப்பியவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கினான்.

''நில்லு... நில்லு பிரசாத். அந்த பாம்பு என்னதான் பண்ணுதுன்னு பார்ப்போம்....'' கத்திக் கொண்டே ஓடியவளை பிரசாத் விடவேயில்லை.

''நோ... நின்னா கொத்திடும். கமான் க்விக்...''

கண் மண் தெரியாதபடி ஓடியவன் ஒருவர் மேல் மோதிக் கொண்டு தலைகுப்புற விழுந்தான். நிமிர்ந்து எழுந்து மணலை உதறிக் கொண்டு பார்த்தான். எதிரில் ராகவன்!

லாம்ப்சன் அண்ட் லாம்ப்சன் கம்பெனி மேனேஜரில் ஒருவரான ராகவனே தான்.

''ஏய் பிரசாத் என்ன இது ஓட்டப்பந்தயம்?''- அவர்தான்.

அவர் கேட்கும்போது பிரசாத் பார்வை மணல் பரப்புமேல்தான் இருந்தது. அந்த பாம்பு சேஸ் செய்தபடி வருகிறதா என்ற பார்வை துழாவிற்று. சொர்ணாவும் பெருமூச்சு விட்டாள்.

''என்ன ஆச்சு? எதுக்கு இந்த பதட்டம்...?'' - ராகவன் விடவில்லை.

''சாரி சார். நான் அப்புறமா எல்லாத்தையும் சொல்றேன். சொர்ணா கமான்...''-திரும்பவும் இருவரும் ஓடத் தொடங்கினர்.

பார்க்க வேடிக்கையாக இருந்தது.

காருக்குள் ஏறி அமர்ந்த நிலையில் டோரை இறுக்கமாக சாத்திவிட்டு கையை உயர்த்திக் கொண்டு சீட்டில் சாய்ந்தான் பிரசாத். பக்கத்திலேயே சொர்ணாவும்! பல நிமிடங்கள் பேச்சே வரவில்லை. ஒருவாறு மூச்சுக்காற்று ஒழுங்குக்கு வர ''சொர்ணா... தப்பு பண்ணிட்டே சொர்ணா. பெரிய தப்பு பண்ணிட்டே...'' என்றுதான் பேச்சையே ஆரம்பித்தான்.

''ஆமாம் பிரசாத் அப்படித்தான் எனக்கும் தோணுது.''

அவள் முதல் முறையாக சுருதி குறைந்த குரலோடு அவனோடு ஒத்து வருவதுபோல பேசினாள்.

''சரி இப்ப என்ன பண்றது?'

''முதல்ல டாக்டர் ஜான்சனைப் பார்ப்போம். அவர்கிட்ட விஷயத்தை சொல்வோம்.''

''அவராலை இந்த விஷயத்துல என்ன பண்ண முடியும்னு நினைக்கறே?''

''என்னோட ரிசர்ச்சுக்கு ஒரு பெரிய பின்பலம் அவர். அவர் என்ன சொல்றார்னு கேட்போம்.''

''அதுவரை நீ உயிரோட இருப்பியான்னு எனக்கு சந்தேகமா இருக்கு. நாம போற இடத்துக்கெல்லாம் எப்படியோ அந்த பாம்பு வந்துடுது பார்த்தியா?''

பிரசாத் கேட்ட மறுவினாடி அவன் மார்பின் மேல் பொத்தென்று விழுந்தாள் சொர்ணா.... அவனை இறுக்கி கட்டிக் கொண்டாள்.

''பயப்படாதே! நான் உன்னை விட்டு இனி ஒரு நிமிஷம்கூட பிரியமாட்டேன். தைரியமா இரு...'' அவனும் தட்டிக் கொடுத்தான். அப்படியே அவள்மேல் சாய்ந்திருக்கும் நிலையில் காரையும் கிளப்பினான்.

கடற்கரை மணல் வெளிமேல் ஒரு இடத்தில் இருந்தபடி பார்த்துக் கொண்டிருந்தது அந்த நாகமும்!

10

டாக்டர் ஜான்சன் ஸ்தம்பித்துப் போயிருந்தார்!

''என்ன டாக்டர் நாங்க சொல்றத நம்ப முடியலையா உங்களால?''

பிரசாத்தான் கேட்டான்.

''ஆமாம்.. நம்பத்தான் முடியலை. சொர்ணா இவ்வளவு தூரம் பயந்து இப்பத்தான் பாக்கறேன். நீங்க சொல்றது உண்மையா இருந்தா நான் இங்க பாம்பு பண்ணையே நடத்த முடியாதே?'' - அவர் திருப்பிக் கேட்டார்.

''அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது டாக்டர். ஒண்ணு மட்டும் நிச்சயம். அந்த பாம்பு பழி வாங்க சொர்ணாவை துரத்துது. அதுல சந்தேகமேயில்லை எங்க எப்ப- எங்க கண்ணுலபடுமோன்னு பயமாயிருக்கு. அதுகிட்ட விசேஷமா ஏதோ ஒரு சக்தி இருக்கு. அது நிச்சயம்.''

''என்னால நம்ப முடியல. நம்பாம இருக்கவும் முடியலை. பாம்புகளைப் பற்றின என் ஆராய்ச்சில

சொர்ணாவோட அனுபவமும், நாகர்பட்டில நடந்த ஒரு சம்பவமும் எனக்கு பயங்கர அதிர்ச்சியைத் தான் தருது.''

''நாகர்பட்டில என்ன சம்பவம் நடந்தது?''

''அங்க ஒரு கோயில் இருக்கு. பௌர்ணமிக்குப் பௌர்ணமி அந்த கோவிலுக்கு பாம்பு ரூபத்துல ஒரு சித்தர் நடுராத்திரியில வந்து பூஜை செய்துட்டுப் போறாராம். அதனால பௌர்ணமியன்னிளக்கு ராத்திரி எட்டு மணிக்கே நடையை அடைச்சிட்றாங்க. அந்த சந்தர்ப்பத்துல ஊரே கதவை சாத்திக்குது. யாரும் வெளியே எதுக்காகவும் எட்டிக்கூட பாக்கறதில்லையாம். இதை கேள்விப்பட்டு அந்த சித்தரை படம் பிடிக்கப்போன பாஸ்கர், சுகுமார்ங்கற ரெண்டு பேர் ரொம்ப பரிதாபமாக பாம்பு கடிச்சே செத்துப் போயிட்டாங்க. அப்படிப்பட்ட நாகர்பட்டிக்குப் போய் சொர்ணாகூட ரிசர்ச் பண்றதா இருந்தா. இல்ல சொர்ணா...?''

''ஆமாம் டாக்டர். ஆனா நான் இப்ப நொறுங்கிப் போய் கிடக்கறேன். என் மனசுல தைரியமில்லை. தெம்பும் இல்லை. எனக்கு என்ன செய்யறதுன்னும் தெரியலை.''

''நீயே இப்படி சொன்னா எப்படிம்மா? தைரியமா இரு.''

''வார்த்தையால ஆறுதல் சொன்னா பத்தாது டாக்டர் சார். இப்ப சொர்ணா அந்த பாம்புகிட்ட இருந்து தப்பிக்கணும். அதுக்கு உதவி செய்யுங்க.''

''என்னால எந்த உதவியை உங்களுக்கு செய்ய முடியும்?''

''தப்பித்தவறி அது கடிச்சாலும் உயிர் போகக்கூடாது. அதுக்கு ஏதாவது இன்ஜெக்ஷன்ஸ் இருக்கா?''

''அட்வான்ஸா அப்படி செய்துக்க எதுவும் மெடிசின்ஸ் இல்ல. நாட்டு வைத்தியத்துல 'நாகதாளி வேர்'னு ஒண்ணு இருக்கு. அது நம்மகிட்ட இருந்தா அதோட ஸ்மெல் பிடிக்காம எந்த பாம்பும் கிட்ட வராதுன்னு சொல்வாங்க. சில டேப்ளட்ஸ்கூட இருக்கு. .. அதையும் கைல வெச்சுக்கலாம்.''

''அது எங்க கிடைக்கும்?''

''டேப்ளட்ஸ் என்கிட்ட இருக்கு. 'நாகதாளி வேர்' மூலிகை மருந்து விக்கற கடைகள்ல தாராளமாக கிடைக்கும்.''

- பிரசாத் அடுத்த நொடி அதை வாங்கத் தயாரானான்.

''சரி சொர்ணா வா நாம புறப்படுவோம். முதல்ல அந்த வேரை வாங்கி கைல வெச்சுப்போம். டாக்டர் சார் வேற ஏதாவது பிரிவென்டிவ் மெடிசின்ஸ் இருக்கா? வாங்கி ஸ்டாக் பண்ணி வெச்சுக்கறோம்.''

- டாக்டர் ஜான்சன் தாடையைச் சொறிந்தார்.

''அப்ப நீங்க பாம்பு பழிவாங்கப் போகுதுங்கறதுல உறுதியான நம்பிக்கையோட இருக்கீங்கன்னு சொல்லுங்க...'' கவலை ததும்பக் கேட்டார்.

''என்ன டாக்டர். இவ்வளவு நடந்த பிறகும் எப்படி எல்லாத்தையும் தற்செயல்னு எடுத்துக்கறது?''

''வாஸ்தவம்தான்... ஆனா, ஒரு விஷயம்தான் எனக்குப் பிடிபடிவே மாட்டேங்குது?''

''என்ன டாக்டர்...?''

''சொர்ணா ஒரு ஆராய்ச்சிக்காத் தான் என்கிட்ட இருந்து அந்த குட்டிப் பாம்பை கொண்டுபோனா. போனயிடத்துல அது துரதிர்ஷ்டவசமா செத்துப் போச்சு. இதுல அவ தப்பு எதுவுமே இல்லை. இருந்தும் அவளை தாய்ப்பாம்பு துரத்துதுன்னு தெரியுது. அப்படிப் பார்த்தா இந்த பண்ணைல நான் எவ்வளவு பாம்புகளோட தினமும் பழகறேன். சில பாம்புகள் நான் விஷம் எடுக்கும்போதே செத்துருக்கு. பல நாகங்களை நான் சுதந்திரமா நடமாட முடியாதபடி சிறையும் வெச்சிருக்கேன்.

எந்த விதத்தில பார்த்தாலும் சொர்ணாவைவிட நான்தான் பெரிய குற்றவாளி. ஆனா, ஒரு பாம்பும் என்னை எதுவும் செய்ததே இல்லை.

பாம்பு பழி வாங்கும்னா என்னைத்தானே அது முதல்ல கடிச்சிருக்கணும்?''

- ஜான்சனின் கேள்வி இருவரையும் பலமாகவே கட்டிப் போட்டது. சொர்ணா திரும்பவும் யோசிக்கத் தொடங்கினாள்.

''அப்படின்னா எங்களை பாம்பு துரத்தறதுங்கறது ஒரு செயற்கையான விஷயமா டாக்டர்?''

''யோசிச்சுப் பாருங்களேன். அந்த பாம்பு என்னை ஏன் எதுவுமே பண்ணலை?''

- ஜான்சன் கேள்வியை கேட்டுவிட்டு விட்டுவிட்டார். ஆனால் அவர்கள் மனசுக்குள் அது சுழன்று சுழன்று அடித்தது. ஜான்சனும் சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு பிறகு ஒரு முடிவுக்கு வந்தார்.

''நான் ஒரு முடிவு பண்ணியிருக்கேன்.''

''என்ன டாக்டர்?''

''இந்த செகண்ட்ல இருந்து நான் சொர்ணாகூடத்தான் இருக்கப்போறேன். அந்த பாம்பு எங்க இருந்து, எப்படி வருதுன்னு நான் பாக்க விரும்பறேன். காட்டுல ஒரு குட்டியா இருக்கும்போதே நான் பிடிச்ச பாம்பு அது. என்னால அதை நல்லாவே அடையாளம் கண்டுக்க முடியும்னு நினைக்கறேன். என்ன சொல்றீங்க?''

- ஜான்சனின் கேள்வி சொர்ணாவுக்கு ஒரு புதிய தெம்பைத் தந்தது.

''அருமையான முடிவு டாக்டர். நீங்க என்கூட இருந்தா எனக்கும் தெம்பா இருக்கும்.'' என்றாள்.

''சரி இன்னிக்கு உங்களோட அடுத்த புரோக்ராம்?''

''ஸ்பெசிபிக்கா எதுவும் இல்லை. இந்த பாம்பு பிரச்சினை ஒரு முடிவுக்கு வரணும். அவ்வளவுதான்!''

''வந்துடும்.. வரவெச்சுடுவோம். பாம்பு சௌகர்யமா தேடி வரதுக்கு தோதா ஒரு இடத்துக்குப் போகலாம். வரட்டும் அது. நான் பாத்துக்கறேன். முட்டுக் காடுக்குப் போகலாமா?''

- ஜான்சன் சொன்னதோடு நிற்காமல் உள்ளே சென்று பீரோவைத் திறந்து ஒரு கைத்துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டார். தொடர்ந்து மூவரும் அந்த அறையைவிட்டு வெளியே வந்தார்கள். பண்ணைச் சூழ்நிலை கண்களில் பட்டது. நிறைய பள்ளி மாணவ மாணவியர் கூட்டம்! ஸ்டீபன்சன் அவர்கள் நடுவில் பாம்புகளைப் பிடித்து இடம் மாற்றி விட்டுக் கொண்டிருந்தான்.

''ஸ்டீபன்சன்...!''- கூப்பிட்டார். ஓடிவந்தான்.

''நான் சொர்ணாவோட முட்டுக்காடு வரை வெளியே போறேன். வர்றதுக்கு நேரமாகாலாம். கேர்ஃபுல்லா பாத்துக்கோ....'' - சொன்னவர், அந்த தாய் நாகம் அடைந்து கிடந்த கண்ணாடிக் கூண்டைப் போய் ஒரு பார்வை பார்த்தார். குட்டிப் பாம்புகள் மட்டும் ஒன்றன் மேல் ஒன்று புரண்டு விளையாடிக் கொண்டிருந்தன.

வெளியே வந்தார். கார் காத்திருந்தது. மூவரும் ஏறப்போன நொடி-

''ஹலோ...'' என்றொரு குரல். பிரசாத், 'யார்' என்று பார்த்தான். மேனேஜர் ராகவன்! அவருடன் கூடவே இரண்டு பேர்.

''ஹலோ சார். எங்க இங்க?''

''இவங்க என் நண்பர்கள். ஸ்னேக் பார்க்குக்கு போகணும்ன்னாங்க. அதான் வந்தோம்.''

''குட். கேரிஆன்.''- என்றான் சுரத்தில்லாமல்.

''என்ன பிரசாத்.. இப்பல்லாம் பார்த்தாகூட சரியா பேசமாட்டேங்கறீங்க. பீச்சுல பார்த்தப்போகூட ஓடிகிட்டேதான் இருந்தீங்க. எனித்திங் ராங்?''

''சேச்சே அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஒரு அவசர வேலை. வர்றோம்.''

- வேகமாக அவரை கழட்டி விட்டான். காரைக் கிளப்பினான். உள்ளே...

''யார் பிரசாத் அவர்?'' - ஜான்சன் அவலோடு கேட்டார்.

''நாங்க பிராஜக்ட் ஒர்க் பண்ணின ஒரு கம்பெனியோட புரொடக்ஷன் மேனேஜர்.''

''ஐ.சீ...''

''இவருக்கு சொர்ணான்னாலே பயம்.''- சொன்னபடி சொர்ணாவைப் பார்த்தான். அவளிடம் சுரத்தே இல்லை.

''என்ன சொர்ணா எதுவும் பேசமாட்டேங்கறே. டாக்டருக்கு அந்த சுடுகாட்டு கதை தெரியுமா?''

''அதை எல்லாம் இப்ப ஞாபகப்படுத்தாதே பிரசாத். நான் இப்ப மூட்ல இல்ல.''

''என்ன பிரசாத் அது...?''

''சொல்றேன் சார்...'' - பிரசாத் பேசியபடியே டிராஃபிக்கில் காரை வளைத்தான். அப்படியே எதிர்ப்பட்ட சிக்னலிலும் வண்டியை நிறுத்தினான்.

''அந்த சுடுகாட்டு கதை...?''-ஜான்சன் திரும்பவும் நிமிண்டினார். பின் சீட்டில் அமர்ந்து கொண்டிருந்தார். முன்னால் அவனது டிரைவிங் சீட்டுக்குப் பக்கத்தில் சொர்ணா அமர்ந்து கொண்டிருந்தாள். தலையை வளைத்து வளைத்து பேசுவது சற்று சிரமமாக இருந்தது. இருந்தாலும் உற்சாகமாக அந்த விஷயத்தை சொல்ல ஆரம்பித்தான். சிக்னலும் விலகி வழிவிட்டது. காரும் முட்டுக்காடு படகுத்துறை நோக்கி விரையத் தொடங்கியது.

11

படகுத் துறையை அடைந்தபோது முழு விஷயத்தையும் சொல்லி முடித்திருந்தான். ஜான்சனிடம் உறைந்து போன பனிக்கட்டியைப் போல ஒரு இறுக்கம்.

''என்ன டாக்டர்... என்ன சிந்தனை...?''

''ஒண்ணுமில்ல. சொர்ணா எவ்வளவு தைரியமான ஒரு பொண்ணு. அவளையே இந்த பாம்புச் சம்பவம் கலங்கடிச்சிடிச்சே. அதை நினைச்சேன்.''

''அதான் டாக்டர் என் கவலையும்...''- சொன்னபடி திரும்ப சொர்ணாவை பார்த்தான் பிரசாத்.

''இல்ல பிரசாத். நான் இப்ப தைரியமாதான் இருக்கேன். டாக்டர் கூட இருக்காரே. எனக்கென்ன கவலை...?'' - அவள் சமாளித்தாள்.

''நோ சொர்ணா. நான் இருந்தாலும் இல்லேன்னாலும் நீ தைரியமா இருக்கணும். அச்சமே நரகம்னு அடிக்கடி சொல்லுவியே, மறந்துட்டியா?''

''மறக்கல டாக்டர். அந்த நரகத்துலதானே இப்ப இருக்கேன். புரியாத புதிரா ஒரு விஷயம் என்னை சுழற்றியடிக்கும்போது எதை வெச்சு நான் தைரியமா இருப்பேன்...?''

''கவலைப்படாதே. அதுக்கு நிச்சயமா ஒரு முடிவு தெரிஞ்சிடும். இப்பகூட இந்த படகுத் துறைல நாம மூணுபேர்தான் இருக்கோம். அந்த பாம்புக்கு நிஜமாலுமே பழிவாங்கற உணர்ச்சி இருந்தா, புராணங்கள்ல சொல்ற மாதிரி அதுக்கு விசேஷ சக்தி இருந்தா, இங்க வரட்டுமே?''

''இப்படித்தான் பீச்சுல உட்கார்ந்திருக்கும்போது சொன்னேன். சொல்லி வாய் மூடலை. ஒரு பத்தடி தூரத்துல அது படம் எடுத்தபடி இருந்துச்சு. இப்பவும் அப்படி வந்துடுமோன்னு பயமாதான் இருக்கு.''

''வரட்டும். வந்தா இருக்கவே இருக்கு துப்பாக்கி. ஒரு தோட்டா போதும். தலை பீஸ்பீஸாயிடும்.''

''அது வராது... வரும்போது பாத்துக்கலாம். ஆனா என் ரிசர்ச்சை நினைச்சாதான் கவலையா இருக்கு.''

''அதுல கவலைப்பட என்ன இருக்கு சொர்ணா?''

''பாம்பு சம்பந்தமான எல்லா மூடநம்பிக்கைகளையும் உடைச்சு நொறுக்க நினைச்சிருந்தேன். அது முடியாதுபோல இருக்கு.''

''சொர்ணா கவலையை வெளிக்காட்டியபடியே கையை கட்டிக் கொண்டு எதிரே தெரிந்த பேக்வாட்டர் ஏரியாவைப்

19770

பார்த்தாள். பார்த்தபடியே மூவரும் நாப்பதுகைனி நோக்கி நடந்தார்கள். நல்ல சுட்டெரிக்கும் வெய்யில்.

வழக்கம் போல் நீர்ப் பரப்பின்மேல் சூரியன் ஒரு ரசவாதப் புரட்சியே செய்து கொண்டிருந்தான். வெள்ளியை நிரவமாக உருக்கிக் கொட்டின மாதிரி ஒரே வெள்ளொளி ஜாலம்! அங்கும் இங்குமாய் படகுகள் கட்டப்பட்டிருந்தன. சாதாரணமாக அதையெல்லாம் பார்த்து ரசிப்பவள் அந்த நொடிப் பொழுதில் எரிச்சலுடன் தான் பார்த்தாள். பிரசாத்தும் கிட்டத்தட்ட அவள் நிலையில்தான் இருந்தான். சாதாரணமாக முட்டுக்காட்டுக்கு வந்தால் கவிதை உணர்ச்சி அவர்கள் காதலோடு போட்டிப்போடும். இன்று கவலை உணர்ச்சி இருவரையும் கட்டிப்போட்டிருந்தது. திடீரென்று டாக்டர் ஜான்சன் காரை நோக்கி திரும்பிக் கொண்டிருந்தார். ''எங்கே போகிறார்?'' கேள்வியோடு அவரைப் பார்த்தான்.

அவரோ காரை நெருங்கி டோரைத் திறந்து தண்ணீர் பாட்டிலை எடுத்திருந்தார்.

''டாக்டர் சார் எனக்கும் கொஞ்சம் வாட்டர்...''- கத்தினான்.

''ஷ்யூர்...'' என்றபடியே டோர் அருகிலேயே நின்று கொண்டு பாட்டிலைத் திறக்கத் தொடங்கினார்.

ப்ளிச்... ப்ளிச்... ப்ளிச்...! தண்ணீர் பாட்டிலைவிட்டு ஜெயில் கைதி போல தப்பித்து அவர் வாய்க்குள் விழ ஆரம்பித்தது. கழுத்து வளைந்த நிலையில் கண்ணிரண்டும் வானத்தைப் பார்த்தபடி இருந்தன. அந்த வானத்திலும் இரண்டொரு கழுகுகளின் ஆலவட்டம். சிறகை துளியும் அசைக்காமல் எப்படித்தான் இந்த கழுகு மட்டும் மிதப்பலாக பறக்கிறதோ? தண்ணீர் உள்ளிறங்கும்போது ஆச்சரியமும் அவருக்குள் சேர்ந்திறங்கியது.

அவரையே பார்த்துக் கொண்டிருந்த பிரசாத் பார்வையை எதார்த்தமாக தழைத்த போது பகீர் என்றது. காருக்குக் கீழே அவர் காலருகே அந்த நாகம்! ஐய்யோ.... நெஞ்சில் க்ஷணத்தில் ஒரு குத்து விழுந்தாற்போல இருந்தது. சுதாரித்து

''டாக்டர் கீழே பாம்பு...'' என்பதற்குள் அந்த சர்ப்பம் பொட் பொட்டென்று மூன்று நான்கு முறை போட்டது. டாக்டர் ஜான்சனும் தடுமாறியபடி விழ ஆரம்பித்தார்.

அவனது அலறல் சொர்ணாவின் கவனத்தையும் திருப்பி விட்டிருந்தது. நின்ற இடத்தில் நடுங்க ஆரம்பித்துவிட்டாள் அவள்.

''சொர்ணா கமான். இங்க ஒரு நிமிஷம்கூட நிற்கக் கூடாது. ஓடிவா...''- அவளை நோக்கி கத்தியவன் டாக்டரை நோக்கி ஓடாமல் எதிர்திசையில் வந்த வழித்தடத்தில் ஓட ஆரம்பித்தான். சொர்ணா ஸ்தம்பித்து போய் நின்றபடியே இருந்தாள்.

''சொர்ணா கமான்... அந்த பாம்போட அடுத்த குறி நீயும் நானும்தான்...''

பிரசாத். முட்டுக் காட்டுப் பகுதியே திரும்பிப் பார்க்கும் படி கத்திக் கொண்டு ஓடினான். சொர்ணாவுக்கு எதுவுமே காதில் விழவில்லை. டாக்டரை சரியவிட்ட நாகம் சொர்ணாவை நோக்கித்தான் புறப்பட்டிருந்தது. புல் தரையில் அதன் நெளிசலில் ஒரு எக்ஸ்பிரஸ் ரயிலின் வேகம். பிரசாத் அதன் நெளிசலைப் பார்த்துவிட்டு சொர்ணாவை நோக்கி திரும்ப ஓடி வந்தான்.

''சொர்ணா கமான்... அது வருது பார்.. கமான் சொர்ணா...''

- அவளும் கொஞ்சம் போல ஸ்தம்பிப்பிலிருந்து விடுபட்டாள். தன்னை நோக்கி ஓடி வரும் பிரசாத்தை பார்த்து விட்டு அவனை நோக்கி ஓட ஆரம்பித்தாள். பின் இருவருமாக சேர்ந்து கொண்டு தார்ச்சாலையை நோக்கி ஓட ஆரம்பித்தனர்.

கானல் நீர் ஓடும் தார்ச் சாலையை எட்டி மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க நின்றனர். அப்படியே திரும்பிப் பார்த்த போது காரை ஒட்டி கீழே விழுந்திருந்த டாக்டர் எழுந்து கார் கதவைத் திறப்பது தெரிந்தது. ''சொர்ணா, டாக்டருக்கு ஒண்ணும் ஆகலைன்னு நினைக்கிறேன். அதோ பார்...''-

அவன் கையை நீட்டி காட்டும்போதே அவர் காரைத் திருப்பிப் கொண்டு அவர்களை நோக்கி வர ஆரம்பித்தார்.

''டாக்டர் இங்கதான் வரார்...''- அவளிடம் பயம் விலகி துளி தைரியம் எட்டிப் பார்த்தது.

''கமான்'' அவளை இழுத்து அணைத்தவன் காரையே பார்த்துக் கொண்டிருக்க அது அவர்களை உரசிக் கொண்டு நின்றது. காரிலிருந்து தடுமாறியபடி இறங்கிய டாக்டர்,

''கெட் இன்...'' என்று அலறினார்.

''எனக்கு ஒண்ணும் ஆகாது. கார்ல ஏறுங்க. முதல்ல நான் டாக்டரைப் பார்க்கணும். கமான். பிரசாத் நீங்க டிரைவ் பண்ணுங்க.''

- அவர் திரும்ப அலற இருவரும் காருக்குள் பாய்ந்தனர்.

கார் சீறிக் கொண்டு புறப்பட்டது. சொர்ணா டாக்டர் ஜான்சனின் காலைப் பார்த்தாள். அவர் இடுப்பு பெல்ட்டை அவிழ்த்து கணுக்காலுக்கு மேல் கட்டியிருந்தார். பாக்கெட்டில் எப்பொழுதும் ஸ்டாக்கில் இருக்கும் சில விஷ முறிவு மாத்திரைகளையும் எடுத்து விழுங்க ஆரம்பித்தார்.

சொர்ணாவுக்கு மயக்கம் வராத குறை...

''டாக்டர் சார், இப்ப உங்களை நான் எந்த டாக்டர்கிட்ட கூட்டிக்கிட்டு போகணும்...?''- பிரசாத் காரை வேகமாக செலுத்தியபடியே கேட்டான்.

''பெசன்ட்நகர் கலாஷேத்ரா காலனில இருக்கற KMR ஹாஸ்பிட்டலுக்கு போங்க பிரசாத்...''- என்றவரை சொர்ணா கலங்கிய கண்களுடன் பார்த்தபடி இருந்தாள். பார்வையே 'பாம்பு உங்களையும்தான் குறிவைத்திருக்கிறது' என்றது.

''என்னம்மா பாம்பு என்னையும் குறிவெச்சிருக்குன்னு சொல்லாம சொல்றியா?''

''ஆமாம் டாக்டர்... நீங்க கடிபட்டு அனுபவப் பட்டிருக்கறவர். கைவசம் மாத்திரைகள் இருக்கறதால சமாளிச்சுக்கிட்டு இருக்கீங்க. என் நிலையை யோசிச்சு பார்த்தீங்களா?''

''இப்ப எதுவும் பேசாதே. ஐ ஆம் டோட்டலி கன்ஃப்யூஸ்ட் இன் ஃபாக்ட் நடக்கறதெல்லாம் நிஜமா இல்லை கனவான்னு கூட தோணுது...''

பதிலோடு பெருமூச்சு அவரிடம் எகிறியது. சொர்ணா உடம்பு நடுங்கிக் குலுங்கியது.

''பிரசாத் சீக்கிரமா போ... டாக்டருக்கு ஏதாவது ஆயிடப்போகுது...''- படபடத்தாள்.

திருவான்மியூர் ஜனசந்தடியில் பிரசாத் காரை சீறவிட்டுக் கொண்டிருந்தான். சிக்னல் விழுந்த இடத்தில்கூட காரை நிறுத்தாமல் பாயவிட்டான்.

சொர்ணாவின் பார்வை டாக்டர் ஜான்சனின் கால்களின் மேலேயே இருந்தது. ஜான்சனோ பின் சீட்டில் மல்லாந்தபடி கண்களை மூடியிருந்தார்.

கடிபட்ட கால்பாகத்தில் பல்பட்ட தடயங்களே இல்லை. ஆச்சரியம் மெல்ல தலைகாட்டத் தொடங்கியது.

''டாக்டர் டாக்டர்...''

''உம்...''

''கால்ல பல் தடயமே தெரியலியே...''

- அவள் கேட்கவும் ஜான்சனும் நிமிர்ந்தார். குனிந்து காலை சற்று மேலே தூக்கிப் பார்த்தார். அவரையும் ஆச்சரியம் ஆக்கிமிக்கத் தொடங்கியது. மெல்ல முகத்திலும் மாற்றங்கள்.

''ஆமாம். பல்தடயமே இல்லை. பரபரப்புல இதை நான் கவனிக்காமலே பெல்ட்டை போட்டு கட்டியிருக்கேன்...''

''ஒரு தடவைக்கு நாலு தடவை கொத்திச்சே...?''

''உண்மைதான்... ஆனா பல் தடயங்கள் இல்லையே. ஒரு வேளை...'' - அவர் யூகத்தில் நுழையும் போது எதார்த்தமாக சொர்ணாவின் பார்வை வெளியே போனது. மோட்டர் பைக் ஒன்றில் மேனேஜர் ராகவன் காரை ஓவர்டேக் செய்தபடி சீறிக் கொண்டிருந்தான்.

'இன்று மட்டும் மூன்று முறை கண்ணில் பட்டுவிட்டான். ஸ்னேக் பார்க்கில் இருக்க வேண்டியவன் இங்கே எங்கே வந்தான்?'

கேள்வி, தேடி வந்து கொத்திய பாம்பைவிட கூடுதலாக கொத்திற்று.

''பிரசாத்! பைக்ல யார் போறாங்கன்னு பார்த்தியா?''

''கவனிக்கலையே... யார் சொர்ணா?''

''மேனேஜர் ராகவன்...''

''அந்த ஆள் ஸ்னேக் பார்க்ல இல்ல இருந்தான்?''

''சம்திங் ராங் பிரசாத்...''

''ஆமாம்மா சம்திங் ராங்தான். என்னைக் கொத்தின பாம்புக்கும் பல் கிடையாது. பழிவாங்கத் துடிக்கற பாம்புக்கும் பல் இல்லாம போனது எப்படி?''

ஓடும் காருக்குள் இருவரிடமும் கூட்டல் கழித்தல் ஆரம்பமாகியது.

12

தொழிலதிபர் விட்டல்ராவின் பங்களாவுக்குள் டாக்டர் வெங்கட்ரமணாவின் கார் நுழைந்தபோது வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தார் விட்டல்ராவ்.

டாக்டர் கார் வரவும் தயங்கி நின்று வரவேற்றார்.

''வெல்கம் டாக்டர்...''

''தேங்க்யூ சார். வெளியே கிளம்பிட்டீங்க போல இருக்கே?''

''அஃப்கோர்ஸ்... இன்னிக்கு ஆபீஸ்ல போர்டுமீட்டிங். ஷேர்ஹோல்டர்ஸ்க்கு டிவிடெண்ட் போட்றது பற்றி முடிவெடுக்கணும்.''

''ஓ... அப்ப நீங்க புறப்படுங்க. நான் லஷ்மணை பார்த்துட்டுப் புறப்பட்றேன்.''

''அவன் விஷயத்துல ஏதாவது இம்ப்ரூவ்மென்ட் உண்டா டாக்டர்...?''

''என்ன அப்படி கேட்டுட்டீங்க. இன்னும் மூணே மாசம்.. ஹண்ட்ரட்பர்சன்ட் க்யூர் ஆயிடுவான்.''

''ஆயிடுவான் இல்ல டாக்டர். ஆகணும்.. ஆகியே தீரணும்.''

''நீங்க கவலைப்பட வேண்டாம். ஐ வில் டேக் கேர்.''

டாக்டர் ஸ்பஷ்டமாக சொல்ல ஒரு அரை சிரிப்போடு அதைக் கேட்டு விட்டு புறப்பட்டார் விட்டல்ராவ்.

டாக்டரும் பங்களாவினுள் நுழைந்தார்.

விட்டல்ராவின் மனைவி சந்திரகலா ஹாலில் உட்கார்ந்து கொண்டு டிவி பார்த்துக் கொண்டிருந்தாள். டாக்டர் வரவும் எழுந்து நின்று கொண்டு 'வாங்க டாக்டர்'' என்றாள்.

''லஷ்மண் மேல ரூம்லதானே இருக்கான்?''

''ஆமாம். நேத்து ராத்திரியெல்லாம் ஒரே சப்தம். சுத்தமா தூங்கவேயில்லை அவன்.''

''ஸ்லீப்பிங் டேப்ளட்ஸை கொடுக்கறதுக்கென்ன?''

''எங்க கொடுக்கவிட்றான். பாடாபடுத்தறான். பக்கத்திலேயே போக முடியலை. அவன் அப்படி இருக்கறதைப் பார்த்தாலே இவரும் மூட் அவுட் ஆயிட்றார்.''

''டோன்ட் ஒர்ரி... டோன்ட் ஒர்ரி.. வாங்க போய்ப் பார்க்கலாம்...''

- டாக்டர் வெங்கட்ரமணா அவளோடு சேர்ந்து கொண்டு மாடி ஏறினார்.

கருந்தேக்கில் வார்னீஷ் பளபளப்பில் அரண்மனை சுவரில் மட்டுமே பார்க்க முடிந்த ஒரு அறையின் கதவை திறந்து கொண்டு உள்ளே போகவும் பகீரென்றது.

உள்ளே லஷ்மண் நிர்வாண கோலத்தில் இருவரையும் பார்த்து ஒரு மாதிரி சிரித்தான்.

சந்திரகலாவிற்கு கண்ணில் முள் குத்தியதுபோல ஆகிவிட்டது. வெட்கமும் வருத்தமுமாய் டாக்டர் வெங்கட் ரமணாவைப் பார்த்துவிட்டு வெளியேறினாள்.

டாக்டரும் கதவை தாழிட்டுக் கொண்டார்.

அதன்பின் அவள் காதுகளில், அவர் கத்துவதும், அவன் கத்துவதும், அவன் ஓடுவதும், அவர் துரத்துவதுமான சப்தங்களே கேட்டபடி இருந்தன.

ஒரு பத்து நிமிட போராட்டத்திற்குப் பிறகு வெளியே வந்தவரை பரிதாபமாக பார்த்தாள் சந்திரகலா.

''கவலைப்படாதீங்க. நிச்சயம் குணமாயிடுவான்.''

''நீங்களும் மூணு மாசமா இதையேதான் சொல்றீங்க.''

''என்னம்மா பண்ணட்டும்? உங்க பையன் ஒரு டிசார்டர் கேஸ்னு வெளிய தெரியவே கூடாதுன்னு நினைக்கறீங்க. அதை எல்லாம் பத்தி கவலைப்படாம ஹாஸ்பிட்டல்ல சேர்த்தாதானே நான் ஸ்பெஷலிஸ்ட்டுகளை எல்லாம் கூட்டிக்கிட்டு வந்துகாட்டி என்னன்னு பார்க்க முடியும்?''

''இல்ல டாக்டர். இவன் ஒரு பைத்தியம்கறது எக்காரணத்தைக் கொண்டும் யாருக்கும் தெரியக்கூடாது... அப்புறம் இவன் எதிர்காலம், எங்க ஃபேக்டரியோட எதிர் காலம் எல்லாமே பெரிய கேள்விக்குறியாயிடும். தயவுசெய்து ஹாஸ்பிட்டல்ல சேக்கறத பத்தி மட்டும் பேசவே பேசாதீங்க.

எல்லாத்துக்கும் மேல இவனுக்காக நிச்சயிக்கப் பட்டிருக்கற அந்த பொண்ணு உசுரையே விட்டுருவா.''

''சரிம்மா, எத்தனை நாளைக்கு இப்படியே வெச்சிருக்க முடியும்? இந்த ஊர்ல வெச்சு ட்ரீட் பண்ண வேண்டாம், ஃபாரின் கன்ட்ரீஸுக்கு கூட்டிக்கிட்டு போலாமில்லியா?''

''அதுக்கு இவனுக்கு விசா வாங்கணுமே. ஃப்ளைட்ல இவன் சேட்டை பண்ணாம ஒழுங்கா உட்கார்ந்துக்கிட்டு வரணுமே. பத்திரிகைக்காரங்கள்ல பலர் இப்பவே காக்காய்க்கு மூக்குல வேக்கற மாதிரி சுத்திச்சுத்தி வர்றாங்க. ஒரு வேலைக்காரன் இருந்தாலும் அவன் மூலமா லஷ்மண்

பற்றி வெளியே தகவல் போயிடும்னு நான் வேலைக் காரங்களைக்கூட வெச்சுக்கமா இருக்கேன். இப்படி இருக்க எப்படி டாக்டர்...?''

சந்திரகலா கேள்வியோடு கொஞ்சம் கண் கலங்கவும் செய்தாள்.

''இதோ பாருங்கம்மா! அதிர்ச்சியில பாதிக்கப் பட்டிருக்கற உங்க மகனுக்கு வந்திருக்கறது ஒரு வித ஃபோபியா டிசீஸ். இதை காய்ச்சல், குளிரை குணப்படுத்தற மாதிரியெல்லாம் குணப்படுத்த முடியாது.

நீங்க தைரியமா ரிஸ்க் எடுத்துதான் தீரணும்.

சொஸைட்டியைப் பத்தி கவலைப்பட்டா உங்க பையன் குணமாகறது அப்புறம் ரொம்ப கஷ்டமாயிடும்.''

''அப்படின்னா அவர்கிட்ட பேசுங்களேன். ப்ளீஸ்...''

''பேசறேன். ஆனா அவர் என் பேச்சைக் கேட்பாரான்னு சந்தேகமா இருக்கு. உங்க மகனைப் போலவே அவரையும் நான் கொஞ்சம் டிசார்டர் பர்சனாலிட்டியாதான் பாக்கறேன். தான் நினைக்கறபடிதான் எல்லாரும் நடந்துக்கணும், தன் பேச்சைத்தான் எல்லாரும் கேட்கணும்னு அவர் அடமண்டா நடந்துக்கறதும் ஒரு வியாதிதான். ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது போன் பண்ணி என் மகனைப் பத்தி நீங்க வெளிய யார்கிட்டயும் பேசலையேன்னு கேட்கறதையும், பேசிடாதீங்க டாக்டர் நான் அப்புறமா மனுஷனாவே நடந்துக்கமாட்டேன்னு மிரட்டலா பேசறதையும் கேட்டுக்கேட்டு நானே வெறுப்பில்தான் இருக்கேன்.

''இதுல நான் ஃபாரின் ட்ரீட்மென்ட் பற்றிப் பேசினா அவர் அதை எப்படி எடுத்துப்பாரோ.. இந்த விஷயத்துக்கு நீங்கதான் சரி. பக்குவமா அவர் அமைதியா இருக்கற சமயத்துல எடுத்துச் சொல்லிப் பாருங்க. நான் வரேன்.''

டாக்டரின் பதிலில் சந்திரகலாவின் முகம் வெளிறி விட்டது. கடவுளே என்றபடி சோபாவில் விழுந்தாள்.

மேலே அறைக்கதவை கன்னாபின்னாவென்று தட்டிக் கொண்டிருந்தான் லஷ்மண்!

13

எலியட்ஸ் பீச்சில் அவ்வளவாய் கூட்டம் இல்லாத மணல்வெளி.

படகு ஒன்று மண்ணில் புதைந்த நிலையில் நிழல் விடும் இடமாக பார்த்து வாக்மேனும் காதுமாய் உட்கார்ந்தாள் சொர்ணா.

தொலைவில் அவள் ஓட்டி வந்த ஸ்கூட்டி!

எதிரே சமுத்திரம் அலைகளோடு கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தது.

சொர்ணாவிடம் மிக கேஷுவலான ஒரு நிலை.

கையைக் கொடக்கிக் கொண்டும் காலை ஆட்டிக் கொண்டும் மெய் மறந்திருந்தாள்.

பாம்பு பயமெல்லாம் எங்கு போயிற்று என்றே தெரியவில்லை. உல்லாசமாக இருப்பதற்கென்றே பிறந்த மாதிரி தெரிந்தாள்.

காதுக்குள் சங்கர் மகாதேவன் 'சந்தனத் தென்றலை ஜன்னல்கள் தண்டிப்பது நியாயமா' என்ற ஏ.ஆர்.ரஹ்மானின் உதவியோடு அவளிடம் கேட்டுக் கொண்டிருந்தார். அவளுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. பதிலுக்கு ஸ்ஸ்ஸ் என்கிற சப்தம் மட்டும்தான் கேட்டது.

கேஷுவலாக திரும்பிப் பார்த்தாள்.

12 அடி நீளத்துக்கு குறையாத பாம்பு ஒன்று. நிஜமாகவுமே பகீர் என்றது.

'வந்து விட்டாயா? உனக்காகத்தான் காத்திருக்கிறேன்!' என்கிற மாதிரி அதைப் பார்த்தவளிடம் மிரளல் இல்லை. பதட்டம் இல்லை. வெறிப்பு மட்டும் இருந்தது.

அந்த பாம்பு மெல்ல தலையை தாழ்த்தி உடம்பில் கோலம் போட்டபடி அவளை சமீபிக்கப் பார்த்தது. கொஞ்சம் கொஞ்சமாய் இன்னும் கொஞ்சமாய் அதற்கும் அவளுக்கு

மான இடைவெளி குறைந்து அது தன் இரட்டை நாக்கோடு சீறியபோது அதன் கழுத்துக்குப் பின்னால் இருந்து ஒரு கரம் வந்து லாவகமாக அதன் கழுத்தைப் பிடித்தது.

''அப்பாடா...''- சொர்ணா பெருமூச்சுவிட பாம்பை பிடித்த நிலையில் அவள் எதிரில் டாக்டர் ஜான்சன். படகினுள் படுத்துக் கிடந்தவரிடம் நல்ல வேகம். பாம்பைப் பிடித்த வேகத்தில் கையை வளைத்துக் கொண்டு சீறப்பார்க்கும் அதை மளமளவென்று ஒரு கோணிப் பைக்குள் போட்டு மூடி அதன் வாயையும் கட்டினார் டாக்டர் ஜான்சன்.

''தேங்க்யூ டாக்டர். நான் இங்க வந்ததும் நீங்க காத்திருந்ததும் வீண் போகல. பாம்பை இங்க ஏவிவிட்ட பிரகஸ்பதியை நிச்சயமா பிரசாத் பிடிச்சிருப்பான். அதோ...''

சொல்லிக் கொண்டே சொர்ணா கைகாட்ட மேனேஜர் ராகவன் பிரசாத் வசம் மாட்டிக் கொண்டு திருதிருவென்று முழித்துக் கொண்டிருந்தார்.

''இது உன் வேலைன்னு தெரிஞ்சுதான் உன்னை கையும் களவுமா பிடிக்க பிளான் பண்ணினோம். சொர்ணாவையும் தனியா அனுப்பினோம். ஆமா எதுக்காக இந்த குறுக்கு வழியும் விபரீத விளையாட்டும்?''

கையை ஓங்கியபடியே கேட்டவனை முறைத்துப் பார்த்த ராகவன் பட்டென்று தட்டிவிட்டு அங்கிருந்து தப்பி ஓட ஆரம்பித்தார்.

பாவம்...

எதிரிலேயே ஏற்பாட்டின் உச்சகட்டமாக இன்ஸ்பெக்டர் ருத்ரா வந்தபடி இருந்தார்.

அவர் மேலேயே மோதிக் கொண்டது அவருக்கும் வசதியாகப் போய்விட்டது. திரும்பவும் ஓடப் பார்த்த ராகவன் எதிரில் ரிவால்வரை எடுத்துபடியே குத்துப் பார்வை பார்த்தார்.

அதற்குமேல் ராகவன் ஓட முயற்சி செய்யவில்லை. சமர்த்தாக அவருடன் ஸ்டேஷனுக்கு கிளம்பிவிட்டார்.

14

ஸ்டேஷனில் கிளைக் கேள்விகளுக்கே இடமில்லாதபடி வாக்குமூலம் கொடுக்க ஆரம்பித்து விட்டார் ராகவன்.

''என் பேர் ராகவன். லாம்ப்சன் அண்ட் லாம்ப்சன் கம்பெனியோட புரொடக்ஷன் மேனேஜர். எங்க எம்.டி. விட்டல்ராவுக்கும் நான் வலது கை மாதிரி.

சொர்ணாவும், பிரசாத்தும் எங்க கம்பெனில புராஜக்ட் ஒர்க் பண்ணினவங்க. அப்ப எங்க ஜே.எம்.டி. லக்ஷ்மணோட ஏற்பட்ட ஒரு வித காரசாரமான மோதல்ல அவரை தனியா சுடுகாட்டுக்குப் போய்ட்டு வரும்படி செய்தாங்க சொர்ணா.

ஹார்ட் பேஷண்டான அவரும் சுடுகாட்டுக்குப் போனார். ஆனா, அங்க என்ன நடந்ததோ தெரியாது. பயத்துல வாய்ல, மூக்குல ரத்தம் கக்கி மயங்கி விழுந்துட்டார்.

அதன் பிறகு அவர் கண் திறந்தப்போ அவருக்கு சுய நினைவே இல்லை.

இன்னிக்குவரை அவர் ஒரு பைத்தியமாதான் இருக்கார். இது எங்க எம்.டி.ஐ ரொம்பவே பாதிச்சிடிச்சு,

இதுக்கு காரணமான சொர்ணாவையும் இதே போல பைத்தியம் பிடிக்கற நிலைக்கு தள்ளணும். பயம்னா என்னன்னே தெரியாத அவளை பயத்தால நடுங்க வைக்கணும்னு என்கிட்ட சொன்னார்.

அதுக்கு தோதா சொர்ணாவும் பாம்புகளைப் பற்றின ஆராய்ச்சியில இறங்கியிருந்தாங்க. அதுல ஒரு குட்டி நாகத்தை தாய் நாகத்துகிட்ட இருந்து பிரிச்சு எடுத்துகிட்டு போய் பரிசோதனை பண்ணிப் பார்க்கப்போற விஷயம் பாம்புப் பண்ணை ஸ்டீபன்சன் மூலமா எங்களுக்கு தெரியவந்தது.

அந்த குட்டி நாகத்தை கொன்னு, அதன் பிறகு தாய் நாகம் அவளைத் துரத்தி பயமுறுத்தற மாதிரியான ஒரு ஏற்பாட்டுக்கும் நாங்க தயாரானோம்.

திட்டமிட்டபடியே எல்லாம் நடந்தது. கண் கொத்திப் பாம்பா சொர்ணாவை கண்காணிச்சு இவற்றைச் செய்தோம். அதுக்கு தோதா பண்ணைல பாம்பு காணாம போறமாதிரியும் செய்தோம். எல்லாத்துக்கும் ஸ்டீபன்சன் உதவி செய்தார். நாங்க கொடுத்த பணம் அவரை செய்ய வைத்தது.

பாம்பை வெச்சு மிரட்டறது மட்டும்தான் எங்க நோக்கம். அதனால பல் பிடுங்கின பாம்பை பயன்படுத்தினோம்.

இங்க சொர்ணாவை பயமுறுத்தின நாங்க இதே போர்வைல ரெண்டு டி.வி. ரிப்போர்ட்டர்களையும் மிரட்டியே கொன்னோம். எங்க எம்.டி.யோட மகன் பைத்தியமாயிட்டது தெரிஞ்சுக்கிட்டு அவங்க அதை செய்தியாக்க துடிச்சாங்க. எம்.டி. அவங்களைத் தடுத்து அவங்க கேட்ட பணத்தைக் கொடுத்தார்.

அவங்க ரெண்டு பேருமே திருட்டு வீடியோ எடுக்கறது, நடிகர் நடிகைகள் பற்றின ரகசியங்களை செய்தியாக்கறதுங்கற சீப்பான ரிப்போர்ட்டருங்க.

அவங்க அடிக்கடி எங்க எம்.டி.கிட்ட பணம் கேட்டாங்க. இதனால ரொம்ப பாதிக்கப்பட்ட அவர் அவங்களை சாமர்த்தியமா கொல்லச் சொல்லிட்டார்.

கொலை செய்யறதை தொழிலா வெச்சுக்கிட்டிருக்கற சிலர்கிட்ட முதல்ல அந்த பொறுப்பை ஒப்படைக்கறதா இருந்தோம். பிறகு அவங்க நாகர்பட்டி போய் அங்க பாம்பு சித்தரா மாறுதுங்கற கோவில் ரகசியத்தை படமாக்க ஆசைப்பட்டதை தெரிஞ்சிக்கிட்டோம்.

அவங்க அங்க போய் கோவில்ல ஒளிஞ்சிருந்து படமும் எடுத்துட்டு வெளியே வந்தபோது குளத்தங்கரைல பாம்புகளை விட்டு கடிக்கச் செய்து கொன்னோம். அவங்க படம் எடுத்த கேமரா, கேஸட் எல்லாம் குளத்துல மூழ்கி வீணாப் போயிடிச்சு.

அதே சமயம் நாகசித்தர் அவங்களை பழிவாங்கிட்டதா ஊரும் நம்பிடுச்சு. அங்க எப்படி பாம்பு மேல பழி விழுந்ததோ அதே மாதிரி சொர்ணா விஷயத்துலயும் பாம்புமேல பழி விழும்றது எங்க எதிர்பார்ப்பு.

அதுக்கு தோதா அதே நாகர்பட்டில பிடிச்ச ஒரு பன்னிரெண்டு அடி பாம்பை விட்டு கடிக்கவிட்டு கொலை செய்யப்பார்த்தோம்.

ஆனா, எங்க தப்பு செய்தோம்னு தெரியலை, எங்களை சொர்ணாவும் பிரசாத்தும் புரிஞ்சுக்கிட்டு உங்க உதவியோட மடக்கிட்டாங்க.

இதுதான் நடந்த உண்மை.''

- ராகவனின் நீண்ட வாக்குமூலத்தின் இறுதியில் தன்னை கடிக்க வந்தது ஒரு பல் பிடுங்கப்படாத விஷமுள்ள நாகம் என்று தெரியவும் சொர்ணா ஒரு க்ஷணம் உலுங்கிவிட்டாள்.

''சரிம்மா இனி நீங்க உங்க வேலையை பார்க்கலாம். உலகத்துல எவ்வளவோ விதமான சதித்திட்டங்களைப் பார்த்திருக்கேன். ஆனா, இந்த மாதிரி ஒரு சதித்திட்டத்தை இப்பதான் பாக்கறேன்.

பாவம் பாம்புங்க.. அதுங்க பாட்டுக்கு தவளையையும் எலியையும் பிடிச்சு தின்னுக்கிட்டு ஒதுங்கி வாழ்ந்துகிட்டு இருக்குதுங்க. அதுங்களை கொலைகாரங்களா ஆக்கி விளையாடியிருக்காங்களே அதுதான் ரொம்ப வருத்தமா இருக்கு...''

- இன்ஸ்பெக்டர் முழ நீளத்துக்கு வருத்தப்பட்டார். அப்படியே டாக்டர் ஜான்சன் பக்கம் திரும்பி ''டாக்டர் சார்! அந்த பாம்பு பாவம். எங்கயாவது காட்டுப்பக்கம் போய் விட்ருங்க.'' என்றார்.

''எதுக்குங்க என் பண்ணைல அதை நல்லவிதமா பராமரிச்சுட்டுப்போறேன். அதுதானே என் வேலையே...?'' என்ற ஜான்சன்,

''முதல்ல அந்த ஸ்டீபன்சனை கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளணும்.'' என்று உக்ரத்தோடு பேசி முடித்தார்.

இன்ஸ்பெக்டர் தொழிலதிபர் விட்டல்ராவை வளைத்துப் பிடிக்க வேண்டி புறப்பட, சொர்ணாவும் பிரசாத்தும்கூட டாக்டர் ஜான்சனோடு பண்ணையை நோக்கி கிளம்பினார்கள்.

காரை சொர்ணாவே டிரைவ் செய்தாள்.

'ஸ்ஸ்ஸ்...!' பக்கத்தில் அமர்ந்திருந்த பிரசாத் பாம்பின் மூச்சுக் குரலைக் கொடுத்து அவளை பயமுறுத்தப் பார்த்தான்.

பதிலுக்கு 'ஸ்ஸ்ஸ்' என்றபடி அவனைத் திரும்பிப் பார்த்தாள் அவள்.

''பரவால்லியே! பயப்படலியே...!''

''நான் எதுக்கு பயப்படப்போறேன். அழகா என் ரிசர்ச்சை முடிச்சுடுவேன். ஆமா எங்க அந்த நாகர்பட்டி பாம்பு...?'' கேட்டாள்.

''அது அந்த சாக்குப் பைல இருக்கு.'' என்றபடி டாக்டர் திரும்பி ஒரு பார்வை பார்த்தார். சாக்குப்பை இருக்கிறேன் என்பது போல தெரிந்தது.

காரும் பாம்புப் பண்ணைக்குள் நுழைந்தது. ஸ்டீபன்சன் டாக்டர் வந்து துரத்துவதற்கு இடமே கொடுக்காதபடி 'சாரி டாக்டர்' என்று ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு ஓடிவிட்டிருந்தான்.

''ஸ்கௌண்ட்ரல தப்பிச்சுட்டான்.''- என்று உறுமிய டாக்டர் சாக்குப்பையோடு நேராக காணாமல் போன தாய் நாகம் இருந்த அந்த கண்ணாடி அறையை நோக்கித்தான் முதலில் சென்றார்.

கதவைத் திறந்து லாவகமாக சாக்குக்குள் இருந்த நாகத்தையும் உள்ளே விட்டார்.

மிரட்டலான நாகம்.

பன்னிரெண்டு அடி நீளம். வாழைத்தண்டு பருமனில் உடம்பு. காக்காய்ப் பொன் போல் மினுமினுப்பு. கண்களில் ஒருவித வெறி...

''என் ஆயுள்ள இவ்வளவு நீளமான ஒரு நாகத்தை பார்த்தது இல்ல.'' என்றபடி திரும்பி வந்தார். சொர்ணாவும் பிரசாத்தும் கூட வாயைப் பிளந்து விட்டிருந்தனர்.

''பிரசாத்! கடிச்சிருந்தா என்ன ஆகியிருக்கும்?''

''ஒண்ணும் ஆகியிருக்காது. அந்த பாம்புதான் செத்துருக்கும். நீ பாம்புக்கெல்லாம் பெரிய பாம்பாச்சே.''

அவன் கேலி செய்தான். பின் மூவரும் பண்ணை அறையை நோக்கி நடந்தார்கள். ஜான்சன் உடைமாற்ற உள்ளே செல்ல இருவரும் வெளியே வந்தார்கள்.

பண்ணையிலும் யாருமில்லை.

''சொர்ணா உன்னோட அனுபவம் ரொம்ப வித்தியாசமான அனுபவம். பாம்புகளுக்கு பழிவாங்கத் தெரியாது. அது ரொம்ப சாதுன்னு எழுது...''

அவர்களுக்கு பின்னால் இருந்து ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தபோது தாடியும் மீசையுமான ஒரு பெரியவர்.

''நீங்க யார்...? இங்க எப்படி?''

''நான் ஒரு பரதேசி. பண்ணைக்கு வந்த இடத்துல உன்னைப்பத்தி கேள்விபட்டேன். அதான் என் அபிப்ராயத்தை சொன்னேன்.

பாம்புகளைப் பத்தின மூடநம்பிக்கைக்கும் ஒரு அளவில்லாம போயிடிச்சு. அதையெல்லாம் உன் ஆராய்ச்சிக் கட்டுரைல நீ கண்டிக்கணும். பாம்புகளைப் பார்த்தா அடிச்சுக் கொல்றதும், பயந்து நடுங்கறதும் நீங்கணும். அதுகளும் ஒரு உயிரினம்னு நினைச்சு அன்பு செலுத்தணும். என்ன?''- அதட்டலாக அவர் கேட்டவிதம் இருவரையும் அமட்டியது.

''சரிம்மா நான் வரேன். இதே போல தைரியத்தோட எப்பவும் இரு. பொம்பளைன்னா பயப்படறவ கிடையாது. அவ இனிமையான தென்றல் காற்று மாதிரி மட்டுமில்லை. அபாயத் தென்றலாவும் இருக்க அவளுக்குத் தெரியணும்னு நீ நிரூபிச்சிட்டே. நல்லா இரும்மா. நான் வரேன்.''

அவர் சொல்லிக்கொண்டே பண்ணையைவிட்டு வெளியேற ஆரம்பித்தார்.

''யார்கூட பேசிக்கிட்டிருக்கீங்க?'' அவரையே பார்த்துக் கொண்டு நின்றுவிட்ட சொர்ணாவையும் பிரசாத்தையும் டாக்டர் ஜான்சனின் குரல் கலைத்துத் திருப்பியது.

திரும்பியவர்கள் ''யார்னு தெரியல. ஒரு பரதேசி... ஆனா, ரொம்ப அர்த்தபூர்வமா பேசிட்டு போறாரு'' என்றனர்.

அப்பொழுது தண்ணீர் குடத்தோடு வந்த பண்ணை வேலைக்காரி எலிஸபெத்திடம் டாக்டர் ஜான்சன் புதிய நாகம் பற்றிச் சொல்லி மறக்காமல் அதற்கும் தண்ணீர் வைக்கச் சொல்ல எலிஸபெத்தும் ஆவலாக அந்த கண்ணாடிக் கூண்டை நோக்கி நடந்தாள்.

நெருங்கிச் சென்று பார்த்தவளுக்கு உள்ளே பாம்பு இல்லாதது ஆச்சரியத்தை தந்தது. வெளியே கதவில் பூட்டும் தொங்கிக் கொண்டிருந்தது.

''டாக்டரய்யா...! எங்கய்ய பாம்பு - கூண்டுல இல்லீங்களே...'' என்றபடி திரும்பி வந்தாள். அதிர்ச்சியோடு மூவரும் ஓடிப்போய் பார்த்தார்கள்.

உள்ளே ஒரு சட்டை மட்டும்தான் கிடந்தது. பாம்பைக் காணவில்லை!